T. 3656

# சதபத பிராமணம்.

யஜுர்வேத சதபத கதைகளும்,
மொழிகளும்

மிழ் சத்தியார்த்த பிரகாசம், உபநிஷதக் கதைகள்,
யோகாசனம், சீன வேதம், திரிமூர்த்தி உண்மை,
சிரத்தானந்தர் சரித்திரம், மாஜினி சரித்திரம்,
கடோப நிஷதம் முதலிய நூல்களின்
ஆசிரியர்

எம். ஆர். ஜம்புநாதன்

எழுதியது

ஜம்புநாதன் புஸ்தக சாலை,
சென்னை.

காபிரைட்] [விலை ஒன்பது அணா.

# பொருளடக்கம்


| எண். | பெயர். | பக்கம். |
| --- | --- | --- |
| I | ஹரிசனங்களே | v |
| II | முகவுரை | vii |
| 1. | மிருகமான கதை | 1 |
| 2. | மனம்-மொழி சண்டை | 1 |
| 3. | காயத்திரி மகிமை | 2 |
| 4. | கண்கள் | 2 |
| 5. | சிரஞ்சீவி கதை | 3 |
| 6. | என் மௌன மொழி | 3 |
| 7. | தோத்திர கோட்டை | 3 |
| 8. | அக்னி ஜயமேன் | 4 |
| 9. | பிரம்மசாரி ... | 4 |
| 10. | உபதேசம் ... | 5 |
| 11. | வேதம் படிப்பதேன் | 7 |
| 12. | வேதங்கள் ... | 8 |
| 13. | எவன் உத்தமன் ... | 9 |
| 14. | சத்திய அனல் ... | 10 |
| 15. | அக்னியும் மனிதனும் ... | 10 |
| 16. | பாதுகாப்பாக்னி ... | 10 |
| 17. | போர்த் துணைவன் | 11 |
| 18. | அக்னி அறிவு ... | 11 |
| 19. | கொடும் அக்னி ... | 13 |
| 20. | அக்னி தேகம் ... | 14 |
| 21. | அக்னி ஹோத்திரம் | 14 |
| 22. | அக்னி ஹோத்திர ரகசியம் ... | 15 |
| 23. | நாலு அனல் ... | 17 |
| 24. | பெண் உரிமை ... | 18 |
| 25. | பெண்கள் சுபாவம் | 18 |
| 26. | ஸ்ரீ கதை ... | 19 |

| எண். | பெயர். | பக்கம். |
| --- | --- | --- |
| 27. | வாக்கு ரகசியம் ... | 20 |
| 28. | அர்த்தநாரி ... | 21 |
| 29. | பஞ்சசீவர்கள் இரகசியம் ... | 22 |
| 30. | பிராணனின் பெருமை | 22 |
| 31. | பிராண இரகசியம் | 23 |
| 32. | பிரம்ம வடிவம் ... | 23 |
| 33. | உணவு ... | 24 |
| 34. | ஐந்து பாதுகாப்புகள் | 25 |
| 35. | பிரஜாபதி சரிதை | 26 |
| 36. | பிரஜாபதி செயல் | 28 |
| 37. | சத்துரு ... | 28 |
| 38. | சத்துரு சம்ஹாரம் | 29 |
| 39. | அஸ்வமேத யாகம் | 29 |
| 40. | அஸ்வமேத இரகசியம் ... | 30 |
| 41. | பருவங்களின் உண்மை ... | 32 |
| 42. | வருஷ யக்ஞம் ... | 33 |
| 43. | தனுனபதன் ... | 34 |
| 44. | ருத்திரர்கள் ... | 35 |
| 45. | சிருஷ்டி ... | 37 |
| 46. | சிருட்டி கிரமம் ... | 38 |
| 47. | வாயுவின் உண்மை | 40 |
| 48. | பஞ்ச யக்ஞம் ... | 41 |
| 49. | சந்திர ரகசியம் ... | 41 |
| 50. | சந்தஸு எங்கே ... | 42 |
| 51. | பொன்மயம் ... | 42 |
| 52. | பிராணன் உணவு பலம் ... | 42 |

| எண். | பெயர். | பக்கம். |
|---|---|---|
| 53. | தங்க சரிதை ... | 43 |
| 54. | குமரன் கதை ... | 43 |
| 55. | மேன்மை வழி ... | 44 |
| 56. | மருத்துக்கள் ... | 45 |
| 57. | சாமன் ... | 46 |
| 58. | மகத்சாமன் ... | 48 |
| 59. | விஷ்ணு ... | 48 |
| 60. | யக்ஞ ஜயமேன் ... | 48 |
| 61. | நமக்கு என் யச்ஞும் | 49 |
| 62. | சலத்தின் கதை ... | 49 |
| 63. | மாமிச ரகசியம் ... | 50 |
| 64. | புகழ்வழி ... | 50 |
| 65. | அரசன் கதை ... | 51 |
| 66. | மரண தேவதை ... | 52 |
| 67. | மரண ஜயம் ... | 53 |
| 68. | காயத்திரி யார் ... | 53 |
| 69. | அழியாத தேவர் ... | 54 |
| 70. | அமுதமடைந்த வழி | 54 |

| எண். | பெயர். | பக்கம். |
|---|---|---|
| 71. | இந்திரன் விருப்பம் | 55 |
| 72. | ஜயமெப்படி ... | 55 |
| 73. | தேவ யுக்தி ... | 56 |
| 74. | மரண வடிவம் ... | 57 |
| 75. | சந்தவின் ரகசியம் | 57 |
| 76. | சந்தஸ் உணவு ... | 59 |
| 77. | சலத்தின் ரகசியம் | 60 |
| 78. | தேவ ஜயம் ... | 61 |
| 79. | மனித யக்ஞும் ... | 61 |
| 80. | நூறு வயது ... | 63 |
| 81. | வருஷ அக்னி ... | 64 |
| 82. | சுவயம்பூ ... | 64 |
| 83. | பிரஜாபதி கதை ... | 64 |
| 84. | சூட்சம நாமங்கள் | 65 |
| 85. | அமுத மொழிகள் | 72 |
| 86. | அசுவினி கதை ... | 88 |
| 87. | ஆதி வருணன் ... | 89 |
| 88. | புருஷமேதம் ... | 90 |

# ஹரிஜன பாதங்களில்

ஹரிஜனங்களே! உங்களுக்கு நமஸ்காரம். நாங்கள் தலைமுறை தலைமுறையாய் செய்த பாவங்களுக்கு பச்சாதாபப்பட்டு பிராயஸ்சித்தம் செய்துகொள்ள விரும்புகிறோம் என வாக்குறுதி செய்து இவ்வேத நூலை உங்கள் பாத கமலங்களில் சமர்ப்பிக்கிறேன். நீங்கள் தான் இவ்வேதங்களை படித்து பாரதநாடு மாத்திரமில்லை பூலோக முழுவதும் பிரசாரம்செய்து மறுபடியும் தர்ம ஸ்தாபனம் செய்ய வேண்டும். ஏனெனில் உலகம் கெட்டுவிட்டால் அதை அழித்து புனர்சன்மமாக சந்தர்ப்பமளிப்பவன் ருத்திரனாகும் என்பது வேதவாக்கு. வேதத்தில் சொல்லிய ருத்திரன் கோபமுள்ளவன். கொடுமையாய் பேசுவான். சர்மம் தரிப்பான். கையிலே எலும்பும் கொம்புமுண்டு. கிராமத்திற்கு வெளியிலிருப்பான். தண்ணீர் தண்ணீர் எனக் கதறுவான். தந்தையை கொல்லுவான். மகனை அடிப்பான். தாழ்ந்த கணக்கூட்டங்களே அவன் சிநேகிதர்கள். அவன் ஆட்களான மருத்துக்களை சண்டாளன் என்பார்கள். மலையிலே வசிப்பான். மடுவிலே ஓடுவான். அம்புடன் வில்லை வளைப்பான். அஞ்சாநெஞ்சு படைத்தவன். அலறுவான், கதறுவான், அழுவான். இவன் குணத்தையெல்லாம் நோக்கி இவன் சகாக்களையும் கவனித்தால் எல்லாம் நீங்களாய்த்தானிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. ஆதலால் ருத்திர ஜனங்களே!

சகர மக்கட்களைப்போல் உலகத்திலுள்ள இந்துக்கள் அழிந்து, ஒரு டஜன் சங்கராச்சாரி முதலிய பேர்வழிகளால் இந்தியாவிலுள்ள இந்துக்களிலே மூன்றில் ஒரு பங்கு மறைந்துவிட்டோம். இன்னும் அழிந்து வருகிறோம். கல், கட்டை, காஷாயம், கோபுரம், இருட்டறை, பரிசம், உணவு முதலியவைகளில் ஊறும் போலி தர்மத்தை தொலைத்து, தேகம், இரத்தம், சித்தம், செயல், வாழ்க்கை, இந்நாடு, பூலோக முழுவதும் புனிதவேதம் விரிந்து தலையோங்க, நீங்களே அதற்கேற்ற கங்கையை கொண்டுவர முடியுமென இதை நான் உங்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

எம். ஆர். ஜம்புநாதன்.

# முகவுரை

என் தாய் பசுவைக் கொலைசெய்யும் யாகம் ஒன்றுக்குச் சென்றிருந்தார். மிருக பலியைக் கண்டு சகிக்காமல் என்னிடம் வந்து இப்படி யக்ஞம்செய்ய வேதத்தில் சொல்லியுள்ளதோ என என்னைக் கேட்டாள். உடனே பிராமணர் எனப்படுபவர்கள் சதபதபிராமணத்தை ஆதாரமாகக்கொண்டு கொலை செய்கிறார்கள். மிருக பலி என்பது சுவாசமாகும். ஏனெனில் சுவாசமிருக்கும்வரை உங்கள் பசுக்களில் வேறு யாருக்கும் அதிகாரமில்லையாதலால் பசுக்கள் எல்லாம் உங்களிடம் நிரந்தரமாய் பலிபோல் கைவசமிருக்கும். (11. 8. 3. 4.) என சதபத மொழியால் உண்மை யக்ஞத்தைக் கூறி, அந்நூலின் சாரத்தை கதை கனிந்த மொழிகளாலுரைத்தேன். அதுவே இப்புஸ்தகம். எனது அன்னை வினவிய நான் அளித்த பதில்களே இம்முகவுரையாகும்.

## மூலசரிதை.

சதபத பிராமணத்தின் மூல சரிதையைச் சொல்லவும்? இதன் மூலம் வேதமாகும். வேதமே பூமண்டலத்திலே அனைத்திற்கும் அடிப்படை. (மனு) ருக்கு யஜுர் ஸாமன் அதர்வம் என அவை நான்கு. வேதங்களில் சம்ஹிதை பிராமணம் என இரண்டு பிரிவுகளுண்டு. சம்ஹிதை, என்பது மூலமந்திரமாகும். அம்மந்திரங்களுக்கு உரைபோலுள்ளதே பிரமாணமாகும். பிராமணம் உரைபோலாவதால், அது பிற்காலத்தில் எழுதப்பட்டி

ருக்கும் என எண்ணி ரிஷி தயானந்தர் அதை வேதமென எண்ணலாகாதென்கிறார். அந்த பிராமணங்களில் ஒன்றே இந்நூல். வேதங்களுக்குப் பல சாகைகளுண்டு. வேதங்களின் பரிபூர்ண சூட்சம் நிறைந்த நூலையே சாகை என்பார்கள். இராமாயணத்திற்கு வால்மீகர், கம்பர், துளசிதாஸர் எப்படி சாகைகளாகுமோ அப்படியே வேதங்களுக்கு பல சாகைகளுண்டு. எல்லா வேதங்களுக்கும் சுமார் ஆயிரம் சாகைகள் என்பார்கள். யஜுர் வேதத்திற்கு 101 சாகைளுண்டு. புராணிகர்களின் சனாதனபுத்தி சூன்யத்தால் சுமார் 95 சாகை நூல்களும் அனுஷ்டிப்பவர்களும் அழிந்துவிட்டார்கள். நிகழும் சாகைகளாவன் :— தைத்திரியம், காடகம், தைத்திராயணி முதலியவைகள். சுக்கில, கிருஷ்ண எனப்படும் இரண்டு யஜுர்வேத பிரிவுகளிலே சுக்கிலத்திற்கு இரண்டு சாகைகளான மாத்யானதினி கண்வர் எனப்படும் நூல்களின் சாரமே நான் சொல்லும் சதபதபிரதமணம். மூல கிரந்தத்திலே இதற்கு 14 காண்டங்களுண்டு. இந்நூலில் அக்னிஹோத்திரம், அசுவமேதயாகம் புருஷமேதயாகம் முதலியவைகள் எல்லாம் சொல்லப்பட்டுள்ளது. இந் நூலினுள்ள மொழிகள் மர்மமாகவேயிருக்கும். ஏனெனில் தேவர்களுக்கு மர்மமாய் மொழியவே பிரியமதிகமாம். தேவர்கள் ஏன் மர்மமாய் மோழியவேண்டும்? நான் தேவர்கள் இவ்வுண்மையைச் சொல்லும் கதையை சொல்லுகிறேன். ஒரு சமயம் மோர்ழியே நீ தர்ன் சின்னவள்என சுவாமி சோன்னவுடன் அவள்கோபித்து குறைப் பிரசவமாகி கீழே விழுந்தாள் அதைதேவர்கள் இலைகளில் ஏந்தினார்கள். அவைதான் இரண்டு உதடுகள். மனத்தி

ளுள்ளதை பரிபூர்ணமாய் சொல்லும் சக்திமொழிக்கு சூன்யமாகையினுல் தேவர்கள் மர்மாய் இக்கதை சொல்லி முடித்தார்கள்.

ஸ்திரீகள் வேதத்தை படிக்கலாமா? ஒவ்வொருமனிதனும் பாதி ஆணும் பாதி பெண்ணுமாகும். (பக்கம் 21.) இதனுல் படித்தால் யாரும் படிக்கவேண்டும். இல்லையேல் ஒருவருக்கும் படிக்கயோக்கியதையில்லை.

நீ சொன்ன சில கதைகளிலே ஸ்திரீகளை இலேசாய் தேவர்கள் கருதியதுபோல் தோன்றுகிறதே? (18-வது பக்கம். க 25.) இக் கதையையும் வேறு சில கதைகளையும் கவனமாக்கினுல் இவர் கருதிய ஸ்திரீகள் வாக்கு மனம் எனப்படும் இருவர்கள் இரண்டு சாதி (ஆண்-பெண்) யினுமுண்டு. எவனொருவன் அதிகமாய் பேசவும் நினைக்கவும் பயிற்சி செய்து கொள்ளுகிருனே அவனையே அவர்கள் ஸ்திரீகள் என நினைத்து இலேசாய் மொழிந்தார்கள். உதாரணமொன்று, சங்கரர் ராமனுஜர் பிறந்த நாட்டிலே நூற்றுக் கணக்கான வருடங்கள் முன் மார்கஸ் போலோ என்பவன் யாத்திரை செய்தபொழுது வாக்கு மனம் நிறைந்த தென்னுட்டிலே மாப்பிள்ளைகளைத் தவிர மற்றவர்கள் எல்லாம் பெண்பிள்ளைகள்போலவே தோன்றுகிருர்கள் என்ருன். இப்பொழுதும் சங்கீதம் நடனம் பெண் வேஷம் வக்கீல் விவாதம் நிறைந்த நமது படித்தவர்கள் எனப்படுவர்கள் எல்லாம் ஸ்திரீகள் எனவே தாராளமாய் ஒருவன் சொன்னுல் அதை மறுக்க என்னிடம் ஆதாரமில்லை. வீரமன்னினியிலுள்ள ஞானம் சக்தியற்ற வனிதையின் கற்பைப் போலாகும். அவளை நிந்திக்காமல் என்ன செய்வது. தேவர்கள் வாக்கு மனம்

நிறைந்த இப் புருஷர்போனுள்ளவரையே இலேசாக மொழிந்தார்கள்.

அக் காலத்திலே ஸ்திரீகளின் நிலையென்ன? ஸ்திரீகளுக்கும் எங்கும் உரிமையுண்டு. (கதை 24) அவர்கள் நிலையைப்பற்றி இன்னமொரு கதையும் சொல்லுகிறேன். (ச. பி. இரண்டாவது காண்டம், ஐந்தாவது பிராமணம்) "யக்ஞசாலையில் ஸ்திரீகளை அழைக்குங்கால் நீ எவனுடன் சேர்ந்தாய் எனக் கேட்பது வழக்கம். அப்படி செய்வது வருண குற்றமாகும். அப்படிச் செய்திருந்தால் மனத்தினுல் யக்ஞத்துடன் சேராதே. நீ பாபத்தை சொல்லிவிட்டால் அது குறைவாகிவிடும். உண்மையை சொல்ல வில்லையேல் குடும்பத்திற்கு ஹானியாகும்." இதனுல், கெட்டவள் கெட்டவளே என நிரந்தர கொடுமை அப்பொழுது இல்லை என அறிகிறோம்.

## சாதி சண்டாளன்.

அக்காலத்திலே சாதி வேற்றுமையும் தீண்டாமையுமுண்டோ? இல்லவே இல்லை. பிரஜாபதி பிராமணனை சிருட்டித்து அவர்களால் ஒன்றும் முடியவில்லை என க்ஷத்திரியன் முதலியவர்களைச் செய்தான். பிறகு எல்லாம் சாத்தியமாயிற்று. இதனுல் மற்றவர்களால் பிராமணர்கள் உயிருடனுவதால் அவர்களைவிட அவர்கள் உயர்ந்தவர் எனவே சொல்லவேண்டு மன்னியில் தாழ்ந்தவர் என சொல்லுவதற்கில்லை. பரமன் ஒவ்வொரு பொருளிலும் தன்னை ஆகுதிசெய்து வியாபகமானதால் (பக்கம் 63) சாதி குறைந்தவன் என ஒருவனைச் சொல்வது அங்குள்ள கடவுள் நிந்தனையாகும். யக்ஞம் செய்யுங்காலத்

தில் நான்கு வர்ணுதிகளை அழைப்பார்கள். ஏற்றத் தாழ் விருந்தால் ஏன் அழைக்கவேண்டும்? இந்த மொழிகளைப் பற்றி ஜர்மன் அறிஞர் ஒருவர் சொல்வதாவது:— The entire passage is of great importance as it shows that the Sudras were then admitted in the Yagna.

பிராமணன் ராஜசூய யாகத்திலே க்ஷத்திரியனுக்கு கீழாகவே உட்காரவேண்டும். சதபத பிராமணத்திலுள்ள பிரகதாரண்ணிய உபநிஷத்தில் (உபநிஷத் கதைகளைப் படிக்கவும்) அஜாதசத்துருவான அரசனிடமே பிராமணர்கள் உபநிஷத் உண்மையை அறிந்ததாக அறிகிருேம். சனகருக்கு பிராமணபட்டம் யக்ஞவல்கியர் அளித்ததாக இந்நூலினுல் அறிகிருேம். அக்காலத்தில் பிராமணர்களாக இருந்தவர்கள் தங்களை பிராமணர்கள் என அழைத்துக் கொள்ளவும் அஞ்சினுர்கள். அதற்காகவே யக்ஞகாலத்தில் பிராமணர்களான நாங்கள் வேதகோஷம் செய்கிருேம் எனச் சொல்லாமல், நாங்கள் அழைக்கப்பட்டோம், யக்ஞம் செய்தவர்களாம். அதனுல் இப்பணியை செய்கிருேம் என்ருர்கள். (5, 2) ஆனுல் அவர்களைவிட ஒழுக்கம் நிறைந்தவர்களை நாம் பார்ப்பது அரிது. அவர்களின் ஒழுக்கங்களை கண்டு தேவர்களும் மனிதர்களுடன் சேர்ந்து புசித்தார்கள். ஆனுல் நாளடைவில் ஒழுக்கம் குன்றி எனக்கு இதுவேணும் அதுவேணும் என சனங்கள் சொல்லவே பிச்சை எடுப்பவர்களை விரும்பாமல் தேவர்கள் பிற்காலத்தில் புவி நீங்கினுர்கள் என ஆதி சங்கரர் கூறுகிருர். இதை எண்ணித்தான் தர்மபுத்திரர் ஒரு சமயம் பிராமணன் குறைந்துவிட்டான். போலி சனங்களே

இப்பொழுது அதிகமெனச் சொன்னர். ஆதலால் சதபத பிராமண கால ஜாதி தர்மபுத்திரர் காலத்திலேயே கெட்டு விட்டதென்றல் இப்பொழுதிருக்கும் நிலையைக் கேட்பானேன்.

. நீ சொன்ன கதைகளிலிருந்தும் சூட்சம நாமங்களிலிருந்தும் பதினயிர புராண மூட்டைகள் கட்டப்பட்டதென்றயே? சில மூட்டைகளை நீ அவிழ்க்கவும். விஷ்ணுவின் மத்சியாவதார கதையை நீங்களறியலாம். இப்பொழுது சிருஷ்டி கதை (45. ப. 37-யை ஞாபகம் செய்து கொள்ளவும்) இக் கதையின் ரகசியத்தை நீலகண்டர் சொல்லுவதாவது :—மனு என்பது அகங்காரம். ஜாடி என்பது நமது தேகம். கயிறு சன்மாந்திர வாசனை இச் சூட்சமான கதையே விஷ்ணு அவதார காரணமாகவும் பைபில் புராண நோவா வென்னும் கற்பனைகளுக்கு காரணம். வராகாவதாரத்தை அடியிற்கண்ட இக்கதையினின்று கற்பித்திருக்கவேண்டும். (ச. பி. 14. 1.) ஆதியிலே பூமி சிறியதாகவே இருந்தது. எமுஷா என்னும் பன்றி அதை தூக்கிற்று. நெய் உணவு சாரம், நெய்யான கொழுப்பின் சாரம், பன்றி எனவோ பிரஜாபதி எனவோ சொல்லப்படும். இந்த இரு உரையுள்ள பதத்தைக் கொண்டு வராகாவதாரம் கற்பிக்கப்பட்டது. இனி கூர்மாவதாரம். அகரோத் என்றல் செய்வது என்னும் வடமொழி. அந்த மொழியினின்றே கூர்மம் என்றயிற்று. கூர்மம் என்றல் ஆமை எனவும் ஒரு உரையுண்டு. இந்த சந்தேக மொழியால் விஷ்ணுவை ஆமையாக்கினர்கள். விஷ்ணுவின் வாமனவதாரம் இந்த சதபதபிராமண கதையின் (12. 5) திரிபு. தேவாசுர சண்டையிலே உலகம்

எங்களுக்கு என அசுரர்கள் மேற்கு கிழக்காய் கவர்ந்தார்கள். எங்களுக்கும் பங்கு வேண்டுமென விஷ்ணு என்னும் யக்ஞத்தை முன்னால் வைத்து தேவர்கள் கிழக்கிலிருந்து மேற்கு சென்றார்கள். வாமன்போலுள்ள விஷ்ணுவைக் கண்டு இவன் வியாபிக்கும் இடத்தை எடுத்துக் கொள்ளவும் எனவே தேவர்கள் அப்படியே எடுத்து பூவுலகை கவர்ந்தார்கள்.

இந்த விஷ்ணுவைப்பற்றி பாஸ்கரர் சொல்லுவதாவது:—(12. 19) விஷ்ணு சூரியனாகும். எப்படி? பூமியிலே, வானத்திலே, ஆகாசத்திலே சூரியனுக்கு மூன்று பாதங்களுண்டு. அதாவது அவன் இந்த மூன்று இடங்களில் பிரகாசிக்கிறான். அவன் அக்கினியாகி பூமியைக் கவர்வான். மின்னலாகி ஆகாசம் மலர்வான். சூரியனாகி வானமளப்பான். காலை பகல் மாலை என்னும் மூன்று பாதங்களால் விஷ்ணுவான சூரியன் உலகத்தை அளக்கிறான் என ஔர்ணவாபரிஷி கூறுகிறார்.

விஷ்ணுவை ஆதித்தியன் எனச் சொல்ல மூலநூலிலே இன்னமொரு கதையுமுண்டு. அந்தக் கதையாதது :—

பெரிய யாகமொன்று நடந்தது. அக்னி இந்திரன் சோமன், விஷ்ணு மகம் முதலியவர்களிருந்தார்கள். நம்மில் அதிக கஷ்டப்படுபவனுக்கே யக்ஞபலத்தை அளிப்போம் என எண்ணினார்கள். உடனே விஷ்ணு அடையவே அவனுக்கு அது அளிக்கப்பட்டது. விஷ்ணு பதவியை யடைந்தவுடன் கர்வமாகி வில் ஏந்தி சென்று அது வளைந்த பாகத்தில் தானும் சாய்ந்து நின்றான். அவனைப்பற்ற சக்தியற்றவர்களாய் அவனைச் சுற்றி மற்ற

தேவர்கள் சூழ்ந்து உட்கார்ந்திருந்தார்கள். அங்கு எறும்பு அதிகமாகி அந்த வில் கயிற்றை கடித்தவுடன் அது அறுந்து விஷ்ணுவின் கழுத்தை துண்டித்துவிட்டது. அது கீழே விழுந்தது. அதுதான் ஆதித்யன் எனப்படும். (ச. ப. 14. 1. 1. 1) இவைதான் சூரியன் விஷ்ணுவாக செய்யப்பட்ட ஜெகஜ்ஜாலப் புரட்டுக் கதைகளுக்குக் காரணம். பிரம்மா, குமரனைப்பற்றியும் சொல்லுகிறேன். (பக்கம் 43. க. 54) அக்கினியின் அருமையான குணங்களால் குமாரக்கடவுள் கந்தபுராணத்தில் சிருஷ்டிக்கப்பட்டார். பிரம்மா தன் மகளை விவாகம் செய்துகொண்டார் என்னும் போக்கிரி கதையின் சூட்சமம் யக்ஞம் எனப்படும் செயல் உஷை என்னும் வானத்தோடு சேர்வதேயாகும். (கதை. 64)

அசுவினியைப்பற்றி ஒரு அசம்பாவித கதையுண்டு. (86) இந்த அசுவினயப்பற்றி அறிஞர் ஒருவர் கூறுவதாவது:—சின்ன இருளும் சின்னஒளியும் கலந்த விடியற்கால நிலையே அசுவினிகுமாரர்கள் என்பார்கள். நரகம் இவ்வுலகமென 87-வது கதையாலறிவோம். திதி அதிதிகள்யார், விசுவாமித்திரன் பாரத்துவாஜன் வசிஷ்டர் முதலியவர்களின் சூட்சமங்களை இக்கதைகளிலிருந்து அறிந்துகொள்ளலாம். புராணிக சிவனை இப்புஸ்தகத்தில் காணவில்லை. வேதம் சொல்லிய ருத்திரனுக்கும் அன்பு எனப்படும் நவீன சிவனுக்கும் இமயமலைக்கும் இருட்டறைக்குமுள்ள சம்பந்தத்தையே காண்கிறோம்.

## தேவரகசியம்

புராணத்தையெல்லாம் நீ தூஷிக்கிறாய். ஆனால் நீ சொன்ன தேவர்கள் சதாகாலமும் சண்டைசெய்கிறார்களே? ஏன் ?

சாந்த காலத்தில் மனிதன் வளர்வதில்லை. சும்மாயிருந்தால் வீரம் சிதையும். (ஷில்லர்) நமக்குரிய நிலையைப் பெறவேண்டுமானால் எளிமையான பேடி சுபாவத்தைவிட்டு நம்மைச் சுற்றியுள்ள விபத்துக்களை அறிந்து பிடிவாதமாய் போரிலே சாயவேண்டும். (வான், பெர்ன் ஹார்டி) ஏனெனில் யுத்தமென்பது ஒரு சாபமென எண்ணவேண்டாம். கல்வியும் வன்மையையும் உண்டாக்கும் பொக்கிஷமாகும். (பெர்ன் ஹார்டி) ஆனால் சாந்தினம் என கனவு காண்பவர்கள் காணட்டும். யுத்தத்தையே நாம் சேர்ந்து கோஷஞ்செய்து ஜயத்திற்கு செல்லுவோம் (கடே) என்னும் எண்ணம் வாழ்க்கையில் விளங்கும் சட்டமாகும். போர் பிராணிகளின் அத்தியாவசிய அடிப்படையாகும். இல்லையேல் சத்திய நாகரீகத்திற்கு நோயுண்டாகி மனிதர் அழிவார்கள். போர் அனைத்துமாவான் தகப்பனுவான். இதனாலேயே ஒருவன் ஒழுங்காய் வளர முடியும். உலகத்தில் தோன்றும் எல்லாப்பொருள்களும் சண்டையினின்று ஸ்திமிதிமானவைகளே. மனிதனின் போர் சுபாவம் அவனை அழிப்பது மாத்திரமன்னியில் புது உயிரையும் அளிக்கும். நீ யுக்தியாய் எங்கும் நிலையாக வேண்டும். இல்லையேல் உனக்கும் நிலையில்லாமலாவாய். வன்மையுள்ளவனே எங்கும் விளங்குவான். காலத்திற்கேற்றவாறுதான் ஸ்தாபிதமாகுபவனே உயிருடன் வாழ்

வான். எளியவன் சாகவேண்டும். இயல்பு, செடிகொடிகளில் இச் சத்தியத்தைக் காணலாம். இதுவே மனித சமூகத்தையும் நிர்மாணம் செய்கின்றது.........உலகமென்பது பொன் பொருளுக்கான சதாகால சண்டையாகும். உன் சக்திக்கேற்றவாறு நீ ஜயத்தையடைவாய். மனித சுபாவமிருக்கும் வரை சண்டை இருந்தே தீரும். யுத்தம் என்பது பிரும்மாவைப்போல சிருட்டி கர்த்தாவாகும். (களாஸ்வாக்னர்) சண்டையன்னியிருந்தால் அருகதையற்ற தேசம், வளரும் நாட்டை சுகமுடனுக தடுக்கும். அதனுல் எங்கும் அழிவாகும். யுத்தமென்பது இயல்பிலே இலங்கும் சண்டையைப்போல் அத்தியாவசியமானதாகும். (எ. வான்ஷிகல்) யுத்தம் என்பது சகத்தின் சனுதன தர்மமாகும். இயற்கையாய் நமது பாதுகாப்பிற்கு கொண்டுவிடும் சண்டை சகத்தின் நியாயமாகும். மனிதன் சண்டை செய்பவன். சண்டை என்பது நான்தான் என்னும் நினைவினுலேயாகும். இதுவே வாழ்வதின் உண்மை. இதனுலேயே நமது பொருள் தேசம் நிலையாகும். (பெர்ன்ஹார்டி) சண்டையிலேயே மனிதன் சக்தியைக் காணலாம். (ஷில்லர்) சண்டை என்பது கோரமே. ஆனுல் அதுவே அழுகாமல் சகத்தை காப்பாற்றும். அனுபவத்தினுல் நாம் எதையாவது கற்கிறேம் என்ருல் அந்த அனுபவம் சண்டையாகும். (கூஞே - பிஷர்.)

சாந்தத்தைவிட் தேசீய வாழ்க்கையை தலையோங்கச் செய்வது சண்டையே. அதனுல் கஷ்டமிருந்த போதிலும் மனிதனின் பெருங்குணமும் புலனுகும்........ சண்டை காலத்தில் குட்டிச் சண்டைகள் ஒழியும். பொது

வித்து சனங்களை ஒன்றாக்கி, அதனால் விடுதலை வன்மை யொன்று புலனாகும். உண்மையான பெரிய மனிதர்கள், பெரும் பலம், புனித உண்மை, பெரிய கண்ணியம் அப் பொழுதுதான் அவற்றின் உண்மையான ஸ்தானங்களில் வரும். எல்லா ஒழுக்கம், ஒவ்வொரு வினாடியும் கருணை, தாராளம், திடவீரம், தயாளம் முதலியவை யாவும் ஒன்று திரண்டு விளங்குவதே யுத்தமாகும். அக்குணங்களைக் காண சந்தர்ப்பமும் அதுவேயாகும். (பிரெடிரிக்திகிரேட்) யுத்தகோஷமாய்விட்டால், சமூக பொறாமை நின்று சின் னஞ்சிறு வெறுப்பு ஒழியும். தன்னந்தனியான அகங் கார மொழியும் சமூகத்தின் அங்கம் என உன்னை எண்ணுவாய். சமூக நன்மைக்காக நமது சீவனை துரும்பு என எண்ணுவாய். தேசம் என்னும் பெரிய எண்ணத் தில் ஒருவன் கலந்து யுத்தத்திலேயே தன்னைமறப்பான். சண்டையிலேயே அன்யோன்யம் அதிகரிக்கும். மனித னில் வீரத்தையழிப்பதைவிட ஒழுக்கக்குறைவு வேறில்லை. சண்டையில் தோல்வியும் லாபமே. எளிமை தண்டனையில் தோல்வியாகி பிறகு புனர்ஸ்தாபனமாகிறான். (டிரிடஷ் கே) மனிதவர்க்கத்தில் மேன்மையான குணத்தை வளர்ப் பதே யுத்தமாகும். (விலியம். வான்ஹம்போல்டு) நாம் நினைப்பதற்கு உயிரைவிடுவதே பெரியவனின் குணம். இதை அனுபவமாக்கினால் யுத்தமாகும். (பர்ன்ஹாடி.) கடவுள் என் கைகளால் சண்டைபுரியச் செய்கிறார் (Ps. 18.34) சண்டைக்கு நாங்கள் சிறந்தமனிதர்கள் (Jer. 42.14) சண்டைக்குத் தயாராகவும் (Num. 1.3)தேவர் கள் கையிலே கத்தியுண்டு (1. Chr. 21-16) தீர்ப்புநாள் கத்தி (2. Chro. 20. 9.) நான் கொல்ல கத்தியை செய்

தேன். (Jer. 15.3) கத்தியிலேயே நீ நிற்கவும் (Ezek. 26) கத்தியினாலேயே நீ வாழவேண்டும். (Jer. 27. 40) நான் கத்தியாலே ஜருசலத்தை தண்டனை செய்தேன். (Jer. 44-13) கடவுளான நான் கத்தியை எடுத்தேன். (Eze. 21-3) நான் சாந்தத்திற்காக வரவில்லை. கத்திக்காகவே வந்தேன், (மத்தேயு 10-34) இந்த பைபில் எண்ணங்களில் வளர்ந்த ஒரு குழந்தை லார்டு ராபர்ட்ஸ் தளபதிக்கு ஒரு காலத்தில் எழுதியதாவது :—அன்பான லார்டு ராபர்ட்ஸே கிரோன்ஜியைப் பிடித்தது எனக்கு சந்தோஷம். அவனைக் கெட்டியாப் பிடித்துக்கொள்ளவும். அவனை தப்பிக்க விடாதே. அவனுக்கு ஏது வேண்டாமோ அதையே தின்னக்கொடு. அப்பொழுது அவன் சாவான்.—உனது அன்புள்ள குழந்தை. ஒரு கிருஸ்துவ குழந்தை சொல்லியதாவது:—டாமாவே! சண்டை முடிந்தால் ஒரு ரிஷியனின் தலையை எங்கள் தந்தைக்கு கொண்டு வந்து கொடுக்கவும்.—(விலியம் மெக்ஸ் வெல்லியானுவிலிருந்து பொர்ட் ஆர்தர் வரை பக்கம் 378.)

ஒருவேளை இக்காரணங்களாலேயே தேவர்கள் சண்டையை விரும்பியிருக்கலாம். சண்டையில்லையேல் ஜயமில்லை. ஜயமில்லையேல் அசுரர்கள் நிரந்தரமாவார்கள் என்பதே அவர்கள் எண்ணம். இந்த சண்டை சித்தமே சுவாமியான தந்தையையும் குத்த அவர்களுக்கு துணிவு தந்தது. (ப. 64) சண்டை சூன்யமாயிருந்தால் பகவத்கீதை புஸ்தகம் தோன்றிராது. வால்மீகர் சிதழ் புத்திலே செத்திருப்பார். கம்பனும் எந்தக் குப்பையிலிருந்திருப்பானோ? நவீனத்திலே இதனால் லாபம் அடைந்த நாடுகளைப்பற்றி நான் சொல்லவேண்டியதில்லை.

இக் கதைகளிலிருந்து எப்படி சூட்சமங்களை அறியவேண்டுமென சில மொழிகளை சொல்லுகிறேன். முதல் கதையினுல் அறச்செயலுக்கும் ஆயுதமணியவேண்டும். பயந்தால் பிராணியாகி புசிக்கப்படுவாய் என அறிகிரும். சிரஞ்சீவியாகவேண்டுமாஞல் நீ செய்யும் செய்லுக்கு சாகவும் துணியவும். (கதை 5) அநியாயத்தை அழிக்க முயலுவதே வேதம் படிப்பதின் அடையாளம். (க. 11.) சங்கீதமென்பது தேக அங்கங்களின் இசைவேயாகும். (கதை) மனிதவாழ்க்கையே யக்ஞமாகும். (கதை 79.)

நான் ஒருவாறு சதபத சாரத்தை சொல்லிவிட்டேன். இனி கதைகளைப் படித்து பட்டம் பதவி பொன் காஷாயம் பிரேதம் முதலியவர்களிடம் இதைச் சொல்லாமல் ஹரிஜனம் மறவர் நாடார் வைசியர் ஸ்திரீகளிடம் இதைப் பிரச்ாரம் செய்வதே நமதுகடமை என எண்ணுவோம். அம்மா! அதையே நாம் செய்வோம்.

பம்பாய்
1-2-33

எம். ஆர். ஜம்புநாதன்.

# சதபதபிராமணம்.

## 1. மிருகமான கதை.

ஆதியிலே மிருகங்கள் நம்மைப்போல இருகால்களாலேயே நடந்தன. ஆனால் தேவர்கள் ஒருசமயம் யக்ஞம் செய்யும்பொழுது தங்கள் கைகளிலுள்ளத் தடிகளைத் தூக்கவே அவைகள் பயந்து பூமியில் முன் இருகைகளைச் சாய்த்தன. அப்பொழுதுதான் நாற்கால் மிருகங்களாயிற்று. இப்படி பயந்ததினால் மிருகங்களானதுமன்னியில் கீழே சாய்ந்ததால் உயர்ந்தவர்களுக்கு உணவுமானார்கள். 3. 7. 3. 1. 3.

## 2. மனம் மொழி சண்டை.

புவியின் ஆரம்பத்திலே மொழியை நோக்கி மனம் சொன்னதாவது:—நான் உன்னைவிடப் பெரியவன். ஏனெனில் நான் அறியாத எதையும் நீ செய்வதில்லை. நான் நினைப்பதையே நீ சொல்லுகிறாய். உடனே மொழி கூறியதாவது:—நான் உன்னைவிடப் பெரியவன். ஏனெனில் நீ நினைப்பதை நானே பகிரங்கம் செய்பவன்.

பிரஜாபதி இவர்களிருவரையும் செவியுற்று அந்நியன் செய்வதுபோல் செய்பவன் தாழ்ந்தவனாதலால் மொழியே நீ தாழ்ந்தவனாகும் என பதிலளித்தார். உடனே

மொழிக்கு கோபம் வந்துவிட்டது. இதனால்தான் பிரஜாபதியை நாடுகிறவர்களுக்கு மொழி உதவியளிப்பதில்லை. அவர்கள் மனத்தினாலேயே பிரஜாபதியை உபாசனை செய்கிறார்கள். 1. 5. 9. 12.

## 3. காயத்திரி மகிமை.

பிரஜாபதியினின்று தோன்றிய அசுரர்கள் தங்களுக்குள் யார் பெரியவர் என சச்சரவு செய்துகொண்டார்கள். அசுரர்கள் தாங்களே பெரியவர்கள் என எண்ணி தங்களிலேயே திருப்தியடைந்தார்கள். தேவர்கள் சோதியின் உதவியை நாடியதால் காயத்திரி அவர்களுக்குத் துணையானான். அதனால் தேவர்கள் ஜயித்தார்கள். ஜயித்ததால் பெரியவர்களானார்கள். 1. 4. 1. 34.

## 4. கண்கள்.

கண்கள்தான் சத்தியமென பெரியார்கள் சொல்லுகிறார்களே? அவை எப்படி?

நான் பார்த்தேன். அதனால் நான் சொல்லுவதே நிசமென்றான் ஒருவன். நான் கேட்டேன். அதனால் நான் சொல்லுவதே சத்தியமென்றான் மற்றொருவன். இவர்களிலே நீ யார் சொல்லுவதை நம்புவாய்?

நான் பார்த்தேன் என சொல்லுபவனையே நம்புவேன். இதனால்தான் கண்கள் கூறுவதையே சத்தியமென பெரியார்ச் சொல்லுகிறார்கள். 1. 3. 2. 27.

## 5. சிரஞ்சீவி கதை.

காலனைப்பற்றி நீங்கள் அனைவருக்கும் சொல்லிவிட்டீர்கள்? எல்லா மனிதர்களும் அமுதமாய் விட்டால், நான் என்ன செய்வது என மரணதேவதை தேவர்களை வினவினான்?

அதற்கு தேவர்கள் சொன்னதாவது:—இனி தேகத்தோடு ஒருவரும் சிரஞ்சீவியாக மாட்டார்கள். அறிவினாலோ அருஞ்செயல்களாலோ சிரஞ்சீவியாகிறவர்களின் தேகங்களை நீ கொன்ற பிறகே அவர்கள் சிரஞ்சீவியாக முடியும். 10. 4. 3. 9.

---

## 6. ஏன் மௌனமொழி?

தேவர்கள் ஒருகாலத்தில் யக்ஞம் செய்தார்கள். உரத்த குரலுடன் தேவர்கள் யாகஞ்செய்யுங்கால் அசுர ராட்சதர்கள் அறிந்து நுழைந்தார்கள். இனி மௌன குரலோடு செய்யவேண்டுமென எண்ணி மொழியை மனத்திலே யுரைத்து யக்ஞத்தை பரிபூர்ணம் செய்து ஜயமடைந்தார்கள். 3. 9. 4. 6.

---

## 7. தோத்திரக் கோட்டை.

ஒருகாலத்தில் தேவர்கள் யக்ஞம் செய்யுங்கால் அசுரர்கள் வந்து கலைத்தார்கள். அங்கு அவர்கள் கலைப்பதை தடுப்பதற்கு தேவர்கள் தோத்திரம் என்னும் கோட்டையைக் கட்டி அசுரர்கள் வராமல் தடுத்தார்கள். 3. 3. 4. 16.

---

## 8. அக்னிக்கு ஜயமேன்.

தேவர்கள் ஒருகாலத்தில் யக்ஞம்செய்வதற்குக் காடு சென்று சமித்துக்களை சேகரிக்கலானார்கள். அப்பொழுது இராட்சதர்கள் இதுதான் சமயமென்று தேவர்களைப் போல் வடிவங்க ளெடுத்துக்கொண்டு அவர்களுடன் கலந்து ஒருவரை யொருவர் நிந்தித்தார்கள். நீ என்ன செய்தாய் பார்த்தாயா? நீ அப்படிச் செய்யலாமே என ஒவ்வொருவரும் சண்டை செய்யலானார்கள். ஆனால் நான் அப்படிச் சொல்லவில்லையே, என ஒவ்வொருவரும் மறுத்தார்கள். ஆனால் அக்கினி ஒருவனே ஒருவரிடமும் ஒன்றும் சொல்லாமலிருந்தான். தேவர்கள் எல்லாம் கேட்டதற்கும் நான் ஒருவரிடமும் ஒன்றும் சொல்லவில்லை எவனும் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை என்றான்.

உடனே தேவர்கள் அக்கினியைக்கண்டு வணங்கி இவனே அனைவரிலும் பெரியவன். எதையும் எரிக்கிறான். இவன் தானும் தூஷித்து தூஷிப்பதையும் கேட்பதில்லையாதலால் இராட்சதர்களை ஜயிப்பதில் இவனே முதன்மையானவன். இவனையே நாம் தலைமையாகக் கொள்ள வேண்டுமென அவனை நாடினார்கள். ஏனெனில் அக்கினியே அத்தகைய செயல்களைச் செய்ய சக்தியளிப்பவனாகும். 3. 4. 3. 1. 8.

## 9. பிரம்மசாரி.

பிரம்மசாரி நான்கு வகையாய்ப் பிரிந்து ஆசிரமத்தில் நுழைவான். எப்படி? கால்பாகம் நெருப்பிலும் கால் பாகம் மரணத்திலும், கால்பாகம் ஆச்சாரியனிலும், கால்

பாகம் தன்னிலும் நுழைவான். இப்படிப் பிரிந்து நுழைந்து அப்பால் மறுபடியும் அவன் அவைகளைப் பெறுவான். எப்படி? (1) சமித்தளித்து மூட்டி அனலுக்களித்த பாகத்தைத் திரும்பி பெற்றுக்கொள்ளுவான்; (2) பிரம்மசாரியாயிருக்குங்கால் வெட்கம் மானம் என்பதைவிட்டு தனக்குப் பிச்சை எடுப்பதால் மரணத்திற்களித்த பாகத்தை மீட்டுக்கொள்ளுவான்; (3) சொல்லுவதைச் செய்வதால் ஆச்சாரியனுக்கு அளித்த பாகத்தை மறுபடியும் பெற்றுக்கொள்ளுவான். 11. 3. 3. 17.

---

## 10. உபதேசம்.

நான் பிரம்மசாரியாவேன் எனச் சொல்லுவது பிரமத்தினிடம் நான் வந்தேன் என்பதாகும்.

பூமண்டலத்திலே பெரியவர்களும் பலமுள்ளவர்களும் இந்திரனும் அக்கினியுமாகும். இவர்களை அணுகினால் உனக்கு ஒருபொழுதும் தீங்குவராது என்பதை குறிக்க நீ இந்திரனின் சீடன் அக்கினியே உன் குரு என ஆசிரமம் சென்ற உடன் குருநாதர் கூறுவார். அப்பால் பிரமசாரிக்கு ஒரு தீமையும் வாராமலிருப்பதற்கு அவனை பிரஜாபதிக்கும் சாவித்திரிக்கும் குருநாதர் அளிப்பார். சத்துருக்களிடமிருந்து பாதுகாப்பாக நீ சலம், செடி, கொடி, சுவர்க்கம் முதலியவைகளை நாடவும் என அப்பால் குருநாதர் கூறுவார்.

அமுதத்தை நீ பருகவேண்டுமெனச் சொல்ல சலம் பருகு எனவும் பலமுடையவனாகவும் என சூட்சுமமாய்ச் சொல்லி நெருப்பிலே சமித்துப் போடவும் என்பார். அதாவது நெருப்பினால் மனத்தை மூட்டி ஒளியுடனாக

வும் என்பதர்த்தம். பகலில் தூங்காதே என எச்சரிக்கை செய்வார். அதாவது பகலில் சாகாதே என அர்த்தமாகும். உடனே சாவித்திரி உபதேசம் செய்வார். எப்படி?

முதலில் வலதுகையை சீடனிலே வைப்பார். குருநாதர் அப்படி வைப்பதின் நோக்கம் அவனுடன் கர்ப்பமாவதாகும். பிறகு சாவித்திரியோடு குருநாதனே அவனில் பிறப்பார்.

மாணவனுக்கு எதிர்முகமாய் நின்று குருநாதர் உபதேசம் செய்வார்.

மந்திரத்தை எப்படி உபதேசம் செய்வார்? அவர் முதலில் பதம் பதமாயுரைத்து, அப்பால் பாதி மந்திரமாயுரைத்து கடைசியிலே முழுமையான காயத்திரியைச் சொல்லுவார். ஏன் அப்படி? அதாவது முதலில் பிராணனின் பிரிவான அபானன், உதானன், வியானன் அப்பால் உதானன் அப்பால் முழுப் பிராணனையும் அவனில் வைப்பதைப் புலனுக்கவே இப்படிச் செய்வது.

பிரம்மசாரியானல் ஏன் விவாகமாகாது? பிரம்மசாரியே குருநாதரை கர்ப்பம் தரிப்பதால் வேறு விவாகம் செய்துகொள்ளுவதென்பது இதைச் சிதறடிப்பதாகும்.

ஆச்சாரியன் கர்ப்பத்தைப்பற்றி நீங்கள் சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே? உலகத்திலே இரண்டு வித பிறப்புண்டு. மனிதப்பிறப்பு கர்ப்பத்தில் பிறப்பு தாகும். தேவப் பிறப்பென்பது சந்தஸான மந்திரத்தால் வாயினின்று பிறப்பது.

பிரம்மச்சாரி கடைசியாக ஒரு தேனைத்தான் பருக வேண்டும். அது எந்தத் தேன்? அது சுவேதகேது அருணேயன் பருகின தேனை மூன்று வேதங்களின் இரசமாகும். 11. 5. 4. 1. 18.

## 11. வேதம் படிப்பதேன் ?

ஏன் வேதம் முதலியவைகளைப் படிக்கவேண்டும் ?

1. வேதத்தைப் படிப்பதால் உனக்கே ஒரு ஆனந்தம்.

2. ஏகாக்கிர சித்தம் தோன்றும்

3. சுதந்திர புருஷனுவாய்.

4. எல்லா ஐசுவரியங்களையும் பெறுவாய். செல்வம் பெருகும்.

5. சாந்தமாய்த் தூங்குவாய்.

6. நீ உனக்கே உன் வைத்தியனுவாய்.

7. புலன்கள் உன் கைவசமாகும்.

8. ஏதாவது ஒரு உத்தேசத்தில் இன்பமுடனு வாய்.

9. அறிவு புகழ் மேன்மையாகி மனிதர்களை புனித மாக்குவாய்.

10. ஞானம் தோன்றி அடியிற் கண்ட நான்கு செயல்களைச் செய்வாய்.

(அ) பிராமணர்களுடன் மரியாதையுடனுவாய்.

(ஆ) அவர்களுக்கு தாராளமாயிருப்பாய்.

(இ) அநியாயம் கொடும் வன்மையினின்று சனங் களைப் பாதுகாப்பாய்.

(ஈ) பழிக்குப்பழி சட்ட ரீதியாய்க் கொலை வாங் கும் தண்டனையிலிருந்து சமூகத்தைக் காப்பாற்றுவாய்.

11. சுருங்கச் சொல்லில் இத்தகைய நோக்கங்களை எல்லாம் அறிந்து அனைத்தையும் படிப்பாய்.

இப்படி அனைத்தையும் படிப்பதினுலாதாயமென்ன ?

இப்படிப் படித்தவன் அம்சதூளிகா மஞ்சத்திலே படுத்துறங்கி திருப்தியுள்ளவனைத் தென்பட்டபோதி லும் ரோமத்தினின்று நகம்வரையுள்ள தேகம் முழுவதும் சுடர்விட்டெரியும் சம்பத்தை இப்படிப் படிப்பவனிடம் காணலாம்.

12. இப்படி அறிந்துகொள்வதே தேவர்களுக்கு யக்ஞம் செய்வது போலாகும். அது எப்படி ?

ருக்கு என்பது தேன். சாமன் என்பது நெய். யஜுர் என்பது அமுதம். வாகோவாக்கியம் மாமிசமும் பாலுமாகும். ஆதலால் இவைகளை அறிய முயலுபவன் தேவர்களுக்கு யக்ஞம் செய்து திருப்தி செய்வதன்னியில் தானும் அதனால் தேவர்களிடமிருந்து நன்மையைப்பெறு கிறான்.

13. ஏன் படிக்காமல் அறிந்துகொள்ளாமலிருக்கலா காது ?

சலம் செல்லும். சூரியன் ஓடுவான். சந்திரன் அசை வான். நட்சத்திரம் செல்லும். இவைகள் செல்லவில்லை யானால் கதி என்ன ?

படிக்காதவனுக்கும் இதே கதிதான். 11. 5. 7. 1. 4.

---

## 12. வேதங்கள்.

ஆதியிலே விருத்திரன்தான் எதுவமாயிருந்தான். இந்திரன் விஷ்ணுவின் உதவியைக்கொண்டு அசுரனை வச்சிராயுதத்தாலடிக்க விரும்பினான். உடனே விருத்திரன் என்னை அடிக்கவேண்டாம். எனது வன்மையின் காரண மான யஜுர்வேதத்தை எடுத்துக்கொள்ளவும் என

அளித்துவிட்டான். மறுபடியும் இரண்டாமுறை மூன்ரு வது முறையாக அடிக்க விரும்பியதும் அவன் தன் மிகுதி வன்மைகளுக்கு காரணமான, ருக்கு, சாமனே, இந்திர னுக்கு அளித்துவிட்டான். அதனல் விருத்திரன் பலங் குறைந்து இருக்குமிடம் தெரியாமலாய்விட்டான்.

5. 5. 5. 1.—5.

## 13. எவன் உத்தமன்?

தன்னைப் பார்த்துக்கொள்ளுபவனு? அல்லது தேவர் களுக்கு அளிப்பவனு? தன்னைப் பார்த்துக்கொள்ளுப வனே உத்தமன். எப்படி? பாம்பு தன் தோலை எப்படி நீக்கிக்கொள்ளுகிறதோ அப்படி எவன் யக்ஞத்தால் பாவம் மரிப்புனின்று நீங்கி ருக்கு சாமனுகுதியால் சுவர்க் கத்தை அடைகிருனே அவனே உத்தமன்.

தேவர்களுக் களிப்பவனைப்பற்றி ஒருமொழி. தேவர் களுக்கு சேவை செய்கிறேன் என சொல்லுபவன் ஒரு அரசனுக்கு கப்பம் கட்டுகிறேன், காணிக்கை செலுத்து கிறேன் எனச் சொல்லுபவனைப் போலாவான். இதனல் இவன் தாழ்ந்தவனேயாகும். இவனுக்கு சுவர்க்கமில்லை.

11. 2. 6. 13. 14.

## 14. சத்திய அனல்.

தேவர்களும் அசுரர்களும் பிரஜாபதியினிடமிருந்து தோன்றியவர்கள். இவர்கள் அழியாமல் வெகுநாளிருந்த தற்கு காரணம் அமுதமான அக்கினியை நாடினதனு லாகும்.

தேவர்கள் அக்ன்யாதேய மென்னும் சத்தியமெனப் படு மச்சுடரை நாடியதால் அது கொழுந்துவிட்டெரிந்து நெய்விட்ட நெருப்புபோல் பெருகி நிலையாயிற்று. அசுரர்கள் தூலமான அனலைநாடி பொய் என்னும் நெருப்பில் பாய்ந்து சலம் விழும் அனலை நாடினார்கள். அசுரர்கள் நெருப்பு அணைந்து அவர்களும் அழிந்தார்கள். ஆனால் தேவர்கள் நெருப்பு நிலையாகி அவர்களும் நிலையாகி திரமாய் ஜயமடைந்தார்கள்.

## 15. அக்னியும் மனிதனும்.

பிரஜாபதி உலகத்தை எல்லாம் சிருட்டி செய்து பிறகே அக்கினியை செய்தான். அக்கினிதோன்றியவுடன் உலகத்தை எல்லா மழிக்காரம்பித்தான். உடனே உலகமெல்லாம் ஒன்றாய்சேர்ந்து அவனை எதிர்க்காரம்பிக்கவே அவன் நடுநடுங்கி மனிதனிடம்சென்று நீ உலகத்திலேயே என்னை உற்பத்திசெய்து காப்பாற்றுகிறாய். அப்படியே உன்னை அவ்வுலகத்தில் காப்பாற்றுவேன் என சொல்லி அவனில் நுழைந்தான். 2. 3. 3.

## 16. பாதுகாப்பாக்கினி.

நாம் சண்டைக்குப் போகிறோம். அக்கினியே நமது ஜந்துக்களைக் காப்பாற்றும் என அவனிடம் சீவர்களை அளித்தார்கள். அவன் தேவர்கள் சண்டைசெய்யும் இரவில் ஜந்துக்களை காப்பாற்றிவந்தான். காலையிலே தேவர்கள் வந்து எங்கள் மிருகங்களை அளிக்கவும் என சொல்லியவுடன் அவன் காலையில் திருப்பியளித்துவிட்டான்.

## 17. போர்த்துணைவன்.

அக்கினி, தேவர்களிடம் எப்பொழுதுமுண்டு. அதனால்தான் இராட்சதர்கள் அவனைக்கண்டு அஞ்சுகிறார்கள். உன்கண்ணால் அக்கினியை தேடவும். அவன் உதவியால் உன்னை தூஷிப்பவனையும் உனக்குத் தீமைசெய்பவனையும் துவம்சம் செய்யவும். 6. 3. 3. 12.

---

## 18. அக்கினி அறிவு.

மகாசால ஜாபாலனிடம் தீரசாதபாரனேயன் சென்றான். அவர்கள் பேசிக்கொண்டதே இவைகளாகும்.

எதை அறிந்துகொண்டு நீ இங்கு வந்தாய்? அக்கினியை. எந்த அக்கினியை நீ அறிவாய்? மொழி என்னும் அக்கினியை. இந்த அக்கினியை அறிபவன் எப்படியாவான்? வாசா மகோசரனாவான். மொழி ஒருபொழுதும் அவனை கைவிடுவதில்லை.

இன்னம் எதை நீ அறிவாய்? அக்கினியான கண்களை அறிவேன்.

அதனால் லாபமென்ன? கூர்மையான கண்களுடனாகி கண்களால் ஒருபொழுதும் கைவிடப்படுவதில்லை.

இன்னம் எந்த அக்கினியை நீ அறிவாய்? மனம் என்னும் அக்கினியை.

அதை அறிவதினாலாகும் ஆதாயமென்ன? சிந்தனா சக்தியுள்ளவனாவேன். மனம் ஒருபொழுதும் என்னைக் கைவிடுவதில்லை.

நீ மறுபடியும் எந்த அக்கினியை அறிவாய்? செவி என்னும் அனலை. அதனாலாகும் ஆதாயமென்ன? செவி

சிறப்பை அடைவேன். ஒருபொழுதும் செவி என்னை கைவிடுவதில்லை.

நீ இன்னம் எந்த அக்கினியை அறிவாய்? அனைத்து மாகும் அக்கினியை அறிவேன் என்றதும், உடனே அந்த பெரியார் கீழே இறங்கி எனக்கு அதை கற்பிக்கவும் என வணங்கினர்.

அதற்கு அவர் பிராணனே அந்த அக்கினியாகும். மனிதன் தூங்கும்பொழுது மொழி சுவாசத்தில் செல்லும். அப்படியே கண் மனது செவியும் செல்லும். பிறகு எழுந்திருக்கும் பொழுது பிராணனிலிருந்தே அவை கிளம்பும். இது தேகசம்பந்தமானது.

இனி தேவர்களிலே இதைச் சொல்லுகிறேன். மொழியே அக்கினியாகும் கண்ணே அந்த சூரியன், மனது சந்திரனாகும். செவி திசை, பிராணனே இங்குள்ள காற்றாகும்.

இதன் இரகசியத்தை இன்னும் நீங்கள் அறிவிக்கவும்? நெருப்பு அணைந்தால் காற்றிலே நுழையும். அதை, அறியாதவர்கள் நெருப்பு அழிந்து விட்டதென்பார்கள். சூரியன் அஸ்தமானால் காற்றிலே செல்லுவான். சந்திரனும் அப்படியே. திசைகளும் காற்றிலேயே நிலைத்துள்ளன. அதிலிருந்தே அவை கிளம்பும்.

இதை அறிபவன் நெருப்பிலே மொழியாலும் கண்ணால் சூரியனிலும் மனதால் சந்திரனிலும் செவியால் திசையிலும் சுவாசத்தால் காற்றிலும் செல்லுவான். மனிதன் இவையுள்ளதால், தான் நாடும் தேவதைபோலாகி சாந்தமாவான். 10. 3. 1. 8.

## 19. கொடும் அக்னி.

சுவேதகேது ஆருணேயர் அறிந்த அறிவே இவையாகும்.

பெரியவர் எவர்? அவர்களின் பெரியவர்கள் யார்?

நான்கு பெரியவர்களுண்டு. அக்கினி பெரியவன். இந்த பெரியவரின் பெரியவர் செடி கொடிகளாகும். ஏனெனில் இவர்களே அவரின் உணவாகும்.

2. பெரியவர் வாயுவாகும். இந்தப் பெரியவரின் பெரியவர் சலமாகும். ஏனெனில் சலம் காற்றின் உணவாகும்.

3. பெரியவர் சூரியன். இப் பெரியவரின் பெரியவர் சந்திரன். ஏனெனில் அதுவே அவன் உணவு.

4. பெரியவர் மனிதன். இந்தப் பெரியவரின் பெரியவர் ஆடுமாடுகளாகும். ஏனெனில் அவைகளே அவன் உணவு.

இவைகள் நான்குமே யக்ஞத்தின் யக்ஞமெனப் பெயர். பிரஜாபதிக்குச் சம்பந்தமானதென இவைகளைச் சொல்வதுண்டு. அரக்கன் இரண்டு. அர்க்க இலை, இரு புஷ்பம், இரு குழிஇலை, இரண்டு கூட்டு இலை, இரு (சர்க்க) தானியம், இரு அர்க்க கிழங்கு. எவை? அவை இரண்டு செவி, கண், மூக்கு, உதடுகள், பற்கள் உணவாகும்.

அர்க்கன் என்றால் என்ன?

அக்கினியாகும்.

அக்கினியின் பீடம் மனிதனாகும்.

மனிதன் யார்?

கொடும் அக்னி. 10. 3. 4. 1. 5.

## 20. அக்னி தேகம்.

சாகபெனிகள் அக்கினி என்றால் காற்று என்பார். ஆனால் அக்கினியோ ஆதித்தியனாகும். ஹலிங்கவன் வாயுவைத் தவிர வேறு அக்னி இல்லை என்றான். அக்கினியே வருஷமாகும் என சத்தியாயனி சொல்வதுண்டு. அவன் தலை வசந்தம். சிறகு வெயில் காலம், மழைகாலம். நடு தேகம் பனிகாலம், வாலும் பாதமும் குளிர்காலமாகும். அக்கினி மொழியாகும். வாயு சுவாசம், சூரியன் கண், சந்திரன் மனது, திசை செவியாகும். சுக்கிலம் சலம் பாதம் வால்; சேர்க்கை மாதம், நரம்பு சந்திரன், வெள்ளி பொன் சிறகு இரவு பகல், இப்படி அவன் தேவர்களில் செல்லுவான். 4. 5. 1. 2.

---

## 21. அக்னிஹோத்திரம்.

ஜனக வைதேகன்—அக்னிஹோத்திரத்தை நீங்கள் எப்படி செய்வீர்கள்?

யாக்ஞவல்கியர்—நான் பாலால் செய்வேன்.

ஜனக :—பாலில்லையேல்?

யாக்ஞ :—தானியத்தால்.

ஜனக .—தானியமில்லையேல்?

யாக்ஞ :—வேறு வனஸ்பதிகளால்.

ஜனக :—அவைகளுமில்லையேல்?

யாக்ஞ :—கானகக் செடி கொடிகளால்.

ஜனக :—அவைகளுமில்லையேல்?

யாக்ஞ :—பழங்களால்.

ஜனக :—பழங்களில்லையேல்?

யாக்ஞ :—சலத்தால்.

ஜனக :—சலமில்லையேல்?

யாக்ஞ :—அது இல்லையேல் ஒன்றுமே இல்லை. ஆனல் சிரத்தையுடன் சத்தியத்தாலளிப்பேன்.

ஜனக :—உமக்கு வணக்கம். நீங்கள் அக்கினி ஹோத்திரம் இரகசியத்தை அறிவிக்கவும். வெளியில் சென்றால் அக்கினிஹோத்திரம் எப்படிச் செய்வது ?

யாக்ஞ :—அறிவு என்னும் சுடரால்.

ஜனக :—நாம் வெகுதூரம் சென்றுவிட்டால் நாமாக செய்துவரும் அக்கினிஹோத்திரம் எது?

யாக்ஞ :—அது பிராணனாகும். அதுவே எப்பொழுதும் விழித்திருக்கும். அதுவே அனைத்திற்கு மாதரவாகும். 11. 3. 8. 5.

## 22. அக்கினிஹோத்திர இரகசியம்.

சுவேதகேது ஆருணேயன், சோமசுதம சத்தியயக்ஞ, யாக்ஞவல்கியர் அவர்களை ஜனக வைதேகன் பார்த்து நீங்கள் அக்கினிஹோத்திரம் செய்வதுண்டா? என ஒவ்வொருவராய் வினவினன்.

1. சுவேதகேத ஆருணேயன் சொன்னதாவது:—

நான் ஒன்றை மற்றொன்றில், அதாவது அழியாத புகழுள்ள இரண்டு அனலுக்கு ஆகுதி செய்கிறேன் என விளக்கினன். மறுபடியும் நன்கு விளக்கவும் என சொல்லியதற்கு நான் ஆகுதி செய்வது சூரியனுக்கும் அக்கினிக்கும் எனச் சொல்லி மாலையில் சூரியனுக்கு அக்னியிலும், காலையில் சூரியனில் அக்கினிக்கும் ஆகுதி செய்கிறேன்.

இவர்களுக்கு ஆகுதி செய்வதாலாகும் பயனென்ன?

இவைகளுக்கு ஆகுதி செய்வதால் ஐசுவரியத்திலும், புகழிலும் விருத்தியாகி இவ்விரண்டு தேவதைகளுக்கு நண்பனாகி இவ்வுலகத்தில் நிலையுடனாவேன்.

2. பிறகு சோம சுகஷ்ம சத்திய யக்ஞர் சொன்னதாவது :—

ராஜாவே! நான் ஒளிக்கு ஒளியிலே ஆகுதி செய்கிறேன். அது எப்படி சூரியன் ஒளியாகும். அவனுக்கு மாலையில் அக்னியிலும்—ஏனெனில் அவனும் ஒளியாகும்—காலையில் சூரியனிலு மாகுதி செய்கிறேன். இவ்வாகுதி செய்வதால் ஒளி வடிவமாகி புகழும் கீர்த்தியுடனாகி இருவர்களுக்கும் நண்பனாவேன்.

3. அப்பால் யாக்ஞவல்கியர் சொன்னதாவது :—

கார்ஹ பத்திய அனலிலிருந்து நெருப்பை எடுக்குங்கால் அதுவே அக்னி ஹோத்திரமாகும். ஏனெனில் நான் அதனால் எழுச்சியாகிறேன். சூரியன் அஸ்தமித்த உடன் எல்லா தேவர்களும் அவனிடம் சென்று விடுகிறார்கள். ஆனால் நாம் அனலை மூட்டியவுடன் அவர் திரும்புகிறார்கள். யக்ஞ பாத்திரச் சுத்தம், வேதியில் வைப்பது, அக்கினிஹோத்திரப் பசுவைக் கறப்பது, இவ்வேலையைச் செய்யும்பொழுது அவர்களை நான் பார்ப்பதால் நான் சந்தோஷமாகிறேன். இதுதான் அக்னிஹோத்திர ரகசியமென்றார்.

உடனே சனகர் யாக்ஞவல்கியரே நீங்கள் அதன் ஆதரவு, அதன் அசைவு, ஆகுதிகளை அறிவதில்லை எனச் சொல்லிப் போய்விட்டார். உடனே யாக்ஞவல்கியர்

அவரைப் பின்தொடர்ந்து அதன் ரகசியத்தை அறிவிக்க வேண்டுமென்றார். அதற்கு ஜனகர் :—

1. நாமளிக்கும் ஆகுதி மேலே சென்று காற்றிலே நுழையும். பிறகு காற்றான நெருப்பிலே காற்று என்னும் சமித்து சேரும். சூரிய ரசிமி அதன் இரண்டாவது ஆகுதியாகும். அவை ஆகாயத்தில் திருப்திசெய்து பிறகு கீழே திரும்பும்.

2. இவ்வாகுதி ஆகாயத்திலே நுழையும். வானமான நெருப்பிலே சூரியன் என்னும் சமித்து சேரும். சந்திரன் வேறு ஆகுதியாகும். அப்பால் ஆகாயத்தைப் புனிதம் செய்து திரும்பும்.

3. அவை பூமியிலே நுழையும். பூமி அனலாகும். நெருப்பு சமித்தாகும். செடி கொடி வேறு ஆகுதியாகும். அப்பால் பூமியை புனிதம் செய்து திரும்பும்.

4. மனிதரிலே நுழையும். வாயே அனலாகும். நாக்கு சமித்தாகும். உணவு ஆகுதியாகும். இது மனிதர்களை திருப்தி செய்து திரும்பும்.

5. இன்னும் நமது மக்கள் எப்படி அக்கினிஹோத்திரமாகும் எனச் சொல்லிய பல உண்மைகளை அறிவித்தார். யாக்ஞவல்கியர் இதைச் செவியுற்று ரகசியமறிந்து திரும்பினர். 11. 6. 2. 170.

---

## 23. நாலு அனல்

1. கீழே வைக்கப்பட்ட அனல் எது?
அது இவ்வுலகமாகும்.

2. வெளியில் எடுக்கப்பட்ட அனல் எது?

அது காற்று.

3. முன்னால் எடுத்துச்செல்லப்பட்ட அனல் எது? ஆகாசமாகும்.

4. அடுப்பிலே விரிக்கப்பட்டுள்ள அனல் எது? திசைகளிலே விரிந்துள்ள அனலாகும்.

இந்த அனல் தேவதைகள் யார்?

(1) அக்கினி (2) வாயு (3) சூரியன் (4) சந்திரன். 11. 8. 3. 1. 2.

## 24. பெண் உரிமை

யக்ஞம் செய்யுங் காலத்தில் கர்த்தா தன் ஸ்திரீயைப் பார்த்து அடிக்கடி யக்ஞ சம்பந்தமாய்ப் பேசுவதுண்டு. ஏன்? ஸ்திரீ, புருஷனின் பாதியாகும். அவளில்லையேல் இவன் பூர்ணமாய் பிறப்பதில்லை. இவன் பிறப்பது அவளாலாகையால் அவளன்னியில் இவன் எதையும் செய்யக்கூடாதென்பதைப் புலனாக்கும். இது அவளுக்கும் அவன் செயல்களில் உரிமை உண்டு என்பதை விளக்கும்.

5. 2. 1. 10.

## 25. பெண்கள் சுபாவம்

தேவர்கள் வானத்திலுள்ள சோமனை விரும்பி காயத்திரியை அனுப்பினார்கள். ஆனால் காயத்திரி அவனைத் திருடிக்கொண்டு வருங்கால் அவனிடமிருந்து காந்தவர்கள் அபகரித்துச் சென்றார்கள். தேவர்கள் இதை உடனே அறிந்து காந்தர்வர்களுக்கு பெண்களைக்கண்டால் பிரியமதிகம். நாம் வாக்கை அனுப்பிப்போம் என வாக்கை

அங்கு அனுப்பினார்கள். வாக்கு அங்கு சென்று சோமனை அழைத்து வந்தாள்.

காந்தர்வர்கள் தேவர்களிடம் வந்து சோமனை நீங்கள் வைத்துக்கொள்ளவும், வாக்கை எனக்கு அளிக்கவும் என்றார்கள். அப்படியே ஆகட்டும். ஆனால் நீங்கள் அவளை வற்புறுத்தி எடுத்துச் செல்லவேண்டாம். ஆனால் இருவர்களும் அவளை அடைய முயற்சி செய்வோம் என்றவுடன் காந்தர்வர்கள் வேதங்களையெல்லாம் ஒப்பிவித்து நாங்கள் எத்தனை படித்தவர்கள், எத்தனை பலமுள்ளவர்கள். பார்த்தாயா ! என வாக்கு என்னும் பெண்மணியினிடம் படாடோபஞ் செய்தார்கள். காந்தவர்கள் துதியைக்கண்டு அவள் மயங்கிய போதிலும் தேவர்கள் கண்டுபிடித்த கானத்திலும் நடனத்திலும் பிரிய மதிகமாகி தேவர்களிடமே மறுபடியும் சேர்ந்தாள்.

வாக்கு இப்படி மயங்குவது போலவே பெண்களும் இன்னம் வீணை கானம் நடனத்திலேயே அவர்களுக்குப் பிரியமாதலால் அந்நிலங்களையே இப்பொழுதும் விரும்புவார்கள். 2. 4. 1. 6.

---

## 26. ஸ்ரீ கதை.

பிரஜாபதி தவத்தால் சீவர்களை சிருட்டித்தான். அத்தவத்தால் உஷ்ண மதிகரித்து களைப்பானவுடன் ஸ்ரீ என்பவள் தோன்றினாள். அவள் மிகுந்த ஒளியோடு நடுநடுங்கி அவர் முன் நின்றாள்.

தேவர்கள் அவளழகு ஆபரணத்தைக்கண்டு மோகித்து, பிரஜாபதியை நாடி நாங்கள் அவளைக்கொன்று

அழகு ஆபரணத்தைக் கொள்ளைகொள்ள விரும்புகிறோம் என்றார்கள்.

அதற்குப் பிரஜாபதியானவர் அவள் பெண்ணப்பா? அவளைக்கொல்லவேண்டாம். சும்மாவிட்டுவிடவும். வேண்டுமானால் உயிரைத்தவிர வேறு எதையும் அபகரித்துக் கொள்ளவும் எனச் சொன்னார். அவர்கள் அப்படியே செய்து விட்டார்கள்.

அவள் உடனே பிரஜாபதியைவணங்கி யக்ஞத்தால் தேவர்களிடமிருந்து மறுபடியும் அனைத்தையும் நான் திரும்பிப்பெறவேண்டுமென்றாள். பிரஜாபதியும் சரி என சம்மதித்தார். யக்ஞம்செய்யும் சமயத்தில் அங்கு செல்லவும் எனச் சொல்லவே இவளும் அவர்களிடம் சென்று மறுபடியும் அடியிற்கண்டவாறு அனைத்தையும் பெற்றாள். துவஷ்டிரியினிடம் வடிவம், சரஸ்வதியினிடம் நிறைவு, பூஷணனிடம் ஐசுவரியம், சாவித்திரியினிடம் வெகுமதி, இந்திரனிடம் வன்மை, மித்திரனிடம் செல்வம் முதலியவைகளைப் பெற்று, மறுபடியும் துதிசெய்து உணவை அக்கினியினிடம், அரசபதவியை சோமனிடம், க்ஷத்திரியனிடம் வீரத்தனம், இந்திரனிடம் பலம், பிரஹஸ்பதியினிடம் ஒளி, சாவித்திரியினிடம் செல்வத்தைப் பெற்று மறுபடியும் ஸ்ரீயானாள். 11. 4. 3. 1. 7.

---

## 27. வாக்கு ரகசியம்.

தேவர்களும் அசுரர்களும் பிரஜாபதியினின்றே தோன்றினார்கள். அவர் சொத்தை இருவரும் பங்கு பிரித்துக்கொண்டார்கள்.

தேவர்கள் மனது சுவர்க்கத்தைப் பற்றவே அசுரர்கள் மொழியையும் சுகத்தையும் பற்றினார்கள்.

தேவர்கள் யக்ஞத்தைப் பார்த்து சொன்னதாவது:-

வாக்கு என்பது ஒரு ஸ்திரீ, அவளை நீ அழைக்கவும்; அவள் கட்டாயமாய் வருவாள் என்றார்கள். யக்ஞம் அப்படியே அழைத்தான். அவள் வரவில்லை. அவள் தூரமாயிருந்தே மறுத்தாள்.

இதைக் கண்டு யக்ஞம் சற்று கலங்கவே, தேவர்கள் அவனைப் பார்த்து பெண்கள் மறுப்பதுபோ லிருப்பதாக நீ அஞ்சவேண்டாம். மறுபடியும் அழைக்கவும் என்றான். அவள் தலையை அசைத்தாள். யக்ஞம் அவள் தலையைத்தான் அசைக்கிறாள் எனச் சொல்லவே நீ மறுபடியும் அழைக்கவும் என்றார்கள். அவன் மூன்றுமுறை அழைத்தவுடன் அவள் வந்துவிட்டாள். இதைக் கண்டு தேவர்கள் கூறியதாவது : அழைத்தவனிடம் செல்லுவது பெண்கள் சுபாவம். அதுவுமன்னியில் வாட்டசாட்டமாயுள்ள நிலயத்தை நாடுவதே அவர்கள் குணமென அறிந்து கடைசியிலே அசுரனின் ஆதீனத்தினின்று வாக்கு என்னும் பெண்ணை அழைத்து ஆகுதி செய்தார்கள். 3. 2. 1. 26.

---

## 28. அர்த்தநாரி.

இத்தேகத்திலே ஸ்திரீ, புருஷர் இருவர்களையும் காணலாம்.

பெரிய விரல்கள் (அங்குஷ்டம்) ஆண்களானால், சிறிய விரல்கள் (அங்குஷ்டி) பெண்களாகும். செவி (கர்ணம்) ஆண்களாகும், கண் புருவம் (பூரு) பெண்களாகும்.

உதடு (உஷ்டம்) ஆண்களாகும், நாசிகை (பெண்களாகும்). பற்கள் (தந்த) ஆண்கள், நாக்கு பெண்ணாகும். பிராணன் ஆண், மொழி (வாக்கு) பெண்ணாகும். அக்கினி ஆணாகல் இத்தேகம் பெண்ணாகும். 10. 1. 2. 1. 10.

## 29. பஞ்ச சீவர்கள் இரகசியம்.

உலகத்திலுள்ள ஜந்துக்கள் எல்லாம் பிரஜாபதியை ஒரு முறை அணுகி நாங்கள் எப்படி வசிக்கவேண்டுமென்பதை அறிவிக்கவும் என வணங்கிற்று. பிரஜாபதி அவர்களுக்கு அறிவித்ததாவது:—

தேவர்களே! யக்ஞமே உங்கள் உணவு. அமுதமே உங்கள் இரசமாகும். சூரியனே உங்கள் ஒளியாகும். பிதுருக்களே! மாதமே உங்கள் உணவு. திவ்யமான எண்ணமே உங்கள் சலமாகும். சந்திரனே உங்கள் ஒளி.

மனிதர்களே! காலை மாலையிலும் புசிக்கவும். உங்கள் பெண் பிள்ளைகள் மரணமாகும். அனலே உங்கள் சோதியாகும்.

மிருகங்களே! உங்கள் உணவை உங்கள் இஷ்டம் போல் விட்டு விடுகிறேன். நீங்கள் நினைத்தபொழுது உண்ணலாம்.

இராட்சதர்களே! இருளும் மாயையும் உங்களுடையது. 2. 4. 2. 15.

## 30. பிராணனின் பெருமை.

விருத்திரசுரன் என ஒரு அசுரனிருந்தான். அவனை ஒரு சமயம் இந்திரன் கொன்றவுடன் துர்க்கந்தமாக மாறி சலத்தை நோக்கிப் பாய்ந்தான். சலம் இந் நாற்றத்தைக்

கண்டு சகியாமல் உயரமாய் எழுந்தது. அதுவே புற்க ளாயிற்று. உடனே இந்திரன் தன் கிரணங்களாலும் பிரா ணன் உதானன் என்னும் காற்றினுல் அந்த விருத்திரா சுரனைக் கொலை செய்தான். 1. 1. 4-1.

## 31. பிராண ரகசியம்.

பிராணனுக்கு எப்படி உணவு செல்லும்? ரோமம், சர்மம், உதிரம், கொழுப்பு, மாமிசம், எலும்பு, தாதுவால் பிராணனிடம் உணவு செல்லும். அவை உணவை எடுத் துச் செல்லவில்லையானுல் பிராணன் அவர்களையே புசித்து விடுவான். பசியுள்ளவன் சாந்தமன்னியி லிருப்பதும், சுர மடித்தவன் இளைப்பதும், பிராணன் அவைகளைப் புசிப்பதினுலே யாகும். 10. 4. 1-18.

## 32. பிரம்ம வடிவம்.

ஆதியிலே பிரமம் ஒன்றே இருந்தது. அவன் அனைத் தையும் சிருட்டித்து, அக்கினி சகம் வாயு, காற்று, சூரி யனைச் செய்து அவர்களுக்கு உயரமானவைகளை வானத் தின் உயரத்தில் சிருட்டிசெய்தான். பிரமம் அதற்கப்பால் சென்று நான் எப்படி கீழே இறங்குவதென எண்ணி வடி வம், பெயர் என்பவைகளால் கீழே இறங்கினுன்.

வடிவம் பெயர் என்ருல் என்ன?

எதற்கு வடிவ முண்டோ அதற்கெல்லாம் வடிவ மெனப் பெயர். பெயருள்ள தெல்லாம் பெயர் எனப் படும்.

இவைகளின் மகிமைகளைச் சொல்லவும்?

வடிவமும் பெயரும் எத்தனை தூரம் செல்லுமோ அத்தனை தூரமே பிரபஞ்ச மாகும். இவ்விரண்டும் பிரமத்தின் வன்மைகளும் விளக்கங்களாகும். இவ்விரண்டையு மறிபவன் வன்மையுள்ளவனுகி விளக்க மளிப்பவனுமாவான்.

இவைகளில் பெரியது எது ?

வடிவமே பெரியது. ஏனெனில் பெயருள்ள தற்கெல்லாம் வடிவமுண்டு. ஆனால் வடிவத்திற் கெல்லாம் பெயர் உண்டோ என்பது சந்தேகம்.

வடிவத்தின் பூர்ணகதையைச் சொல்லவும் ?

ஆதியில் தேவர்கள் எல்லாம் மரித்துவந்தார்கள். அப்பொழுது பிரமன் அவர்களை மனத்தால் பற்றினுன். இந்த மனத்தால் பற்றியதால் அவர்கள் ஆதியில் மனமாகவே இருந்தார்கள். இவன் வடிவத்தின் பூர்வ கதை.

மனம் வடிவமானுல் பெயர் யார்?

பெயர் மொழி எனப்படும்.

இவ் விரண்டையும் அறிவதினு லாகும் பயனென்ன ?

இவ் விரண்டும் எத்தனையோ அத்தனைதான் இப்பிரபஞ்சமாகும். பிரபஞ்சமென்பது அழியாப் பொருளாகும். அவ்வழியாப் பொருளை யறிபவன் பிரமனின் அழியாத குணத்தையுமறிவான். வடிவம் பெயரைஅறிவதினுல் இந்தப் பெரும் லாபத்தை நாமுமடைவோம்.

11. 2. 3. 1. 6.

---

## 33. உணவு

உண்டவுடன் உணவு இரண்டு வகையாகும். அமுதமான ஒன்று நாபிக்கு உயரமாய்ச் செல்லும் உதானக் காற்றினுல் மேற்புறஞ் சென்று காற்றிலே நுழையும்.

மரிக்கும் உணவு நாபியின் கீழாகி இருவகையாகி (மலம் சலம்) பூமியிலே செல்லும். பூமியில் செல்லுவது மறுபடியும் நெருப்பிலும் காற்றிலும் செல்லும். 10. 1. 7. 11.

---

## 34. ஐந்து பாதுகாப்புகள்.

தேவர்கள் அசுரர்களுக்கு பயந்து ஐந்து பாதுகாப்புக்களுடனுனார்கள். அவை—அக்கினி, வாயு, சூரியன், யக்ஞம், பர்ஜன்யனுகும்.

அவைகளின் விசேஷங்களையும், விளக்கங்களையும் நீங்கள் சொல்லவேண்டும்.

போரின் முற்புறத்தில் அக்கினியை சேனைத்தலைவனுக்கினுன். இரதாகிருதம் இரௌதஜஸன், இரண்டு வசந்தகாலம், இரண்டு வனதேவதை, (விசுவசி, கிருத்திகை) சேனை, யுத்தம், அவனின் இரண்டு சிறிய தலைவர்களாகும். கோர மிருகம் அவன் அம்பாகும். மனித கொலையே அவன் அஸ்திரமாகும்.

2. வாயுவையே தென்பக்கத்தில் வைத்துக் கொண்டார்கள். கோஷரதம், ஜயரதம், இரண்டு வசந்தம் மேனகை சஹசன்யம்அவன் சிறுதலைமை சேவர்களாகும். பூதம் பிசாசு என்னும் இரண்டு அம்பு அஸ்திரங்களுண்டு. இவைகளினுல் இப்பக்கம் வரும் சத்துருக்களை எல்லாம் ஜயிப்பான். எதையும் சூழ்ந்து கொள்ளும் சூரியனே பின்புறமான மேற்கு திசையைக்காக்கும் கருவியாகும். நிலை இரதம், நிகரற்ற இரதம், இரண்டு மழைமாதம், (அஸ்தமம், உதயம்) மே அவன் இரண்டு தலைமைகேப்டன்கள், புலி, பாம்பே அவன் அம்பு அஸ்திரங்களாகும்.

வடபாகத்தில் ஆனந்தமளிக்கும் யக்ஞமே காவல் புரிந்து போர் செய்து சத்துருக்களை துவசம் செய்வான். இரண்டு கனிகாலம், விசுவசி கிருதகி என்னும் பெண்களே அவன் சிறிய தலைமைக் கேப்டன்கள். சலமே அம்பும், காற்றையே அஸ்திரமாகக்கொண்டு அவன் சத்துருக்களை அழிப்பான்.

நடுவிலே பர்ஜன்யனே காவல் புரிவான். இரண்டு மாரிகாலம் ஊர்வசி, பூர்விதி, சேனஜிதம், சுசேனம் இரண்டு சேனைத்தலைவர்களுண்டு. இடியும் மின்னலும் அவர்கள் அம்பு அஸ்திரமாகும்.

அம்பு சஸ்திரங்களால் சத்துருக்களைத் தொலைத்து பெண்களால் மக்கள் பாக்கியத்தை அடைந்து சுவர்க்கத்திலே இப்பாதுகாப்புடன் நிலையாகி சத்துருக்களைத் தொலைத்து தேவர்கள் சுகமாய் வாழ்கிறார்கள். 8. 6. 1. 20.

## 35. பிரஜாபதி சரிதை

பிரஜாபதி ஆதியிலே அமுதனையும் அழிபவனையு மிருந்தான்.

அமுதபாகம் எது?

அவன் பிராணனாகும்.

அழியும் பாகம் எது?

அவன் தேகமாகும்.

பிரஜாபதியை அழிவற்றவனே என்று சொல்லுகிறார்கள். ஒருபாகம் அழிவதாயிருந்தால் அவன் அழிவற்றவனய் எப்படியாவான்?

அழியும் பொருளையும் அமைத்து அழிவில்லாமலாக்கினான். எப்படி ஒழுக்கமாய் அமைத்தான்?

1. மரிக்கும் மண்ணுன மச்சையை பிராணனுன அமுதத்தில் தூவி அங்கு நிலைக்கச்செய்து அம்மண்ணை அமுதமாக்கினுன்.

2. இரண்டாவது அடுக்கான அபானனை அமைத்து அதற்கு எலும்பு என்னும் மண்ணைத் தூவினுன். அதனுல் எலும்பு அமுதத்தில் நிலைத்து அப்பாகமும் அமுதமாயிற்று.

3. மூன்றுவது அடுக்கான வியானனை அப்பால் அமைத்து அதில் நரம்பு என்னும் மண்ணைத் தூவினுன். அதனுல் அழியும் அந்த நரம்பு அமுதத்தோடு கலந்து அது அங்கு அமுதமாயிற்று.

4. நான்காவது அடுக்கில் உதானனை நிலைக்கச் செய்தான். அங்கு மாமிசம் என்னும் மண்ணைத் தூவினுன். அதனுல் அழியும் அது அமுதத்தில் கலந்து அங்கு அழிவற்றதாயிற்று.

5. ஐந்தாவது அடுக்காக சாமனனை ஸ்தாபிதஞ் செய்தான். அங்கு கொழுப்பு என்னும் மண்ணைத் தூவினுன். அதனுல் அழியும் அது கலந்து அமுதமாயிற்று.

6. ஆருவது அடுக்கில் சத்தத்தை ஸ்தாபிதஞ் செய்தான். இரத்தம் என்னும் மண்ணை அங்கு தூவினுன். அதனுல் அது அங்கு கலந்து அமுதமாயிற்று.

இந்த ஆறு ஆறு பன்னிரண்டை தன் வேறு வடிவமான வருஷமெனப்படும் பன்னிரண்டு மாதங்களோடு இணைத்தான். அப்பால் இந்த அனைத்திலும் தங்கப்பொடிகளை தூவி அக்கினியை மூட்டினுன். அங்கு பொன்மயமான புருஷன் ஒருவன் தோன்றினுன்.

இதுதான் பிரஜாபதியின் பொன் வடிவமென்ருர் சாண்டில்யர். இல்லை இல்லை அது அவருடைய ரோமம் என்ருர் சப்தரதவாகினி ரிஷி. சரி எப்படியிருந்தபோதி லும் அது அவருடைய ஒரு வடிவமென்பதில் சந்தேகமே இல்லை. இதுவே அவர் சரித்திரமாகும். 10. 1. 4. 12. 11.

## 36. பிரஜாபதி செயல்

பிரஜாபதியே முதலிலிருந்தார். பிரஜைகளைச் செய்ய வேண்டுமென விரும்பி தவமாகிக் களைப்படைந்தார். உட னே நிலம் காற்று வாயு தோன்றிற்று. இம்மூன்றையு முஷ்ணமாக்கவே அக்கினி, வாயு, சூரியனுன சோதிஸர் தோன்றினுர்கள். மறுபடியும் இவைகளை உஷ்ணமாக்கவே மூன்று வேதங்கள் தோன்றிற்று. வேதங்கள் உஷ்ணமாக் கப்பட்டவுடன் மூன்று சுக்ரமான பூ, புவ: சுவ: புலஞு யிற்று. ருக்கினுல் ஹோத்திரி யஜுஸால் அத்வர்யு, சாமனுல் உத்காத்திரியானுன். அப்பால் மூன்று சுக்கிரத் தால் பிராமண யக்ஞத்தைச் செய்தான். 11. 5. 8. 1. 7.

## 37. சத்துரு

விரோதி நல்ல திசையை யடைந்தால் உங்களுக்கு மிகவும் நன்மையே. எப்படி?

நீங்கள் அவன் பருத்து பெருமையுடனுனல் உங்க ளுக்கு அவன் நல்ல உணவாக மாறுவான். நல்ல உண வைப் பிறகு வதைப்பதினுல் பெருமையை யடைவீர்கள். எப்படி?

சூரியன் நன்றாய்ச் சந்திரனை தின்றுவிட்டு அவனைச் சாரமில்லாமல் விட்டவுடன் அவன் மறுபடியும் தினந் தோறும் பருத்து பெருமையுடனுவான். அதனால் சூரியன் இப்பொழுது நமக்கு உணவுத்தயாராகிறதென சந்தோஷமுடனுகிறான். 1. 4. 4. 20.

## 38. சத்துரு சம்ஹாரம்

இந்திரன் விருத்திராசுரனைக் கொல்லுங்கால் அவனுடைய வச்சிராயுதம் நான்கு துண்டாயிற்று. இரண்டு யக்ஞ பூமியான பிராமண கூட்டஞ் சென்றன. அவை பலி பீடமும் மரக்கத்தியுமாகும். வேறு இரண்டும் அம்பும் ரதமுமாய் அரசர் நிலையஞ் சென்றன. இவ்விரண்டினுலேயே பிராமணர்களும் அரசர்களும் விருத்திராசுரனைக் கொல்லுகிறார்கள். 1. 2. 4. 16.

## 39. அஸ்வமேத யாகம்

ஆதியிலே அசுவமேதயாகம் என ஒன்று செய்வார்கள். அசுவம் என்றால் குதிரை. குதிரையை அவிழ்த்து அதை உலக முழுவதும் சுற்றவிட்டு விடுவார்கள். அதை வரவேற்பவன் குதிரையின் சொந்தக்காரனின் நண்பனுகும். அவனைத் தலைவனுகவும் மதிக்கிறேன் என்பதாகும், ஆனால் அதைப் பிடிப்பவன் சொந்தக்காரனின் விரோதியாவான். அதுவுமன்னியில் என்னை ஜயிக்கவும் என அவன் சொல்வதுபோலாகும். எவன் ஒருவன் குதிரையை அவிழ்த்துவிட்டு அது உலகமுழுவதும் சுற்றியபோதிலும் அதைப் பிடிப்பாரில்லையோ, அல்லது பிடித்தபோதிலும்

பிடித்தவனை ஜயிக்கும் வன்மை எவனுக்கு உண்டோ அவனே அசுவமேத யாகம்செய்ய அருகனாகும்.

1. அதை யார் செய்ய வேண்டும் ?

அதை யாரும் செய்யலாம். ஆனால் உலகத்தை ஜயிக்கும் சக்தியுள்ள புருஷர்களே செய்யவேண்டும். அவரையே சக்கரவர்த்தி என சொல்லுவது. 13. 1. 6. 3.

2. அசுவமேதம் செய்வதால் தோன்றும் பயன் என்ன ?

1. பிரமவர்சஸு அதிகரிக்கும்.

2. போர்புரியும் வீரர்கள் தோன்றுவார்கள்.

3. புஷ்டியான பசுக்களை அடைவாய்.

4. காளைகளும் ஜந்துக்களும் அபிவிருத்தியாகி எங்கும் எவர்களும் துரிதமாய்ச் சத்திய உண்மையை அறிவார்கள்.

5: ஜயகோஷ சனங்கள் செம்மையாவார்கள்.

6. யௌவன புருஷர்கள் அதிகரிப்பார்கள்.

7. நமது நிலம் நமக்கு சாசுவதமாகி நாம் எங்கும் பாதுகாப்படைவோம். 1. 3. 2. 9. 1. 10.

---

## 40. அசுவமேத ரகசியம்.

1. அசுவமேதம், யாகங்களில் எந்த நிலையைச் சேர்ந்தது?

அசுவமேத யாகம் எல்லா யாகங்களிலும் சிறந்தது.

2. இந்த அசுவமேத யாகத்திலே குதிரை ஆடுமாடுகளை ஏன் கம்பங்களில் கட்டுகிறார்கள் ?

இவைகளை கட்டும் புரோகிதன் தலைவரின் சைன்யங்களை தீட்சணியமாய்ச் செய்து பயமளிக்கும் நிலையிலே தயாராய் வைத்திருக்கிறேன் என்பதை அச்செயல்கள் காட்டும்.

3. குதிரையின் முன்னிலையிலே அக்கினிக்குப் புனிதமான ஆட்டை நிறுத்துவதின் சூட்சமமென்ன ?

தலைவனின் சத்துருக்களை ஜயிக்கச்செய்யும் அனலை கொழுந்துவிட்டெரியச் செய்யவும் என்பதாகும்.

4. சரஸ்வதி எனப்படும் பெண் ஆட்டை குதிரையின் வாய் கீழே ஏன் வைக்கவேண்டும் ?

ஆண்கள் பெண்களை எப்பொழுதும் யுத்தகளத்திலும் காப்பாற்றுவேன் என பிரதிக்ஞை செய்வதைக் குறிப்பதற்காகும்.

5. இரு ஆடுகளை குதிரையின் முன் பாதங்களில் சற்றுநேரம் ஏன் கட்டவேண்டும்.

தலைவன் இரு புஜபலமுடனுக வேண்டும் என எச்சரிக்கை செய்வதற்காகும்.

6. ஒரு கருப்பாட்டை சோமனுக்கும் பூஷணனுக்கும் எனச்சொல்லி குதிரையின் நாபியினருகில் ஏன் நிறுத்தவேண்டும் ?

சோமனும் பூஷணுமான இப்பெருமைவாய்ந்த பூமியிலே நாம் நிலையாகவேண்டுமென்பதை அறிவதற்கேயாகும்.

7. குதிரையின் இருபக்கங்களின் கருமையும் வெண்மையுமான ஆடுகள் எதற்கு ?

அவ்விரண்டாடுகள் சூரியன் சந்திரன் எனச் சொல்லப்படும். சத்துருக்களிலிருந்து நம்மைக் காப்பதற்கான

கவசங்களை அணிய வேண்டுமென்பதாகும். நமது பாதங்களையும் நன்ருய்ப் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்பதாகும்.

8. இன்னம் சில செய்கைகளின் சூட்சமங்களைச் சொல்லவும் ?

வாயுவைப்போல் உயர்ந்த ஸ்தானத்திலாகி, பசுவைப்போல் துரிதமாகி, விஷ்ணுவைப்போல் யக்ஞமாகி சத்துருக்களை ஜயிக்கவேண்டும் என்பது.

9. குதிரையைச் சுற்றி 15 கிரகங்களும் பல பலிகளும் எதற்கு ?

பதினைந்து விதமான ஆயுதங்களைக்கொண்டு நம்மை காப்பாற்றிக்கொள்ளவும் சத்துருக்களை அழிக்கவும் என்பதற்கும் பல பலிகள் பல சூழ்ச்சிகளால் எப்படியாவது சத்துருக்களைக் கொல்லவேண்டு மென்பதற்கேயாகும்.

13. 2. 2. 1. 18.

---

## 41. பருவங்களின் உண்மை

தேவர்கள் ஒருகாலத்தில் பருவங்களுக்கே இனி ஆகுதி அளிப்போம் எனச் சொன்ஞர்கள். அதைக் கேட்டவுடன் அக்கினி சொன்னதாவது :—

எனக்கு முதன்மையாக பலியளிப்பதுண்டே? இனி என்ன செய்யப்போகிறீர்கள் என்ருன். சரி உங்களைத் துரத்தப் போவதில்லை என்றவுடன் அப்பால் அக்னியானவன் பருவங்களிடம் சென்று அவர்களை அழைத்தான். பருவங்கள் வந்து அக்கினியுடன் ஆகுதியைப் பெற்றுக் கொண்டார்கள்.

அதனல் பருவங்களுக்குண்டாகும் லாபமென்ன?

அக்கினியின் உதவியினுல் செடிகளை பக்குவமாக்கி தானியங்களை புலனுக்குவார்கள். 1. 6. 1. 11.

## 42. வருஷயக்ஞம்

வருஷத்தையே யக்ஞமெனச் சொல்லுவார்கள். பருவங்கள் புரோகிதர்கள். ஆகுதிகள் மாதங்கள். ஆகுதி பாண்டங்கள் பட்சங்கள். இரவுபகலே கர்த்தாக்களாகும்.

இந்த யக்ஞத்தால் லாபமென்ன?

ஒரு வருஷத்தில் செய்வதை எல்லாம் வருஷம் முடிந்ததும், அந்த யக்ஞத்தால், பயனை அனுபவிப்பான். பருவ காலங்களில் செய்வதை செய்து வந்தால் அனைத்தையும் ஒருவன் அடைவான். அப்படியே மாதம் பட்சம் இரவு பகலில் ஒருவன் செய்யவேண்டியதைச் செய்தால் யக்ஞத்தின் பயன்களை யெல்லாம் பெறுவான்.

இந்த யக்ஞத்தை எழுச்சியாக்கும் பாக்கள் ஏதேனு முண்டோ? உண்டு, அவையாவன:—பூமி, அனல், காற்று, வாயு, வானம், சூரியன், சந்திரன், மனது, மொழி, பக்தி, பிரமம்.

இவைகளை பயன் செய்தால் எல்லா திசைகளையும், சுவர்க்கத்தையும் பெற்று பூமியிலும் நிலையாவான். இந்த யக்ஞத்திற்கு நெய் ஆகுதிகள் எவை? தேஜஸு, கண்ணியம், புகழ், ஓஜஸு, ஐசுவரியம்.

இவ்வாகுதிகளாலாகும் பயனென்ன? அவைகளிலுள்ள வன்மைகளை அடையலாம். 11. 2. 7. 33.

## 43. தனூனபதன்

தனூனபதனின் கதை உங்களுக்குத் தெரியாவிடில் இதை கவனமாய்க் கேட்கவும்?

அதிதிகளுக்கு ஒருசமயம் பூஜை செய்தவுடன் தேவர்களுக்குள் சண்டை தோன்றிற்று. தேவர்கள் நான்காய்ப் பிரிந்தார்கள். அக்கினி வசுக்களோடும், சோமன் ருத்திரனோடும் வருணன் ஆதித்யனோடும் இந்திரன் மருத்துக்களோடும் சேர்ந்தார்கள். ஆனால் பிரஹஸ்பதி அனைவருடனும் சேர்ந்தான். இவர்கள் இப்படி பிரிந்தவுடன் அசுரர்கள் அவர்களிடம் நுழைந்தார்கள். இதைக் கண்டவுடன் தேவர்கள் கலங்கி நமக்குக் கேடு வந்துவிட்டது. அசுரர்கள் நம்மிடம் நுழைந்துவிட்டார்கள். நாம் சத்துருக்களுக்கிரையாகி விடுவோம். இனி ஒவ்வொருவரிடமுள்ள நல்ல குணத்தையே நோக்குவோம் என ஒப்பந்தம்செய்து கொள்ளுவோம் என பரஸ்பரம் தீர்மானமானார்கள்.

சரி நம்மில் பெரியவனுயுள்ள இந்திரனையே தலைவனையாக்குவோம் என நிச்சயஞ்செய்து அனைவரும் அவனுக்கு தலைமைபதவியளித்து, அவரவர்களுக்குள்ள பிரியமான வடிவங்களையும் விருப்பமான வன்மைகளையும் ஒன்று சேர்த்து கீழே வைத்து நாம் இன்று செய்த ஒப்பந்தத்திற்கு தனூனபதனை திடமெனப்படும் காற்றே சாட்சியாகும். இதற்கு விரோதமாய் செல்லுபவனை அவனுக்கிரை யாக்குவோம் என சத்தியம்செய்து கொண்டார்கள்

காற்றை ஏன் சாட்சியாகச் செய்து கொண்டார்கள்.

காற்றை ஒவ்வொருவரிடமும் பிராணன் அபானனையுள்ளான். அதனால் அவனுக்கு எதுவும் தெரியும். மனி

தனே! நீமனத்தில் நினைத்தால் அது சுவாசத்தில் செல்லும். சுவாசத்தினின்று காற்றில் செல்லும். காற்றானது தேவர்களிடம் அவ்வுண்மையைத் தெரிவித்துவிடும். அதனால்தான் அவர்கள் காற்றை சாட்சியாக செய்து கொண்டது.

தேவர்களுக்கு இன்னம்துணையாயிருந்தவர்கள் யார்? சத்தியத்தைச் செத்தாலும் சொல்லத்தவறுவதில்லை என்னும் தீர்மானமே.

இதனால் அவர்களுக்குண்டான லாபமென்ன? அசுரர்களால் ஜயிக்க முடியாமலாய் விட்டார்கள்.

தேவர்களின் பிரியமான வடிவங்களும் விருப்பமான வன்மைகளும் எவை? அவைகள் யெல்லாம் ஒன்றுசேர்த்தால் சாமன் எனசொல்லலாம். அதுவே சத்தியத்தின் பலவடிவங்களாகும்.

அவர்களின் தலைவனான இந்திரன் யார்? அவன்தான் நாம் பார்க்கும் சூரியன். இந்த சூரியன் ஆதிகாலத்திலே கருமையாகவே யிருந்தான். ஆனால் தேவர்கள் எல்லாம் அளித்தவன்மையினாலேயே இப்பொழுது அவன் வெண்மையாய் எரிகிறான். தனூனபத்தான காற்றை சாட்சியாக செய்த தேவர்களின் ஒப்பந்தமான இதையே தனூனபத்கதை எனச் சொல்லுவது. 3. 4. 3. 2

---

## 44. ருத்திரர்கள்.

பிரஜாபதிக்கு ஒருமுறை அங்கங்கள் எல்லாம் தளர்ந்துவிட்டது. அப்பொழுது தேவர்கள் அவனிடமிருந்து நீங்கினார்கள். ஆனால் கோபம் (மன்யு) என்னும் தேவரே

அவரிடமிருந்து நீங்கவில்லை. அவரே விரிந்து பிரஜாபதியால் எங்குமானார். பிரஜாபதி அப்பொழுது அழுதான். அவன் கண்துளி மன்யுவின்மேல் விழுந்து 100, 1000, 100000 சமான ருத்திர தலைகளோடாயிற்று. இன்னும் துளிகள் உலகமெல்லாம் பரவி கணக்கிலடங்காத ருத்திரர்களானார்கள்.

அந்த லட்சக்கணக்கான ருத்திரர்கள் கைகளில் நாணேற்றிய வில்லிருந்ததால் தேவர்கள் அவர்களைக் கண்டு நடுங்கினார்கள். உடனே பிரஜாபதியினிடஞ் சென்று ருத்திரனைக் கண்டு எங்களுக்கு பயமாயிருக்கிறதெனச் சொல்லவே, அவர்கள் பசியுடனிருக்கிறார்கள் பசியை தணிக்கவும் என விடையளித்தார். பிறகு உணவளிக்கப்பட்டவுடன் ருத்திரர்களும் திருப்தியானார்கள்.

அவர்களுக்கு எங்கே அளித்தார்கள்? எந்த உணவை?

கால், முட்டு, நாபி, உச்சி, திருவாய் எனப்படும் மூன்று உலகங்களிலும் அளித்தார்கள்.

ருத்திர கோபத்திற்கு கை நல் வரவு கூறினார்கள். ருத்திரனை க்ஷத்திரியனுக்கு ஆட்களை அளித்து திருப்தி செய்தார்கள். ருத்திரசம்பந்தமான வீரம் கோபம் அனைத்தையும் அவசியமென வணங்கினார்கள். நல்லது கெட்டது பார்க்கும், நாசஞ் செய்யும் அவர் குணத்தை நாடினார்கள். அப்படியே நீல சிகப்பு ருத்திரன் (செடி கொடி) காலங்களிலுள்ள ருத்திரன், சமுத்திரம் முதலியவைகளிலுள்ளவர்களுக்கும் திருப்தி செய்தார்கள். இவைதான் அவர்களளித்த உணவு.

எப்படி திருப்தி செய்தார்கள்? எனக்குப் பிரிய மில்லையே?

நாம் வெறுப்பவனையும் நம்மை வெறுப்பவனையும் ருத்திரன் வாயில் அளிப்பதே அவர்களுக்களிக்கும் உணவாகும்.

ருத்திரன் எப்படி இருப்பான்? அவன் அஸ்திரங்களைப்பற்றியும் நீங்கள் கூறவேண்டும்.

ருத்திரர்கள் எங்கும், எல்லாவடிவங்களிலுமிருப்பதால் அவனைப் பரிபூர்ணமாய்ச் சொல்லுவதென்பது என்னால் முடியாது. ஆனால் சிலவற்றை சொல்லுகிறேன்.

வானத்திலுள்ள ருத்திரர்களுக்கு மழையே அஸ்திரமாகும். வாயுவிலுள்ள ருத்திரர்களுக்கு காற்றே அஸ்திரமாகும். சகத்திலுள்ள ருத்திரனுக்கு உணவே அஸ்திரமாகும். 9. 1. 1.

---

## 45. சிருஷ்டி.

ஒருகாலத்தில் மனுவினிடம் தேவர்கள் சலம்கொண்டு வந்தார்கள். அவர் சலத்தினால் கைகளைக் கழுவிக்கொள்ளுங்கால் மீன் ஒன்று தோன்றி நீர் என்னைக் காப்பாற்றினால் நான் உங்களை காப்பாற்றுவேன் எனச் சொல்லிற்று.

நான் எப்படி உன்னைக் காப்பாற்றுவது?

நான் சிறியதாயிருக்கும்வரை பெரிய மீன்கள் எல்லாம் என்னைப் புசித்துவிடும். அதுவரை என்னை சாடியிலே வைக்கவும். அப்பால் நான் வளர்ந்த உடன் என்னைக் குளத்தில்விடவும். பிறகு என்னை சமுத்திரத்தில் விடவும். அப்பொழுது பெரிய மீன்களால் எனக்கு யாதொரு தீமை

யும் தோன்றுது. மனுவும் அப்படியே செய்து கடைசியிலே மீனை சமுத்திரத்தில் விட்டார்.

உடனே சில நாள்கள் பொறுத்து மனுவை மீன் நோக்கி, கொஞ்ச காலத்தில் பெரிய வெள்ளமொன்று வரப்போகிறது. நீங்கள் பெரிய கப்பலொன்றைத் தயார் செய்யவும். வெள்ளம் அதிகரித்தவுடன் நீங்கள் கப்பலேறிவிடவும். நான் அப்பால் உங்களைக் காப்பாற்றுவேன் எனச் சொல்லிற்று. அப்படியே பெரிய வெள்ளமொன்று வந்து, மனுவானவர் கப்பலிலே ஏறியவுடன் தன்னுடைய கொம்பில் கப்பலைக் கட்டி வடபுறம் போகச் செய்தது. கடைசியிலே வெள்ள மிரங்கிற்று. மிகுதியாயிருந்தவர் மனுவொன்றே. அப்பால் மனு பிரஜைகளை விரும்பி தவஞ் செய்தார். சலத்தினின்று ஒரு ஸ்திரீ தோன்றினள். பிறகு மித்திரனும் வருணனும் அவளுடன் சேர்ந்து சிருட்டிகளை எல்லாம் செய்தார்கள். 1. 8. 1. 1. 9.

---

## 46. சிருட்டிக்கிரமம்.

பிரஜாபதி சிருட்டித்து தளர்ந்தவுடன் களைத்தான். உடனே அவனிடமிருந்து பிராணன்கள் நீங்கிற்று. தேவர்களாக மாறின அவர்களைக்கண்டு நீங்கள் எப்படி என்னிட மிருந்து சென்றீர்களோ அப்படியே் திரும்பிவரவும் என்றான். உடனே அவர்கள் எங்களுக்குத் தேவையான உணவை சிருட்டிக்கவும் என்றார்கள். முதலில் அக்கினி வாயு சூரியன் திசைசந்திரனைச் செய்தான். பிறகு இந்த ஐந்திலிருந்து சுவாசம் மனது கண் காது மொழிகள் உண்டாயிற்று.

பிறகு இவைகளிலிருந்து மற்றப்பொருள்கள் எப்படி உண்டாயிற்று?

பிராணனிலிருந்து வசந்தம் என்னும் பிள்ளை, காயத்திரி என்னும் பெண், காயத்திரியிலிருந்து உபாம்சு காயத்திரி, உபாம்சுகிரகம், திருவிருதிரதந்தரசாமன் முதலியவைகளாயிற்று.

மனத்திலிருந்து வெயிற்காலம் என்னும் பிள்ளை, திருஷ்டுபு என்னும் பெண், அவளிடமிருந்து சுவரம், இவனிடமிருந்து சுவாசாமன். இவனிடமிருந்து அந்தர்யாமகிருஹம், அந்தர்யாம பஞ்சதசை, பிரஹத் பஞ்சதசம், பிருஹத்பிருஷ்டமாயிற்று.

கண்ணிலிருந்து மழை மழையிலிருந்து ஜகதிபெண், பெண்ணிடமிருந்து ருக்குசாமன், ருகசாமனிலிருந்து சுக்கிரம், சுக்கிரகிரஹம், வைரூபசப்ததசன் வைரூப பிருஷ்ட மாயிற்று.

செவியிலிருந்து கனிகாலமும் அனுஷ்டுபு என்னும் பெண்ணும் தோன்றினள். பெண்ணிடமிருந்து ஐதசாமன்-மந்தின், மந்தினகிரகம் — அவளிடமிருந்து ஏகவிம்சம் வைராஜ பிருஷ்டமாயிற்று.

மொழிக்கு பிள்ளை குளிர்காலம். பெண் பங்தி என்பவளும் பிறந்தாள். அப்பெண்ணிடமிருந்து நிதனவத் பங்தி நிதனவத் சாமன் ஆகாயாணகிருகம், திரிணவம், திரிதிரும்ச சாமன் சுகவாம், ரைவதசாமன் பிருஷ்ட முதலியவைகளாயிற்று.

இவைகளை எல்லாம் சிருஷ்டித்து அக்கினிக்கே அனைத்தைய மளிக்கிறார்.

ஏன் அக்கினிக்கு அளிக்கிறார்?

உணவிற்காக.

இவர்களை எல்லாம் எங்கே சிருட்டிக்கிறார் ?

அக்கினியை முன்புறமும், வாயுவை தென்புறமும், சூரியனை பின்புறமும், திசையை எப்புறமும் சந்திரனை உயரத்திலும் வைப்பார். ச. பி. 8. 1. பிரா. 1. 2.

---

## 47. வாயுவின் உண்மை.

விதேகமாதவன் என ஒரு அரசனுண்டு. அவனை கௌதமரான அவர் புரோகிதர் அணுகி அக்கினியே உன்னை மூட்டுகிறேன் எனச்சொன்னார். அதற்கு அரசன் விடையளிக்கவில்லை. உடனே கௌதமர் நீர் ஏன் மௌனமாயிருக்கவேண்டும்? உமது அக்னியை வணங்குகிறேன் என்றார். அதற்கும் அவன் பதிலளிக்கவில்லை. உடனே வெண்ணெயை விரும்புபவனே எனச் சொல்லியவுடன் அரசன் வாயினின்று கீழே விழுந்தது. விழுந்து உடனே அருகிலிருந்த நதிகளையெல்லாம் பருகி சென்று விட்டது.

கௌதமருக்கு அரசன் மௌனமாயிருந்ததின் காரணமும் தெரிந்து முகத்திலிருந்து விழுந்த அனல் யாரென்றான் ?

அதற்கு அவர் அவன்தான் வைசுவாநரன் என விடையளித்ததும், அவன் ஏன் நதிகளையெல்லாம் பருகினான் என வினவியதற்கு, நிலங்களில் தானியம் விளைய அப்படி செய்தான் என விடையளித்தார். 1. 4. 1. 10. 17.

---

## 48. பஞ்ச யக்ஞம்.

தினந்தோறும் ஐந்து யக்ஞங்களை ஒருவன் செய்ய வேண்டும்.

1. பூதயக்ஞம் பொருள்களுக்குச் செய்யும் கடமையாகும்.

2. அதிதிகளை திருப்தி செய்வது மனித யக்ஞம்.

3. பெரியார்களுக்கு மரியாதை செய்வது பிதுர் யக்ஞம்.

4. தேவரகசியங்களை அறிவது தேவயக்ஞம்.

5. பிரம்மமான வேத முதலிய எல்லா சாஸ்திரங்களையும் கற்பது பிரம்ம யக்ஞம். 11. 5. 6. 1. 4.

---

## 49. சந்திர ரகசியம்.

சந்திரன் என்பவன் எரியும் சூரியனே. அமாவாசையுமவனே. சூரியனால் பூர்ணமாய் நிறைந்துள்ள சந்திரனே பூர்ணமையாகும். அபூர்ண சந்திரன் என்பது ஒரு தோற்றமேயாகும்.

பூர்ண சந்திரன் என்பது நிறைந்துள்ள பூமியாகும். அபூர்ணசந்திரன் வானமாகும். ஏனெனில் அது இருப்பது போல் தோன்றுகிறது. பூர்ணசந்திரன் என்பது இரவாகும். ஏனெனில் பூர்ணமாய் நிறைந்துள்ளது. அமாவாசை என்பது தினமாகும். ஏனெனில் அது ஒரு தோற்றம்.

பூர்ணமி என்றால் உதானனாகும். ஏனெனில் அவனாலேயே நாம் நிறைந்துள்ளோம். அமாவாசை அபான

ளுகும். ஏனெனில் அவன் ஒரு தோற்றமே. இப்பூர்ணிமை பூஜ்ய சந்திரனே, புசிப்பவன் போஜனமளிப்பவனுவான். உதானன் அளிப்பவன் பிராணன் புசிப்பவன். பூர்ணசந்திரன் மனதாகும். அது நிறைந்தது. அமாவாசை மொழியாகும், ஏனெனில் இது தோற்றம். இந்த மனமொழிக்கு அளிப்பதே சந்திரன். அமாவாசைக் களிப்பதாகும்.

11. 2. 4. 1. 9.

---

## 50. சந்தஸு எங்கே?

காயத்திரி தலையாகும். திருஷ்டுபு மார்பு, அனுஷ்டுபு, தொடை, பிரஹதி, விலா எலும்பு, உஷ்ணீஹம், கழுத்து, பங்தி சிறகு, அதிசந்தஸு வயிறு, சந்தஸு உணவு மிருகங்களாகும். 8. 6. 2.

---

## 51. பொன் மயம்.

பிரஜாபதிக்குப் பொன் வடிவம் எனச் சொல்லுகிறார்களே, அது எப்படி இருக்கும்?

பொன் வடிவமென்றால் ரம்யமான வடிவம். ஏனெனில் பார்ப்பதற்கு இப் பொன் வடிவமான ரம்ய சொரூபம் ஆனந்தத்தை யளிக்கும். பிராணன்களையே அவன் பொன் வடிவமெனச் சொல்லுவது வழக்கம். 7. 4. 1. 16.

---

## 52. பிராணன் உணவு பலம்.

பிரஜாபதி படைத்தவுடன் பிராணன் அவனிடமிருந்து செல்ல முயன்றது. அதை உணவினுல் நிறுத்தினுன். இதனுலேயே உணவால் பிராணன் நிற்கும். உணவு

புசிப்பவன் சுவாசிப்பான். பிராணன் நின்றவுடன் உணவு அவனிடமிருந்து செல்லாரம்பித்தது. அதை சுவாசத்தால் நிறுத்தினான். இதனால் உணவு சுவாசத்தால் நின்றது. சுவாசிப்பவன் உண்பவனாவன்.

இவர்களிருவரும் நின்றவுடன் வன்மை அவனிடமிருந்த செல்லாரம்பித்தது. சுவாசம் உணவால் அதை நிறுத்தினான். இதனால் புசித்து சுவாசிப்பவன் பலமுள்ளவனாவான். பலமுள்ளவனுக்கு சுவாசமும் உணவும் தின்பவனாவான். இப்படி அந்த சக்திகள் எல்லாம் பரஸ்பரம் உதவியால் நிற்கும். இப்படிச் செய்தவுடன் தன்னுடைய ஆத்மாவிலேயே அவைகளை நுழையச் செய்தான். உணவு நுழைந்தவுடன் மற்ற தேவர்கள் எல்லாம் உடனே நுழைந்தார்கள். 7. 5. 1. 16. 20.

---

## 53. தங்க சரிதை.

பிரஜாபதி தவம்செய்து உஷ்ணமுடனானன். அந்த உஷ்ணத்தினின்று சலம் தோன்றிற்று. பிறகு சலம் உஷ்ணமாகி நுரையாயிற்று. நுரை உஷ்ணமாகி களிமண்ணாயிற்று. மண் சூடாகி மணலாயிற்று. மணல் சூடாகி குழாங்கல்லாயிற்று. அப்படியே அது சூடாகி, கல். அப்பால் உலோகம் தங்கமாயிற்று. 6. 1.

---

## 54. குமரன் கதை.

பிரஜாபதி சிருட்டியினின்று ஏதோ ஓடிற்று. அப்படி எட்டுமுறை ஓடவே அதிலிருந்து காயத்ரியாயிற்று. இதுவே பூவென்னும் பூமி எனப்படும் அஸ்திவாரமா

பிற்று. இந்தப் பூமியிலே பிரஜாபதி சாய்ந்து ஒரு வருஷம் உஷை என்னும் ஸ்திரியோடிருந்தான். அவனுக்கு குமரன் என்னும் ஒருபிள்ளை பிறந்தான். அவன் அழுதான். எனக்குப் பெயரிடவும் என்றபடியால் (ருத்) ருத்திரன். எனச் சொன்னவுடன் நான் அதைவிடப் பெரியவன்? என்றான். நீ சர்வன். (சலம்) இல்லை. நான் அதைவிடப் பெரியவன். நீ பசுபதி (செடி கொடிகள்). நான் அதைவிடப்பெரியவன். நீ உக்கிரன் (வாயுவாகும்). இல்லை நான் அதைவிடப் பெரியவன்? நீ அக்கினி நான் அதைவிடப் பெரியவன்? நீ பர்ஜன்யன் (மழை). நான் அதைவிடப் பெரியவன். நீ மகாந்தவன் (சந்திரன்). நீ ஈசானன் (சூரியன்). நான் அவைகளைவிடப் பெரியவன்? எனக்கு எட்டு வடிவமிருந்தபோதிலும் நான் இன்னமதிகமாகும். என அக்கினி எங்கும் சென்றுவிட்டான். இவனைத்தான் குமரன் என்பார்கள்.

---

## 55. மேன்மை வழி.

அசுரர்களும் தேவர்களும் சண்டை செய்தார்கள். சரி இனி ஆகுதியை நாமே புசிப்போம் என அசுரர்கள் அவர்களே புசித்தார்கள். இந்த அகம்பாவத்தினாலும் அறியாமையினாலும் கடைசியிலே சூன்யமானார்கள். ஆனால் தேவர்கள் பிரஜாபதிக்கு அளித்து மேன்மையாய் வளர்ந்தார்கள்.

---

## 56. மருத்துக்கள்.

வைசுவநரன் மனிதனில் (மருத்துக்களான) காற்றுடன் எப்படி சேர்க்கப்பட்டான் என்பதை நீங்கள் அறிவிக்க முடியுமா ?

மருத்துக்கள் மனிதனிடம் அளிக்கப்படுங்கால் ஏழு வகையாயிற்று. தலையின் நடுவிலே இரண்டுவகை காற்றை பிரஜாபதி உட்காரவைத்தான். இரண்டு பிராணன்களை நன்றாய்ச் சேர்த்து கண்களில் வைத்தான். அதைவிட அதிகமாய் நெருக்கி வேறு இரண்டு பிராணன்களை மூக்கிலே வைத்தான். பாக்கியான ஒன்றை இரகசியமாய் மொழியில் அமைத்தான்.

வைசுவாநரன் அதிகாரியானால் மருத்துக்கள் சைன்யங்களாகும்.

மருத்துக்கள் தேகத்தில் சென்றவுடன் தோன்றும் விசித்திரங்களை உரைக்கவும் ?

மருத்து கிழக்கிலே சென்றவுடன் ஏழு நதிகளாகவும், ஏழு பருவங்களாகவும், ஏழு மிருகங்களாகவும், ஏழு ரிஷிகளாகவும், ஏழு பிராணன்களாகவும், ஏழு சந்தஸாகவுமானான். தேவர்கள் மர்மமாய் மொழிவதால் நான் அதிகமுரைக்க விரும்பவில்லை. ஆனால் சூரியன் வைசுவரநானால் கிரணங்கள் மருத்துக்களாகும் என்பதை ஒருபொழுதும் மறக்காதே. 9. 3. 2. 1. 1. 26.

# 57. சாமன்

பிரஜாபதி எல்லா சீவர்களேயும் மரணம் தீமையி னின்று விடுதலே செய்துதான் சிருட்டி செய்வேன் என எண்ணினன்.

உடனே பிராணனிடம் நீயும் நானும் சேர்ந்துசிருஷ்டி செய்யலாமென்முன். சரி—நாம் இருவரும் கானம் செய் வோம் என சம்மதித்து, சிருட்டி செய்யலானர்கள்.

பிறகு மொழியோடு சேர்ந்து கானம் யக்ஞம் செய் தார்கள். ஜந்துக்கள் கர்ப்பமாயிற்று. பிரஜாபதியே தலேவ னவான். அப்பால், பிராணன், அபானன், உதானனேடு கானம் யக்ஞம் செய்தார்கள். பிராமணன் தோன்றினன். பிரம்மணஸ்பதியே தலேவனுகும்.

நான்கு பிராணன் மனதான ஐந்தோடு சேர்ந்து, கானம், யக்ஞம், செய்யவே கானம் சீவர்களாயிற்று. சீவர்களின் தலேவனே இவர்களுக்கு தலேவனுகும்.

தலேயிலுள்ள ஒன்பது பிராணனேடு கானம் யக்ஞம் செய்து ஏழு ரிஷிகள் தோன்றினர்கள். சிருட்டி கர்த் தாவே தலேவனுனன்.

ஏழு தலேயிலுள்ள சுவாசத்தோடும் இரண்டு கீழ் சுவா சத்தோடும் சேர்ந்து கானம் யக்ஞம் செய்யவே பித்ருக் கள் தோன்றினர்கள். ஆதித்தியர்களே அவர்களின் அதி காரிகளானர்கள். பத்து பிராணன் தேகமான 11 உடன் கானம் செய்யவே பருவங்களாயிற்று. பருவகாலங்களே அவர்களின் தலேவனுனன்.

13 உடன் (பத்து பிராணன், இரண்டு பாதம் தேகத்துடன்) கானம், யக்ஞம் செய்யவே மாதங்கள் தோன்றிற்று. வருஷமே தலேவனுனன்.

15 உடன் (பத்துவிரல், நாலுமுன்கை, தோள், நாபியின் உயர்பாகம்) கானம் செய்யவும் க்ஷத்திரியன் தோன்றினன். இந்திரனே அவர்கள் தலைவனானன்.

17 உடன் (பத்துவிரல், நாலு தொடை, இரண்டுகால் நாபியின் கீழ்பாகம்) வீட்டு மிருகங்கள் தோன்றிற்று: பிரகஸ்பதியே அவர்கள் தலைவனானன்.

19 உடன் (பத்து விரல், ஒன்பது பிராணன்) சூத்திரனும், ஆரியனும் தோன்றினர்கள். இரவும் பகலுமே அவர்கள் தலைவனானன்.

21 உடன் (பத்துவிரல், பாதவிரல், தேகம்) ஒருகுளம், 4 ஜந்துக்கள் தோன்றிற்று. வருணனே அவர்கள் தலைவனானன்.

23 உடன்(பத்துவிரல், கை, கால்விரல்) கானம் செய்யவே சிறு பிராணிகள் தோன்றிற்று. பூஷன் தலைவனானன்.

25 சாமனால் (பத்துவிரல் கை, பத்து கால்விரல், நாலு அங்கம், தேகம் ஒன்று) காட்டு மிருகங்களாயிற்று. வாயு தலைவன்.

27 சாமனால் (பத்து கை விரல், பத்து கால் விரல், நாலு அங்கம், இரண்டு பாதம் தேகம்) சுவர்க்கமும், சுகமும் பிரிந்தன. அப்பொழுதுதான் வசுருத்திரர், ஆதித்தியர்கள் பிரிந்தார்கள். அவர்களே தலைவர்களானார்கள்.

29 சாமனால் (பத்து கைவிரல், பத்து கால் விரல் ஒன்பது பிராணன்), கானஞ் செய்யவே மரங்களாயிற்று. சோமனே தலைவனானன்.

31 சாமனால் கானம் செய்யவே (பத்து கைவிரல்; பத்துகால் விரல், பத்து பிராணன், தேகம் ஜந்துக்களா

யிற்று. யவம் (சுக்கிலபட்சம்) அயவமே (கிருஷ்ண பட்சமே) அவர்கள் தலைவர்களானார்கள்.

33 சாமனால் (பத்து கைவிரல், பத்து கால் விரல், பத்து பிராணன்) கானஞ் செய்தபடியால் எல்லா சீவராசிகளும் சாந்தமுடனாயிற்று. பிரஜாபதியே அவர்கள் தலைவனானான்.

பிரஜாபதி இங்ஙனம் சிருட்டித்து தன்னிலேயே அவர்களை சேரச் செய்தான். 8. 4. 3. 1. 20.

## 58. மகத்சாமன்.

சூரியனின் சுற்று ஒளியே மகத் சாமனாகும். இவ்வுலகம் ருக்காகும். ஒளி சோதியே சாமன் சந்தஸாகும். அங்குள்ள மனிதனே யஜுராகும்.

## 59. விஷ்ணு

விஷ்ணு என்பது யக்ஞமாகும். அவன் பாத அளவால் தேவர்களிலுள்ள எல்லாவன்மையையும் (விக்ராந்தி) அடைந்து (விகிரமம்) அவர்களுக்களித்தான். முதல் அளவால் பூமியையும், இரண்டாவது அளவால் காற்றையும் மூன்றாவது பாதத்தால் சுவர்க்கத்தையும் பெற்றான்.

3. 6. 3. 3.

## 60. யக்ஞ ஜயமேன்?

பூமி முழுவதும் யக்ஞ பீடமாகும். இடிமுழக்கம் என்னும் யூபங்களினால் பூமியை ஜயித்து, அதற்கு தேவர்கள் அதிபதியானார்கள். சத்துருக்களுக்கு அணுவளவு

இடமளிக்காததினாலேயே இவர்களுக்கு இந்த ஜெயம் தோன்றிற்று. 3. 7. 2. 1.

---

## 61. நமக்கு ஏன் யக்ஞம்?

யக்ஞமென்பது புனிதமாகும். அது அமுத வடிவம். இதை அன்னியர்களுக்கு செய்பவன் அவர்களுக்கு அமுதத்தை அளிப்பவன் போலாவான். இவ்வமுதத்தை அளித்துவிட்டால் மிகுதியாயிருப்பது உயிரற்ற உடலே யாகும். அன்னியர்களுக்கு செய்து எனக்கும் ஒன்று செய்துவிட்டால் என்பாபம் போகாதோ? இல்லை. இது காய்ந்த மரத்திற்கு சலம் விடுவதாகும். பாப மன்னிப்பே இல்லை. 9. 5. 2. 14.

---

## 62. சலத்தின் கதை

சலம் தன்னுடைய ஓடும் சக்தியால் விருத்திரனைக் கொன்றான். விருத்திரனைக் கொன்ற என்னை தடுப்பவன் யார் என்னும் உற்சாகத்தோடே இன்னும் அவன் ஓடிச் செல்லுகிறான். (பாய்ந்தோடுகிறான்.)

இந்திரனுக்கு சலத்தைக் கண்டு கோபம் வந்துவிட்டது. உலகமே என் கீழாய்விட்டது. நீ யொருவனே எனக்கு கீழ்ப்படிவதில்லை என்றான்.

சரி நான் கீழ்ப்படிந்தால் எனக்கு நீங்கள் கொடுக்கும் வெகுமதி என்ன? இந்திரன் சோம அரசனின் முதல் துளியை அளிக்கிறேன் எனச் சொன்னான். உடனே அவன் அதைப் பெற்றுக்கொண்டு எனக்கு நிகர் எவரு

மில்லை என பூமியில் விட்டால் இங்குமங்கும் ஓட இப் பொழுதும் முயற்சிக்கிறுன். 3. 9. 4. 1. 5.

## 63. மாமிச ரகஸ்யம்

ஆதியிலே யக்ஞம் செய்யுங்கால் மனிதனை பலி யளிக்க தேவர்கள் நினைத்தார்கள். அவனை எண்ணிய உடன் அவனிடமிருந்த யக்ஞசாரம் சென்று விட்டது. உடனே ஒவ்வொரு மிருகங்களாக எல்லா மிருகங்களையு மளிக்க எண்ணியவுடன் அவைகளிலிருந்து யக்ஞசார மெல்லாம் சென்று விட்டன. எங்குசென்றது எனதேடிய பொழுது அவை பூமியிலே சென்று மறைந்துவிட்டன. பூமியிலிருந்து எடுத்தவுடன் அது நெல்தானிய மாயிற்று. இந்த நெல் தானியத்தை யளிப்பதே மிருகபலி யளிப்பது போலாகும் என ரிஷியொருவர் சொல்லியதற்கு அது எப்படி என சீடன் வினவினுன். அதற்கு ரிஷி பதிலளித்த தாவது: அதன் நுணுக்குக்கள் ரோமம் போலாகும். சலத்துடன் கலந்தால் அது மாமிசம் போலாகும். சுட் டால் அது எலும்பாகும். நெருப்பிலிருந்து எடுத்து நெய் யுடன் கலந்தால் தாதுபோலாகும். 1. 2. 3. 7. 9.

## 64. புகழ்வழி

புகழை அடையவும் பெருமையுடனுகவும் புவியின் அதிபதியாகவும் வழி எது ?

யஜுர் என்னும் உண்மையை காணவேண்டும்.

(அ) அதன் உண்மை யென்ன ? யஜுரே இவ்வுல கத்திலுள்ளவர்களை உற்பத்தி செய்யும். இதை வாயுவென

அழைப்பார்கள். இந்த யஜுருக்குமுன் அக்கினி உள்ளான். சூரியன் அவன் முன்சுற்றிய எதையும் அசைக்கச் செய்வான்.

(ஆ) யத் என்றால் சுவாசம். ஜுஸ் என்றால் தேகத்தி லுள்ள ஆகாசம். இதுவே ஒவ்வொன்றையும் உற்பத்தி செய்யும்.

(இ) யஜுஸ்ஸென்றால் உணவு. உணவினாலேயே ஒருவன் அசைவான். மனமே முன்னணி யுள்ளான். கண் என்பவன் அசைந்து, தேகம் சலனம் போலா கும். இது ஒரு யஜுஸின் ரகஸியம். இதை அறிபவன் சனங்களின் தலைவனாவான். எதை செய்தபோதிலும் இரகசியமாய் ஒருவருமறியாமல் செய்யவும். அவன் புகழ் கீர்த்தியாகி தலைவனாவான். 10. 3. 5. 1. 16

---

## 65. அரசன் கதை

உண்மையான அரசன் யார்? பிரஜைகளை உற்பத்தி செய்யும் பிரஜாபதியே. மக்களை செய்ய சக்தியற்றவன் ஒருபொழுதும் அரசனாகான்.

அரசனா தேசத்தை தாங்குகிறான்? இல்லை. ஆண் பெண் எனப்படும் தேவர்களே அரசாங்கத்தை தாங்கு கிறார்கள். ஆண் பெண்களால் மக்கட்பேறு இல்லையேல் பிரஜைகள் ஏது? பிரஜைகளில்லையேல் அரசனுண்டா? இவ்வாதரவிற்குத் துணை எவை? (1) முதன்மையாக ஆண் கள். ஏனெனில் அவர்களிடம் அதிக வன்மையுண்டு (2) இரண்டாவது சத்தியத்தில் சாய்வதான சட்டம். (3) நெருங்கி ஐக்கியமாவது. (4) உபாசிக்க தகுந்ததை நாடு

வது. (5) துரிதமாயுள்ளதை பற்றுவது. (6) யக்ஞம். (7) பெரிய பிரஜாபதியை நாடுவது.

9. 4. 1. 5.

## 66. மரண தேவதை

மரணதேவதை ஒன்று அல்லது பல தேவதைகளா? ஒன்றுமுண்டு, பலதேவர்களுமுண்டு. சூரியனிலுள்ள ஒருவனே அவனாகும். சீவப்பொருள்களில் எங்கும் அவன் பிரிந்திருப்பதால் அவன் பல தேவதைகளாகும்.

அவன் அருகிலா தூரத்திலா? தூரமும் சமீபத்திலுமாகும் பூமி இங்கு நம்மிடம் சமீபமாயிருப்பதால் அவன் அருகிலாவான். அங்குள்ள சூரியனிருப்பதால் தூரத்திலுமாவான்.

அவனைப்பற்றி இன்னமுரைக்கவும்?

சூரியனிலுள்ள அவன் மரணம் உனது வலது கண்ணிலிருப்பான். அவன் மனத்திலே நன்றாய் அழுந்திருப்பான். அவன் அங்கிருந்து வெளிக்கிளம்புவதையே இம்மனிதன் மரித்துவிட்டான் எனச்சொல்லுவது. அவனே பிராணனாயிருந்து வலது கண்ணில் பிரஜைகளை எல்லாம் ஆட்சிபுரிகிறான். ஒருவன் தூங்குங்கால் பிராணன் ஒருவனாயிருந்தபோதிலும் எழுந்தவுடன் பற்பல புலன்களாய் பல தேவர்களாகிறான்.

உணவிலே அவன் மறைந்துள்ளான். தேகத்தின் சுக்கிலம் ஒடுங்குங்கால் அவன் மின்னுகிறான். அங்கு பார்க்கும் ஒளிச்சுக்கிரமே உணவாகும். அங்குள்ள மனிதனே புசிப்பவன். அவன் உணவிலே மறைந்துள்ளதால் ஒளி

வீசுகிறுன். தேகமே உணவு, வலதுகண் புருஷன். புசிப்ப வன் அந்த உணவில் மறைந்துகொண்டு அவன் ஒளி வீசு கிறுன்.

10. 5. 2. 1. 20.

## 67. மரண ஜயம்

தேவர்கள் ஆதியிலே மரணத்திற்குட்பட்டே இருந் தார்கள். ஆனுல் அழியாப்பொருளும் அனைத்துமான வருஷத்தைக்கண்டு அதை ஜயித்து அமுதமானுர்கள். அப்பால்தான் அவர்கள் மரணத்தை ஜயித்தார்கள்.

11. 1. 2. 12.

## 68. காயத்திரி யார்?

பிரஜாபதியினிடமிருந்து சந்தஸுக்கள் எல்லாம் மிருக வடிவமெடுத்துச் சென்றுவிட்டன. உடனே மிகுதி யான தான் எனப்படும் காயத்திரியால் அவைகளை எல் லாம் தன் வசமாக்கிக் கொண்டான்.

காயத்திரி என்னும் மொழியால் மிருகங்களை அவன் எப்படி ஜயித்து தன் வசமாக்கிக் கொள்ளமுடியும் என ஒரு சிறுவன் கேட்டவுடன், வேதரிஷி, காயத்திரி என்ருல் தலை (மூளை) வீரம் ஆதரவு அளவற்ற சக்திக்குப் பெயர். இவைகளால் எல்லாவற்றையும் ஜயித்து தன் வசமாக்கிக் கொள்ளுவது எப்படி கஷ்டமாகும் என எதிர்வினு வினவி சந்தேகம் விளக்கினுர்.

8. 2. 4. 8. 14.

## 69. அழியாத தேவர்

ஆதிகாலத்தில் பெரியசண்டை யொன்று நடந்தது. அந்தச் சண்டையிலே அசுரர்கள் தேவர்களை எல்லாம் அடித்துத் துரத்தி விட்டார்கள். ஆனால் சூரியன் சந்திரன் என்பவர்களை மாத்திரம் துரத்தமுடியவில்லை. எத்தனை துரத்தியபோதிலும் முடியாமல் அவர்கள் காலில் விழுந்து உங்களை நாங்கள் கீழ்ப்படிகிறோம். எங்களால் ஜயிக்க முடியவில்லை என நமஸ்கரித்தார்கள். அதற்கு சூரிய சந்திரர்கள் எங்களை துரத்துவதென்பது உங்களையே துரத்திக்கொள்வது போலாகும். நாங்கள் இல்லையேல் நீங்கள் பார்க்க முடியாது. சூரியனாய் நானே எதையும் புசிப்பவனாகும். சந்திரனாய் நானே உணவாயிருக்கிறேன். எங்களை ஒருவராலும் ஜயிக்க முடியாது. நாங்கள் நித்தியமாயிருப்போம் எனச் சொன்னவுடன் அசுரர்கள் மௌனமானார்கள். 4. 2. 1. 5.

---

## 70. அமுதமடைந்த வழி

ஒரு காலத்தில் அமிருதம் தேவர்களிடமிருந்து நீங்கிற்று. உடனே அதை அடைய வழி எது என நாடவே தவமும் முயற்சியே அவசியமென தேவர்கள் அறிந்தார்கள்.

உடனே முயற்சியாகி தவஞ்செய்யலானார்கள். ஆனால் தவஞ் செய்யவேண்டுமானால் தீட்சை அவசியமென அறிந்து தீட்சையடைந்து சற்று பாலே பருகி முயற்சியிலாகவே அமுத கோஷம் செவியில் விழுந்தது. சரி உணவைக் குறைத்ததினால் அமுதகோஷம் விழுந்தபடியால்

இன்னம் பால் பருகுவதைக் குறைக்க வேண்டுமென எண்ணி படிப்படியாய் பால் குடிப்பதை நிறுத்தி கடைசியில் உபவாசமுமானார்கள். பரிபூர்ணமாய் பட்டினியிருந்த தினத்திலே அமுதத்தைக் காண முடிந்தது.
9. 5. 1. 1. 8.

## 71. இந்திரன் விருப்பம்

இந்திரனவன் உலகத்திலுள்ள உணவையெல்லாம் கண்டு பிரஜாபதி நமக்கு அவசியமில்லை என அவனிடமிருந்து நீங்க விரும்பினான். பிரஜாபதி ஏன் என வினவியதற்கு உன்னிடமிருந்து நான் பிரிவது நிச்சயம். ஆனால் நான் உன்னிடம் இருக்கவேண்டுவது அவசியமானால் நீயே எனக்கு இங்குள்ள எல்லா உணவின் இரசத்தை அளித்து நீயும் என்னிடம் நுழையலாமென்றான். சரி என பிரஜாபதி தலையை அசைத்து உணவின் இரசத்தை எல்லாம் கிரணங்களாய்ச் செய்து இன்னம் தினந்தோறும் (சூரியனை இந்திரனில்) நுழைந்த வண்ணமாகவே இருக்கிறான்.
8. 5. 3. 2. 3.

## 72. ஜயம் எப்படி ?

பிரஜாபதி இவ்வுலகங்களை ஜயிக்க எண்ணினான். பட்சிபோலுள்ள இத்தேகத்தை அக்கினிக்குப் பீடமாக்கி அதனால் சகத்தை ஜயித்தான். இரண்டாவது பறவை போலுள்ள தேகத்தை மகாவிருதசாமனால் செம்மையாக்கி காற்றை ஜயித்தான். மூன்றாவதாக பட்சிபோலுள்ள மகத் உக்தசாமனை செம்மையாக்கி வானத்தை

ஜயித்தான். இம்மூன்றையும் ஜயித்ததினால் உலகங்களை யெல்லாம் ஜயித்தவனானான்.

பிரஜாபதி புவியை எல்லாம் ஜயிப்பதில் அதிசயமு மில்லை. எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையுமில்லை. எனக்கு இக் கதையினால் லாபமென்ன ?

அக்கினி பீடமென்பது உன் மனமாகும். மகா விருத சாமன் என்பது சுவாசம். மகத் உக்தமென்பது மொழியாகும். இவைகளை அறிந்து செம்மையாக்கி மூன்றையும் இணைத்து சென்றால் நீயும் இதன் மூன்று உலகமான பூமி, காற்று, ஆகாசத்தை ஜயிக்கலாம். இதைவிட வேறு லாபம் என்ன வேண்டும்? 7. 10. 1. 2. 1. 9.

---

## 73. தேவயுக்தி

தேவர்களைக் கெடுக்கவேண்டுமென அசுரர்கள் கொடும் எண்ணத்தோடு பூமியின் கீழே சில கெட்டபொருள்களை புதைத்தார்கள். தேவர்கள் இதை அறிந்து புதைத்த இடத்தைக் கெல்லி சலம்சாய்த்து சுத்தஞ் செய்து அசுரர்களைத் தோற்கடித்தார்கள்.

எப்படிக்கெல்லி தேவர்கள் இன்னம் என்ன செய்தார்கள் ? தேவர்கள் மண்ணை நீக்கி தடுத்துவந்த அந்த வேறு பொருளை எடுத்து வெளியிலே எறிந்து விட்டார்கள்.

எந்த பூமியிலே இது நடந்தது. இன்னம் இதன் விவரங்களைச் சொல்லவும்?

இது வேறு எங்கோ நடந்ததாக எண்ணவேண்டாம். பிராணன் அபானனை காற்று செல்லுமிடத்தில் அழுக்குச்

சேர்வதே அசுரர்கள் கெட்டபொருள்களைப் புதைப்பதாகும். பிராணயாமம் என்பதால் அவ்வழுக்கை நீக்க வேண்டும். அப்பால் அடிக்கடி சலம்பருகுவதால் அது அதிக சீவனுடனாகும்.

அந்த அசுரர்களை நிரந்தரமாய் தேவர் எப்படி ஜயிக்கிறார்கள்?

அபானன் என்னும் மூச்சினால் அசுரர்கள் புதைக்கும் கெட்ட பொருள்களை வெளியிலே எப்பொழுதும் தள்ளி விடுகிறார்கள். 8. 5. 1. 1. 17.

## 74. மரணவடிவம்

மரணத்தை நீங்கள் காணமுடியாது. ஏன்? அவன் சோதி என்பதால் மூடப்பட்டுள்ளான். அவன் அமுதத்தால் நிறைந்துள்ளபடியால் அவன் எங்கு இருக்கிறான். அவன் வடிவம் என்ன என்பதை நாம் அறியோம்.

## 75. சந்தஸின் இரகசியம்

சந்தஸ் என்றால் என்ன?

சந்தஸ் என்றால் இசை இராகத்திற்குப் பெயராகும்.

இராகம் இசை என்பது வாய் சங்கீதத்தின் ஒரு பகுதியோ?

இல்லை! நமது தேகத்திலேயுள்ள பல அங்கம். அவைகளின் வன்மைகளுக்குப் பெயர்.

அப்படியானால் சில சந்தஸ்களைச் சொல்லி அதன் இரகசியங்களை அறிவிக்கவும்? நான் தேகத்தின் அங்கங்

கள். அவைகளிலுள்ள சந்தஸை, தேவர்களைச் சொல்லு கிறேன். கவனமாய்க் கேட்கவும்.

1. நமது தலையே காயத்திரி சந்தஸ். அதன் தேவதை அக்கினியாகும்.

2. நமது கழுத்து:—கழுத்திலுள்ளவன் உஷ்ணி சந்தஸ். அதன் தேவர் சாவித்திரியாகும்.

3. பிரஹதி சந்தஸ் பிரஹஸ்பதி என்னும் தேவதையோடு முதுகில் உள்ளான்.

4. பிரஹதியும் ரதாந்தரமும் நமது சிறகுகளான ஸ்தானத்தில் (மூச்சு) உள்ளார்கள். அவர்களின் தேவர்கள் சுவர்க்கமும் சகமுமாகும்.

5. திருஷ்டுபு என்னும் சந்தஸ் இந்திரன் என்னும் தேவனோடு இடுப்பிலே யுள்ளான்.

6. உக்தி என்னும் சந்தஸ் ஆதித்தியன் என்னும் தேவரோடு நாபியினருகே யுள்ளான்.

7. அதிசந்தஸ் பிராணனின் இரசமானல் பிரஜாபதியே அவன் தேவராகும்.

8. யஜனயஜனீய சந்தஸ் அபானனுனல் அதன் தேவர் வைசுவா னரனுகும்.

9. அனுஷ்டிபு தொடையிலே இருப்பான். அவன் தேவர் விசிவேதேவராகும்.

10. முழங்காலிலே பங்க்தி என்னும் சந்தஸுண்டு. அதன் தலைவன் மருத்துக்களாகும்.

11. பாதங்களிலே துவிபாத சந்தஸாகும். அதன் தேவர் விஷ்ணுவாகும்.

12. விசந்தஸே சுவாசங்களிலாகி வாயு என்னும் தேவரை தலைமையாகக் கொண்டுள்ளான்.

13. மாத்திரை குறைந்த சந்தஸே குறைவு மிகுதியா யுள்ள பாகம். அதன் தேவர் சலமாகும்.

10. 3. 2. 1 13.

---

## 76. சந்தஸ் உணவு

பிரஜாபதி தீ மரணத்தின்று தளர்ந்தவுடன் எனக்கு உணவு வேண்டுமென விரும்பினர். தேவர்கள் சந்தஸு அல்லது ஜந்துக்கள் எனப்படும். உணவை அடியிற்கண்டவாறு அவனுக்கு அளித்தார்கள்:—

1. புவி சந்தஸு—உணவு. (2) விரிசந்தஸு—காற்று. (3) ஆனந்த சந்தஸு—ஆகாசம். (4) சூழும் சந்தஸு—திசை. (5) உடை சந்தஸு—உணவு. (6) மனச் சந்தஸு—பிரஜாபதி. (7) பரவும் சந்தஸு—சூரியன். (8) நதி சந்தஸு—சுவாசம். (9) சமுத்திர சந்தஸு—மனது. (10) வெள்ள சந்தஸு—மொழி. (11) கருப்பு சந்தஸு—அபானன். (12) மும்மலை சந்தஸு—உதானன். (13) மூன்று அறிவான—ஞான சந்தஸு. (14) அறிகூப்ப சந்தஸு—சலம். (15) அட்சரபங்தி—சுவர்க்கம். (16) பத பங்தி—சகம். (17) விஸ்தாரபங்தி—திசை. (18) வெண் கத்தி பங்தி—சூரியன். (19) உடையாபரணம்—உணவு. (20) ஐக்கிய சந்தஸு—இரவு. (21) பிரிக்கும் சந்தஸு தினம். (22) பிரஹத் சந்தஸு—அங்குள்ள உலகம். (23) ரதாந்தர சந்தஸு—இந்த உலகம். (24) சைன சந்தஸு—காற்று. (25) நகத்தடி சந்தஸு—காற்று. (26) விழுங்கும் சந்தஸு—உணவு. (27) ஒளி சந்தஸு—நெருப்பு. (28) அனுஷ்டுபு—மொழி. (29) வன்மை சந்

தஸ—உணவு. (30) வன்மையளி சந்தஸ—அக்கினி. (31) முயற்சி சந்தஸ—எதிர் உலகம். (32) நிறை சந்தஸ—இவ்வுலகம். (33) போர்வை சந்தஸ—காற்று. (34) ஏறமுடியாத சந்தஸ—சூரியன். (35) மெது சந்தஸ—பங்தி. (36) அன்கான சந்தஸ—சலம். (37—46) பத்துபிராண சந்தஸகள். (47, 48, 49, 50) தட்சிண, அக்கினி, வாயு சூரிய சந்தஸகள். (51) வசந்தம். (52) மழை. (53) குளிர். (54) பிராணன். (55) அனல். (56) பூமி. (57) காற்று. (58) சூரியன். (59) வானன். (60) சந்திரன். (61) நட்சத்திரம், திசை முதலியவைகளை அளித்தார்கள். பிரஜாபதியும் திருப்தியானுன். 8. 5. 12. 1. 16.

## 77. சலத்தின் இரகசியம்

சலத்தின் போக்கு காற்றாகும். ஏனெனில் அவன் வீசுவதினலேயே காற்று செல்லும். சலம் வீங்குவதே செடி கொடிகளாகும். சலத்தின் விளக்கே சோதியாகும். சலச்சாம்பல் நுரையாகும். அதன் வழி பூமியாகும். வெள்ளமே சுவாசமாகும். சமுத்திரமே அதன் இடமாகும். கடலே அதன் மனமாகும். மொழி என்னும் மம்மட்டியால் தேவர்கள் சமுத்திரத்தினின்று மூன்று வேதங்களை வெட்டி யெடுத்தார்கள்.

மனிதனில் சலத்தின் இடத்தைச் சொல்லுகின்றேன். சலத்தின் முடிவு செவியாகும். நிலயம் கண்ணாகும். சலத்தின் வீடு காற்றாகும். கர்ப்பம் கடல் மிகுதி மணலாகும். உணவே அதன் அடைக்கலம். 7. 5. 2. 45.

அரசனுக்கு பட்டாபிஷேகஞ் செய்யுங்கால் அதில் சுழல் நீர் சலம் சேர்ந்திருக்க வேண்டுமாம். ஏன்?

அவன் சனங்களால் தோன்றியவன் என்பதை ஸ்தாபிப்பதற்கே யாகும். 5. 2. 5.

## 78. தேவ ஜயம்

தேவர்கள் அசுரர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள பெரிய கோட்டைகளைக் கட்டிக்கொண்டார்கள்.

புவியிலே இரும்புக் கோட்டையையும் காற்றிலே வெள்ளிக் கோட்டையையும் வானத்திலே தங்கக் கோட்டையையும் கட்டிக்கொண்டு தாங்கள் தப்பியதுமன்னியில் அசுரர்களையும் அக்கோட்டையை மூலஸ்தானமாகக் கொண்டு அவர்களை அடித்தோட்டினார்கள்.

அவர்களை அடித்தோட்டுவதற்கு இதைவிட அதிகமான மூலகாரணமாயிருந்தது எது?

அசுரர்களை எப்படியாவது ஜயித்துவிடுவோம் என்னும் எண்ணமே. 3. 4. 1. 1. 15.

## 79. மனித யக்ஞம்

யக்ஞம் யக்ஞமென ஆடு முதலியவைகளைக் கொலை புரிகிறார்களே இந்த யக்ஞத்தைப்பற்றி சதபதபிராமணம் என்ன சொல்லுகிறது?

சதபதபிராமணத்தில் சொல்லும் சிறந்த யக்ஞத்தை தெரிந்தோ தெரியாமலோ ஒவ்வொருவரும் செய்து வருகிறான். அந்த யக்ஞத்தைப்பற்றிச் சொல்லி வருகிறேன், கேட்கவும்.

யக்ஞம் செய்யுங்கால் பல கிண்ணங்களை வைப்பார்கள். யக்ஞபீடம் ஒன்று உண்டு. ஆகுதி அவசியம். பல

தேவர்களுக்கு காணிக்கையுண்டு. ஒரு முதன்மையான தேவரை நினைத்துச் செய்வதாகும். கடைசியில் ஜயிப்பவனுக்கே அது லாபமளிக்கும்.

மனிதனே யக்ஞபீடமாகும். அங்கு இந்திரன், சரஸ்வதி, அசுவினி தேவர்களுண்டு. இவர்களுக்குச் செய்யும் யக்ஞத்தைப்பற்றி சொல்கிறேன். ஒரு உதாரணம். நம்மிலே சுவாசம் இந்திரனாகும். சரஸ்வதி நாக்காகும். அசுவினி கிண்ணம் மூக்காகும். இவை யக்ஞ தேவர்களும் பாண்டங்களுமாகும். இங்கு ஆகுதியான உணவு இந்திரனுக்கு (சுவாசத்திற்கும் ஏனெனில் உண்பது உயிருடனிருக்கவே அதாவது சுவாசத்துடனிருப்பதற்கே) அளிக்கப்படுங்கால் எல்லா தேவர்களாகிற (சரஸ்வதி) நாக்கு ருசியாலும் (அசுவினி) மூக்கு கந்தத்தாலும் திருப்தியாவார்கள். இவர்களுக்கெல்லாம் திருப்தி செய்து உணவை எங்கும் ஐக்கியமாக்கி தனக்கே ஒருவன் பயன் செய்து கொள்ளுவான். இதுதான் தேவர்களின் யக்ஞமென்பார்கள். இப்படி அநேக யக்ஞங்கள் தேகத்தில் நடைபெறுகின்றன. அவைகளில் சிலவற்றைச் சொல்லுகிறேன். (1) இருகண் புருஷர்கள் அசுவினி, கருமை சரஸ்வதி, வெண்மை இந்திரன். இங்கு கண் யக்ஞம் நடைபெறுகின்றது. (2) அசுவினி செவிகள், சரஸ்வதி மொழி, இந்திரன் மனது—மனோயக்ஞம். (3) இந்திரன் இருதயம், சாவித்திரி ஈரல், வருணன் சுவாசாசயம் • இருதய யக்ஞம்.

இந்த யக்ஞங்களால் அந்தந்த பாகங்கள் இசைந்து முயற்சியுடனாகி அங்கங்கு ஆகுதிகளை நம்மால் பெற்று நமக்கு ஐக்கியமளித்து கடைசியில் லாபமளிக்கின்றன.

இம்மாதிரி யக்ஞங்கள் செய்வதால் லாபமென்ன ?

நீ திடமுடனுகி அங்கங்களில் எல்லாம் வன்மை அடைந்து இந்த உலகத்தில் நிலையாகி கடைசியில் சுவர்க்கத்திலும் ஆதாயமடைவாய். 12. 8. 1. 1. 17.

II

யக்ஞ கர்த்தா வருஷமாகும். பருவங்கள் புரோகிதன். அக்கினிதான் வசந்தகாலம். அதர்வயு கோடை காலம். உத்காத்திரி மழைகாலம். பிரமன் குளிர்காலம். ஹோத்திரி மாரிகாலம். 11. 2. 7. 33.

---

## 80. நூறு வயது

அமுதமான சோதியை நூறுவருஷமுள்ளவனே அறிவான். அவனே சுவர்க்கத்தை அடைவான்.

அற்ப ஆயுளில் இறப்பவர்கள் எங்கு செல்லுகிறுர்கள் ?

20 வயதுக்குள்ளே மரிப்பவன் இரவுபகலென்னும் உலகத்திற்கும், 21-லிருந்து 40 வயதிற்குள் மரிப்பவன் மாத உலகத்திற்கும், 41-லிருந்து 60 வயது வரை மரிப்பவன் பருவங்களின் உலகத்திற்கும், 60-லிருந்து 80 வயது வரை மரிப்பவன் பருவ உலகத்திலும், 80-லிருந்து 100 வயது வரை மரிப்பவன் வருஷ உலகத்திலும், 100 முடிந்த பிறகு மரிப்பவனே நான் முன் சொன்னபடி சுவர்க்கம் செல்லுவான். 10. 2. 6. 7. 8.

தேகம் வருஷமாகும். வெள்ளைபாகம் பகல். கருப்பு பாகம் இரவாகும். நகம் செடி கொடிகளாகும். 12. 1. 1. 5. 6.

---

## 81. வருஷ அக்கினி

அக்கினி தேவதை யார்? வருஷத்தையே அக்கினி தேவர் என்பார்கள்.

அவன் எப்படி இருப்பான்? அவன் தலை வசந்தம். வலது இடது சிறகுகள் கோடையும் மழை காலமுமாகும். நடுப்பாகம் குளிர் காலம். வாலும் பாதமும் மிகுதியான பருவங்கள். அனல் அவன் மொழியாகும். வாயுவே அவன் சுவாசமாகும். சூரியன் கண்ணுல் அவன் மனது சந்திரனுகும். திசை செவியாகும். முட்டுக்கள் மாதங்களாகும். 10. 4. 5. 1. 2.

## 82. சுவயம்பூ

சுவயம்பூ தவஞ்செய்தான். எத்தனை முயன்றும் எந்த சீவனையும் செய்யமுடியவில்லை. கடைசியாக எல்லாப் பொருள்களிலும் தன் ஆன்மாவையே ஆகுதிசெய்தான். அதனுல் எங்கும் வியாபகமாகி தலைவனுனன்.

13. 7. 1. 15

## 83. பிரஜாபதி கதை

யக்ஞம் எனப்படும் பிரஜாபதி என ஒருவனிருந்தான். அவன் தன் பெண்ணை உஷையுடன் வானத்தோடு கலந்தான். தேவர்கள் பிரஜாபதியின் செயலைக் கண்டு வெறுத்து மிருகங்களின் அதிபதியான ருத்திரனைக் கூப்பிட்டு பிரஜாபதியை குத்தவும் என்றுர்கள். ருத்திரனும் அப்படியே குத்தியதால் பிரஜாபதியின் ரசம் கீழே விழுந்

தது. கீழேவிழுந்த அக்னிமாருதனான அவனை தென் பாகத்திலுள்ள சாவித்திரியினிடம் எடுத்துச் செல்லவே அவன் சாவித்திரி கண்களை எரித்துவிட்டான். பூஷணனிடம் எடுத்துச்செல்லவே அவன் தின்று பல்லை இழந்தான். பிறகு பிகரஸ்பதியினிடம் எடுத்துச் செல்லவே அவன் சாவித்திரியின் உதவியால் பிரஜாபதி இந்திரனிடம் சென்று அவன் அதை புசித்து யக்ஞத்தின் பங்கத்தை நீக்கினான். 1. 7. 4. 1. 6

## 84. சூட்ச நாமங்கள்

1. புவியில் சலம் எதையும் மறைப்பதால் (வார்) அதற்கு வாரி எனப் பெயர். 6.

2. சுவாசத்தை மித்திரன் என்பார்கள். ஏனெனில் அவன் எல்லாருடைய நண்பனாகும். 4.

3. பிராணன்களைத் தாங்கும் நாடிகளுக்கே பிராணபிருதம் எனப் பெயர். 8. 1. 3. 11.

4. சூரியன் ஸ்துதிக்கப்படுவதால் அவனுக்கு ஸ்தோமம் எனப் பெயர். 8. 5. 3. 2.

5. நன்மையாய் (ஸ்விஷ்டமாய்)ச் செய்யும் எச்செயலுக்கும் (கிருதம்) சுவிஷ்டகிருதம் எனப் பெயர். 1. 53.

6. எல்லா தேவர்களும் அங்கு உட்கார்வதால் (சத்) வயிற்றுக்கு சாதஸ் எனப் பெயர். 3. 5. 39.

7. வருஷத்திற்கு துரிதம் எனப் பெயர். ஏனெனில் அவனே அனைத்தையும் துரிதமாக்குவான். 8. 4. 1. 14

8. சூரியனுக்குக் கர்ப்பம் எனப் பெயர். ஏனெனில் அவனே ஒவ்வொன்றையும் தரிக்கிறான். (கர்ப்)
14. 1. 4. 2.

9. எல்லா பொருள்களாலும் பெருமையுடன் (சிஷ்டமாய்) வாழ்வது (வசிப்பது) சுவாசமாவதால் அவனுக்கு ரிஷி வசிஷ்டன் எனப் பெயர். 8. 1. 1. 6.

10. வாயுவிற்கே விசுவஜோதிஸ் எனப் பெயர். ஏனெனில் வாயு உலகத்தில் அதுவே சோதியுமாகும்.
8. 3. 2. 1.

11. எது அவனுக்கு சந்தோஷம் அளிக்கின்றதோ அதற்கு சந்தஸ ு எனப் பெயர். 8. 5. 2. 2.

12. கீழ் செல்லும் பிராணன் மறைந்து செல்லுவதால் அதற்கு அரண்யனுகன் எனப் பெயர். 9. 3. 24.

13. புவியிலுள்ள எதையும் எவன் மறைத்து அதில் சாய்திருந்தானோ அவனுக்கே விருத்திராசுரன் எனப் பெயர். 1. 1. 4. 1.

14. வன்மையுடனிருந்து (க்ஷத்ர) எவன் வன்மையன்னியிலாய்விட்டானோ அவனுக்கு நட்சத்திரம் எனப் பெயர். 2. 1. 2. 17. 18

15. பிரஜாபதி அவனை முதலிலே (அக்ரே) சிருட்டித்ததால் அவனுக்கு அக்ரி அல்லது அக்கினி எனப் பெயர். 2. 7. 4. 5.

16. எந்தக் கம்பத்தால் யக்ஞம் கலைக்கப்பட்டதோ (யோபயம்) அதற்கு யூபம் எனப் பெயர். 3. 7. 1. 27.

17. அக்கினியை அறிய உலகத்தைத் தோண்டியபடியால் (உத்கான்) இதற்கு உக்தம் எனப் பெயர்.
6. 7. 1. 23.

18. திவமெனப்படும் ஆகாயத்திலே நிறையும் பொழுது சிருட்டிக்கப்பட்டவர்களுக்கே தேவர்கள் எனப் பெயர். 11. 1. 6. 7.

19. தேவர்கள் சிருட்டி செய்யுங்கால் பகல் ஒளி போல் மின்னியபடியால் அவ்வொளிக்கே தேவர்கள் எனப் பெயர். 10. 1. 1. 67.

20. ஒவ்வொன்றையும் சிருட்டித்து மறைமுகமாய் எதனால் அடைகிறோமோ அதற்குச் சர்வத்ஸரம் அல்லது சம்வத்ஸரம் எனப் பெயர். 10. 1. 1. 6. 12.

21. தன் இஷ்டத்தை பூர்த்தி செய்துகொள்ளும் யக்ஞத்தை செய்பவனுக்கும் பரமேஷ்டின் எனப் பெயர். 11. 1. 6. 19.

22. இதோவா, உன் தேகம் இது என அவைகள் அழைப்பதால் (அஹ்வயதி) அதற்கு ஆஹுதி எனப் பெயர். 11. 2. 3. 6.

23. பிராணியை உணவை தனக்கே ஒருவன் எடுத்துக் கொள்ளுவதால் அதற்குப் பிராணன் எனப் பெயர். 7. 8. 1.

24. சந்திரனிடமிருந்து அவன் ஒளியை எடுத்துக் கொண்டபடியால் (ஆ—தா) சூரியனுக்கு ஆதித்தியன் எனப் பெயர். 11. 8. 3. 11.

25. இங்கு வீசுவதே பூஷணனாகும் (காற்று). ஏனெனில் அதுவே அனைத்திற்கு மாதரவளித்து முன்னணி செலுத்தும். 14. 2. 1. 14.

26. வைராஜ சாமன் வைராஜம் எனப்படும் உணவு பிராணனை எல்லாம் தாங்குகின்றபடியால் அதற்கு பிராணயிருதம் எனப் பெயர். 8. 1. 1. 6.

27. வாஜமென்றால் உணவு. மனதுள்ளவன் உணவை அடைவதால் (பரதி) மனதிற்கே ரிஷி பாரத்துவாஜர் எனப் பெயர். 8. 1. 1. 9.

28. ஜகத்திலுள்ளவர்கள் கண்களாலேயே கண்டு கருத்திலாவதால் கண்ணிற்கே ரிஷி ஜாமதக்னி எனப் பெயர். 8. 1. 2. 3.

29. எவன் அழுத (ருத்) கண்ணீரினின்று சீவர்கள் தோன்றிற்றோ அவனுக்கே ருத்திரர் எனப் பெயர். 9. 1. 1. 6.

30. அக்கினியானவன் பிறக்கும் (ஜாத) ஒவ்வொன்றையும் பற்றிக்கொள்ளுவதால் (வித்) அவனுக்கு ஜாதவேதஸன் எனப் பெயர். 9. 5. 1. 68.

31. தேவர்கள் செய்யும் யஜனத்தை அசுரர்கள் வேண்டாமென (ரக்ஸ்) அவர்கள் தடுத்ததால் அவர்களுக்கு ராட்சதர்கள் எனப் பெயர். 1. 1. 1. 16.

32. தினத்திற்கு சப்தமெனப் பெயர். இரவிற்கு சாகரமேனப் பெயர். மாதத்திற்கு யவ்யமெனப் பெயர். வருஷத்திற்கு சுமேகமெனப் பெயர். 1. 7. 2. 20.

33. எது உலகத்தை யெல்லாம் சுற்றிசூழ்ந்திருக்கின்றதோ (ஆப்த) அதற்கு ஆபம் அல்லது சலமெனப் பெயர். 2. 1. 1. 4.

34. சிக்கிமுக்கி அடிக்கட்டை மேல்கட்டைக்கே ஊர்வசி, புரூருவன் எனப் பெயர். நெய்பாண்டமே ஆயு என்னும் அவர்கள் பிள்ளையாகும். 3. 4. 1. 22.

35. சத்துருக்களின் எல்லா செடி கொடிகளின் இரசத்தை தனக்குள் இழுத்ததால் (யூ) அந்தச் செடிக்கு யவை எனப் பெயர். வாற்கோதுமை. 3. 6. 1. 9.

36. கூர்மம் என்றாலும் கசியபம் என்றாலும் ஒன்றே. பரமன் உலகத்திலுள்ளவைகளை செய்வதால் (கர்ம) அவனுக்குக் **கூர்மன்** எனப் பெயர். 7. 5. 1. 5.

37. பிராணனுடனான சலத்தினேரத்திலே சந்துக்கள் வசிக்கும். அதற்கே சந்தஸ॒ எனவோ சக்தி எனவோ பெயர். 8. 2. 4. 8.

38. சலத்திற்கே பரமேஷ்டின் எனபெயருண்டு. அவனே உயரமான வானத்திலும் ஆழமான பூமியிலுமுள்ளபடியாலும் அவனுக்கு **பரமேஷ்டின்** எனப்பெயர். 11. 1. 6. 16.

39. இரண்டு உலகங்களும் ஒன்றாயிருந்தன. அவை தனிமையாய்ப் பிரிந்தவுடன் இரண்டின் நடுவிலுள்ள (அந்தர்) நிலயமே அந்தரிட்சமாயிற்று. 7. 2. 1. 23.

40. புவியிலுள்ள எல்லா பொருள்களிலும் வீசி அவைகளையெல்லாம் எதையும் செய்யச்செய்வதால் வாயுவிற்கு **விசுவகர்மன்** எனப் பெயர். 8. 1. 1. 7.

41. செவி எல்லாப்புறமும் செவியுறுவதால் அதற்கு எல்லா திசையின் சிநேகிதன் (மித்திரன்) எனப் பெயர். இதனால் செவியை ரிஷி **விசுவாமித்திரன்** என்பார்கள். 8. 1. 2. 6.

42. காற்று மனிதரில் நுழைந்து பிராணன் உதானனாகி புனிதஞ்செய்வதால் அதற்கு வடிகட்டி எனப் பெயர். அது புழுக்கம் பிரிப்பதால் அதற்கு பவனம் எனப்பெயர். 1. 1. 3. 2.

43. இந்த மூச்சு ஆத்மாவின் அகத்திலேயே (அந்தர்) இருப்பதால் எல்லா சீவர்களும் அதனாதரவிலிருப்ப

தால் (யம்) இந்த மூச்சிர்க்கு அந்தர்யாமன் எனப் பெயர். 4. 1. 2. 2.

44. இவ்வுலகத்தையே சர்ப்பம் என்பார்கள். ஏனெனில் அது ஒவ்வொரு பொருளிலும் சரிந்து (சர்ப்) செல்லுவதால் இதற்குச் சர்ப்பமெனப் பெயர். 7. 4.1. 25.

45. ஒருவன் விருதமுடனுகி பட்டினியிருந்தால் அக்கினி முதலிய தேவர்கள் அவன் மனத்தால் அனைத்தையும் பார்த்து அங்கு வசிப்பதால் அப்படி இருப்பதற்கு உபவாச மெனப் பெயர். 1. 1. 1. 7.

46. மான் தோலையே மனிதர்கள் சர்மம் என அழைப்பார்கள். ஆனுல் தேவர்கள் சர்மம் என்ருல் சந்தோஷமென்பார்கள். 1. 1. 4. 4.

47. சிரஸ் என்பது சிறந்ததை காண்பிப்பதாகும். தலையே சிறந்தது. ஆதலால் அதையும் குறிக்கும். இதனுலேயே சமூகத்தில் சிறந்தவனுயுள்ளவனையும் சிரேஷ்டன் என அழைப்பது. 1. 4. 5. 5.

48. அமாவாசையினின்றே சந்திரன் இந்த சகத்தில் வசிப்பான். இச் சந்திரனை சோமன் இங்கு நுழைந்து இணைந்து வசிப்பதால் இன்று அமாவாசை எனப் பெயர். 1. 6. 4. 5.

49. விருத்திரன் கொல்லப்பட்டவுடன் துர்க்கந்தம் வீசி சலத்தில் நுழைந்தான். சலத்திற்கு இது பிடிக்கவில்லை. அதனுல் விருத்திரன் எழுச்சியாகி புதரான (திருப்)படியால் இதுவே தர்ப்பை என்னும் புல்லாயிற்று. 7. 2. 3. 2.

50. அசுரர்கள் ரோஹிணி என்னும் நெருப்பால் சுவர்க்கம் செல்லலாம் என நினைத்தார்கள். இந்த ரோஹிணி நெருப்பிற்கே ரோஹிணி நட்சத்திரமென சனங்கள் சொல்லுவது. அற்புதமாயுள்ள நெருப்பிற்கே கிருத்திகை எனப் பெயர். 2. 1. 2. 16.

51. ஆதியிலே தேவர்கள் அசுரர்களைக் கண்டு பயந்தார்கள். பிறகு உபசதம் எனப் பெரிய கோட்டைகளை கண்டு அவைகளிலே நுழைந்தார்கள். இவ்வுலகங்கள் என்பது வன்மையுள்ள கோட்டைகளாகும். உபசதம் என்றால் இடி முழக்கத்திற்கும் பெயர். உபசதமென்றால் தவத்திற்கும் பெயர். 10. 2. 5. 1. 3.

52. பிரஜாபதி நினைத்ததாவது நான் ஆகுதி அளிக்கட்டுமா என்றார். அவரிடத்திலிருந்த பரம்பொருள் ஆகுதி அளிக்கவும் எனச் சொல்லிற்று. பிரஜாபதி தன்னுடைய (சுவ) பரம்பொருளே இப்படி பேசியது (அஹ) என எண்ணினார். இதனால்தான் சுவாஹா எனச் சொல்லுவது. 2. 2. 4. 6.

53. பாலகில்யர்கள் யார்? இரண்டு உழுத நிலங்களுக்கு நடுவே உழப்படாமலுள்ள நிலத்திற்கு கில மெனப் பெயர். தேகத்திலுள்ள பிராண - நதிகள் குதிரை ரோமம் (வால்) அகலத்தினால் பரஸ்பரம் பிரிக்கப்பட்டுள்ளன. அப்படி பிரிக்கப்பட்டுள்ளபடியால் அவைகளுக்குப் பாலகில்யர்கள் எனப் பெயர். 8. 3. 4. 1.

54. சோமன் தேவர்களுக்கு யக்ஞ உணவாக ஆனவுடன் எனது முழுது ஆண்மாவுடன் தேவர்களுக்கு உணவாகக்கூடாது என எண்ணி தன்னுடைய விருப்பமான

பாகத்தை தனிமையான ஓரிடத்தில் வைத்துவிட்டான். தேவர்கள் ஜயித்து எனக்கு உன் எல்லா பாகத்துடன் உணவாகவும் என கேட்டவுடன் சோமன் எனக்கு சொந்தமான (சுவ) அனைத்தும் இதுவே என தான் ஓடிவந்தான். அதனாலேயே சோமன் எனப் பெயர். 3. 9. 4. 22.

55. அக்கினி பிராமணனானதால் அவனுக்கு பிராமணன் எனப் பெயர். அவன் பிராணனாகி பிரஜைகளைப் பாதுகாப்பதால் அவனுக்கு பரதன் எனப் பெயர் அவனுக்கே ஆதிபுரோகிதன் ஹோத்திரம் எனப் பெயர். அவன் ரதத்தைப்போல் எதையும் எடுத்துச் செல்லுவதால் அவனை ரதி எனவும் மொழிவார்கள். 1. 4. 2.

56. இந்திரன் விருத்திரனை நன்றாய் கொன்றவுடன் ஒருவேளை கொல்லவில்லை எனச் சந்தேகப்பட்டு சலத்திலே நுழைந்தான். உடனே சலத்தைநோக்கி எனக்கு பயமாயிருக்கின்றது. எனக்கு ஒரு கோட்டையைக் கட்டிக் கொடுக்கவும் எனச் சொன்னவுடன் உடனே சலசத்துக்களெல்லாம் சேர்ந்து மேல்நோக்கி பாசமாகி கோட்டையொன்றை செய்தது. சலம் பலமாய் (பு) அப்படிச் செய்தபடியால் (கர்) அதற்குப் புஷ்கரிணி எனப் பெயராயிற்று. புஷ்கரமென்றால் தாமரை இலைக்கும் பெயர். 1. 4. 1. 13.

## 85. அமுத மொழிகள்

1. ஆட்சி புரிவது புகழாகும். 6. 7. 3. 7.
2. சுவர்க்கம் என்பது தினமாகும். 13. 2. 1. 6.
3. அக்கினியே மொழியாகும்.

4. நேர்வழியையே சுவர்க்கம் எனச் சொல்லுவார்கள். 13. 2. 15.

5. பக்தி என்றால் தியாகத்திற்குப் பெயர். 7. 2. 2. 4.

6. மருத்துக்கள் என்பது வைசிய சனங்களாகும். 14. 1. 2. 27.

7. இயல்பாய் சேதனமுடையதே பிராணனாகும். 8. 7. 3. 11.

8. தேன் என்பது சுவாசத்திற்குப் பெயர். 14. 1. 3. 30.

9. புளித்த தயிரும் தேனும் சிறந்த உணவாகும். 5.

10. சுவர்க்கம் என்பது பூமியின் பொய் வடிவமாகும். 5.

11. பிராணனே புனிதமான தேவராகும். 10 2. 2. 3.

12. அறிவு செங்கல் பீடத்தை விடச்சிறந்தது. 4.

13. உலகத்திலே அனைத்தும் சந்தஸாகும். 8. 3 3. 6.

14. பிராணனும் அபானனும் பரஸ்பரம் பரிசித்தே செல்லுவான். 4. 1 2. 24.

15. மனிதர்களுக்குச் செவி யொன்றே கண் ஒன்றே. 8. 1. 2. 6. 3.

16. ஆண்டவனை அஜம் என்னும் ஆடு என்பார்கள்.

17. தேசத்திலே தலைமை பதவி ஒருவனுக்கே அளிக்கவேண்டும். 8. 3. 2. 7.

18. தேவர்களுக்கு மர்மமாய் மொழிவதிலேலே பிரியமுண்டு. 6.

19. தேகத்திலுள்ள அழுக்கே பொய் எனப்படும். 3. 1. 2. 10.

20. இகத்தோடு இசைந்து வாழவும். 3. 6. 4. 14.

21. இருதயம் என்பது ஆத்மா, கட்டியான நெய்யே சுவாசமாகும். 3. 8. 3. 8.

22. மர்மமான பிராணன் நாபியாகும். 3. 8. 2. 6.

23. தூரத்திலுள்ள சனங்கள் பரஸ்பர ஒற்றுமையுடன் வாழ்வார்கள். 3. 9. 4. 21.

24. வில்லே செல்வ புருஷனின் சக்தியாகும். 5. 3. 5. 30.

25. பிரஜாபதியினிடமிருந்து ஓடிவந்த சக்தியே சூரியனுகும். 4.

26. களைப்பாவது என்பதே தீமையிலாவதாகும். 6. 3. 3. 7.

27. சுடர் எலும்பில்லாத பீஜமாகும். 6. 6. 2. 9.

28. நிலத்தில் உழத் தெரிந்தவனே அறிஞனுகும். 7. 2. 2. 9.

29 நெய் என்பது உலகத்தின் எல்லா இரசமாகும். 7. 2. 3. 4.

30. ஸ்திரி ஒருவருக்கும் தீமை புரிவதில்லை. 6. 1. 3. 2.

31. வாயுவிற்கு வெண்மை வடிவம். அதற்குக் கொம்புகளில்லை. 6. 2. 2. 7.

32. கண்ணிமை கொட்டுவதும் பிராண வன்மை யினாலே யாகும். 10. 1. 2. 6. 2.

33. சிரத்தையே சத்தியமாகும். 11. 3. 1. 1.

34. பிராணனின் புருஷத்துணைவன் சுவாசமாகும்.

35. யமன் க்ஷத்திரியனாகும். அவனே இங்கு அரசு புரிகிறான்.

36. பூமியை அதிகமாய்ப் பற்றுபவனே அதிக பலமுள்ளவனாவான். 12. 6. 1. 39.

37. அக்கினியே தேவர்களின் ஆத்மாவாகும்.
14. 3. 2. 5.

சந்திரனே அசுவமேதமாகும். 5.

38. நெருப்பணைந்தால் காற்றிலே செல்லும்.

39. சலத்தின் புருஷன் அக்கினியாகும். 2. 1. 1. 4.

40. பிராணன்களை வாய்க்கால் எனச் சொல்லலாம். 7. 2. 33.

41. பிராணன்களின் சேர்க்கை மொழியாகும்.
7. 2. 3. 3.

42. மனிதனே வருஷமாகும். ஏனெனில் வருஷத்தினாலேயே மனிதன் பிறப்பான்.

43. விரும்பப்படும் பொருள்களையே வருஷமென்பார்கள். 10. 2. 4. 1.

44. ருத்திரன் க்ஷத்திரியனாகும்.

45. அக்கினியான அறிவினாலும் இந்திரனான வீரத்தினாலுமே சிருட்டி செய்ய முடிந்தது. 10. 4. 6.

46. சூரியன் என்னும் கொக்கியில் சகமெல்லாம் தொங்கும். 4

47. சூரியன் சகத்திலுள்ள ஒவ்வொரு பொருளின் ஆன்மாவாகும். 4.

48. மழையே சமூகத்தைச் சட்டதிட்டமுடன் செய்கிறான்.

49. மனிதன் ஆதியிலே உலர்ந்த கட்டையைப் போலவே இருந்தான். ஆனால் சாமன் என்னும் சக்தியைப் பெற்று தேஜஸுள்ளவனானான். 7. 4. 1.

50. இடி முழக்கத்தாலேயே இராஜீய அதிகாரத்தைப் பெறலாம். 13. 4. 4. 1.

51. சுவர்க்கம் வெளி மூச்சானால் பூமி உள் மூச்சாகும். 14. 2. 2. 34.

52. எல்லா தேவர்களின் வாசம் இப்பூமியேயாகும். 14. 3. 2. 4.

53. அபானனால் ஆதரவடைந்துள்ளது கண்ணாகும்.

54. சுவாசத்தின் வன்மையினாலேயே நாம் தேகத்தைச் சுருக்கவும் விரிக்கவுமுடியும். 8. 1. 4. 10.

55. பால் என்பது பிராணனின் ரசமாகும். அதைச் சுவாசமெனவும் சொல்லுவதுண்டு. 9. 2. 3. 31.

56. பஞ்சப் பிராணன்களை மூன்று குதிரை, வீரன் சாரதி எனச் சொல்லுவார்கள். 5. 3. 1.

57. பிராணனிலே சலமிருக்கும் வரைதான் பேச்சை பேசினால் பேசமுடியும். 5. 3. 5. 16.

58. பிரஜாபதியிலே பாதிவாயுவாகும். மிகுதியான பாதி அவனேயாகும். 6. 2. 2. 11.

59. பிராணன் அபானன் ஒன்றாயிருந்தபோதிலும் வெவ்வேறாகும். 4. 1. 2. 11.

60. அக்கினியின் அமிருதமான வடிவம் ருத்திரனுகும். அவனே தேவர்களின் இருதயமாகும். 4.

61. ஒரு தினம் வாழ நாம் எத்தனையோ யக்ஞங்களைச் செய்கிறோம். 5.

62. அமாவாசையினரவு கதவானால் சந்திரன் கதவின் தாப்பாளாகும். 11. 1. 1. 1.

63. பகவான் எல்லாப் பிராணிகளையும் பருவங்களிலேயே நிலைக்கச் செய்துள்ளான். 8. 3. 3. 12.

64. வானத்திலுள்ள சோமனின் அழியாப்புகழே சந்திரனாகும்.

65. தலையே பிராணன்களின் ஊற்று நிலையாகும். 8. 3. 4. 12.

66. சந்திரனே சோமன் என்னும் அரசன். அவனே தேவர்களின் அரசனாகும். 11. 1. 4. 3.

67. விரோதிகளை கால்களால் விலக்கவும். தீமை செய்பவர்களை கால்களால் மிதிக்கவும். 8. 6. 3. 20.

68. அக்கினியே நீ யாருக்குக் கருணைபுரிகிறாயோ அவனே போர்க்களத்தில் ஜயிப்பான். 3. 9. 3. 32.

69. சோமபான ரசம் பிழிவதென்பது அசுரர்களை அறைத்துக் கொல்லுவதாகும். 3. 9. 4. 2.

70. சோமபானத்தை அறைக்கும் கற்களுக்கே பிராணன்கள் எனப்படும். 14. 2. 2. 13.

71. தாமரை இலை சலத்தில் மிதப்பதுபோல் பூமி சலத்திலே மிதக்கின்றது. 7. 4. 1. 8.

72. வருஷங்கள் என்பது விருப்பங்களின் பொருள்களேயாகும். 10. 2. 4. 1.

73. தேகத்திற்கு அவசியமான உணவு திருப்தியை யளிக்கும். அதிகமான உணவு தீமையை அளிக்கும். 10. 4. 1. 14.

74. பற்றற்ற ஆசையினால் ஞானமதிகரித்தால் அங்கு செல்லலாம். 10. 5. 4. 16.

75. சத்தியயக்ஞர் சொல்லுவதாவது இப்புவி முழுமையும் எந்த இடமும் தெய்வீகமாகும். 3. 1. 1. 4.

76. வெண்மை ஆகாச வடிவம். கருப்பு பூமி வடிவம். சிகப்பு வான வடிவம். 3. 2. 1. 3.

77. தீட்சையாவாதென்பது கர்ப்பத்தின் குழந்தைபோல் செல்லுவதாகும். 3. 2. 1. 31.

78. ஆதியிலே எத்தனை தேவர்களுண்டோ அத்தனை தேவர்கள் இப்பொழுதுமுண்டு. 8. 7. 1. 9.

79. வானத்தின் இப்பாகத்திலேயே மக்களுக்கு உற்பத்தி சக்தியை யளித்தான். 8. 7. 2. 17.

80. கானம் செய்வதென்பது ஒரு வஸ்துவிலே சந்தோஷமாவதாகும். 9. 21. 41.

81. தனக்கு அதிகமானவன் இல்லை என உற்சாகமாகுபவனைப் பாடுவான். 9. 21.

82. மருத்துக்களின் சைன்யம் எழு வகையாய் பிரிக்கப்பட்டுள்ளது. 9. 3. 2. 25.

83. மொழியினாலேயே ஒருவன் விபத்துக்களை அடைவான். 9. 3. 1. 12.

84. புனிதமான வாழ்க்கையை அடைவதே அமுதமாகும். 9. 5. 1. 8.

85. சத்தியமே இப்பூமியாகும். ஏனெனில் சகல உலகங்களிலும் இதுவே நிச்சயமாகும். 7. 4. 1. 8.

86. பூமியில் நிலைபெறுதவன் நாடோடியைப்போல் நிலையற்றவனாகும். 7. 4. 1. 12.

87. பிரஜாபதியே சந்திரனாகும். அமாவாஸையில் அவன் பூமியிலே வசிப்பான். 6. 2. 2. 16.

88. தீமை செய்பவனைத் தொலைப்பதே இத்தரணியின் கடமையாகும். 5. 2. 3. 3.

89. ஸ்திரீகளை அழைக்க தாய் என்னும் சொல்லே சரியான மொழியாகும். 6. 6. 2. 5.

90. அக்கினி தேகமாகும். சோமன் பிராணனாகும். இவ்விரண்டையும் சரீரத்தில் காணலாம். 7. 3. 1. 2.

91. ஆன்மாவிலேயே எல்லாப் பிராணன்களும் நிலைத்துள்ளது. 7. 5 2. 6.

92. தங்கப் பாளமென்றால் பிராணவன்மைக்கும் சக்திக்கும் பெயர். 6. 7. 1. 4.

93. அசுரர்களிடம் தீமையையளித்த பிறகே, அவர்களை தேவர்கள் அழிக்க முடிந்தது. 11. 1. 6. 9.

94. ஒருவன் தான் அளிக்கும் ஆகுதியினாலேயே வேறு தேகத்தை அடைவான். 11. 2. 3. 6. 1.

95. ஒரு வருஷமென்பது ஒரு நாளே. ஏனெனில் ஒவ்வொரு நாளாகவே வருஷம் வரும். 12. 2. 2. 17.

96. பிராமணன் க்ஷத்திரியனிலிருந்தும் க்ஷத்திரியன் பிராமணனிலிருந்துமானான். 12. 7. 3. 12.

97. அசுவினி உலகமாகும். சரஸ்வதி காற்று. இந்திரன் வானமாகும். 12. 8. 2. 32.

98. இந்திரன் வஸந்தம். சாவித்திரி மழைகாலம். வருணன் குளிர்காலம். 12. 8. 2. 32.

99 அசுவினி கிண்ணம் கண்கள். சரஸ்வதி கிண்ணம் மூக்கு. இந்திரன் கிண்ணம் செவிகளாகும்.

100. அசுவினி தேவர்கள் வைத்தியர்கள். சரஸ்வதி குணமாகும் மருந்து. இந்திரன் இந்திரியமாகும். 12. 7. 2. 3.

101. பிராணன் செல்லாத இடமெல்லாம் உலர்ந்து காய்ந்தழியும். 8. 1. 4. 1.

102. அபானத்தைப் பருகுபவர்கள் வெட்கங் கெட்டவர்களாகும். 9. 3. 2. 24.

103. மனிதன் பட்சியாலுல் பிராணன் அபானன் இரு சிறகுகளாகும். வியானன் தேகமாகும். 4. 1. 3. 26.

104. பெரியவனைக் கண்டு சிறுவன் எழுந்திருப்பது போல் நோய்கள் காற்றைக்கண்டு மரியாதையாய் சென்று விடும். 4. 1. 3. 9.

105. வருஷத்திலே எத்தனை நாட்களுண்டோ அத்தனை எலும்புகள் மனிதர்களிடமுண்டு.

106. ஒரு வருஷத்திலே எத்தனை முகூர்த்தங்களுண்டோ அத்தனை பந்திகளை வேதத்தில் காணலாம்.

107. மனிதரிலே பருவங்கள் பட்சங்கள் இரவு, பகல்கள் உண்டு. இல்லையேல் அவைகளோடு இணைந்து வாழ முடியாது.

108. எள் என்பது காட்டு தானியமும் நாட்டு தானியமுமாகும். அதனாலேயே அதை தேவர்கள் விரும்புவது. 9. 1. 3. 1.

109. அசத்தியத்தினின்று சத்தியம் செல்லுவதென்பது மனிதர்களினின்று தேவர்களாவதாகும். 1. 1. 1. 5.

110. பிறக்கும்பொழுது மாரணத்திற்கு கடன் கொடுக்கவே நாம் சனிக்கிறோம். ஆனால் யக்ஞம் செய்வதால் அது தீரும். 3. 6. 2. 16.

111. சூரியன் மழையை யளிப்பவனாகும். அவன் தன் ரசிமியால் எதையும் காப்பாற்றுகிறான். 14. 2. 1. 21.

112. சூரியன் காற்று என்னும் நூலிலே உலகங்களையெல்லாம் தனக்காகச் சேர்த்துக்கொள்ளுகிறான். 4.

113. சூரியனுக்கே ஆகாசம் நிறைப்பவன் எனப் பெயர். அவன் சுவாசத்தில் அமைவதினாலே சுவாசம் சூடாயிருக்கும். 8. 7. 2. 2. 11.

114. சாமன் என்றால் க்ஷத்திரமாகும். சாமகானம் செய்வதென்பது க்ஷத்திரத்தில் (வீரச்செயலில்) சாய்வதாகும். 12. 8. 3. 23.

115 எலும்பே மனிதர்களின் பலமாகும். அவைகளே யக்ஞபீடத்தைச் சுற்றியுள்ள செங்கற்கள். 12.

116. காற்றின் அமுதபாகம் நாபிக்கு மேலாகும். நாபிக்கு மேலுள்ள உணவும் அமுதமே. 12.

117. பசுக்கள் அதிகமாயுள்ளவன் தீமை செய்பவனை துரத்துவான். ஏனெனில் பசுக்களே இடிமுழக்கங்களாகும்.

118. பிள்ளைகள் என்பது ஆத்மாவிற்கு அதிகமானவைகளாகும். அதிகமென்பது அழுக்கைப்போலாகும். 8. 6. 1. 14.

6

119. தேவர்கள் சுவர்க்கத்திற்கு அடிவழியாகவே சென்றார்கள். அப்படியே பூமியினின்றே யக்ஞகர்த்தா சுவர்க்கம் செல்லுவான். 8. 5. 23.

120. சந்திரன் என்பது வானத்திலேயுள்ள நாயாகும்; பசுக்களை பாதுகாப்பவன் அவனே. 8.

121. ஆதியிலே தேவர்கள் மனிதர்கள் பிதுருக்கள் மிருகங்கள் அனைவரும் ஒன்றாகவே புசித்தார்கள். 3. 6. 3. 26.

122. சத்தியத்தை வாயிலே ஆரம்பிக்கவும். பிறகு நாளடைவில் நாம் சத்திய புருஷர்களாவோம். 7. 4. 1.

123. வீட்டைத் தவிர வேறு எங்கும் ஒருவனுக்கு ஆனந்தமில்லை. ஆனால் வீடு என்றால் உணவாகும். 6. 2. 1. 14.

124. தேகத்திலேயுள்ள வலது பக்கத்தில் வாயு நிலையாகி அங்கிருந்தே பிராணனாய்த் தோன்றுவான். 6.

125. தங்கத் தகடு என்றால் திவ்யமான சூரியனுக்குப் பெயர். அவன் பூமி வானத்தின் நாபியிலேயுள்ளான். 6. 7. 1. 9.

126. மனிதனின் பிறப்பு மூன்று. (1) தாய் தந்தை, (2) யக்ஞம் செய்து மற்றவர்களுக்களிப்பது. (3) இறந்த பிறகு தோன்றும் நிலை. 11. 2. 1. 1.

127. யக்ஞத்திலிருந்தே மனிதன் பிறந்தான். இங்கு புசிக்கும் உணவு அங்கே உன்னைப் புசிக்கும். 12. 9. 1. 1.

128. பிராணன்களின் தலைவன் மனதாகும். மனத்திலேயே எல்லாப் பிராணன்களும் நிலைப்பதே அதன் காரணம். 14. 2. 2. 34.

129. காற்று ஏழாகும். செவியிலே இரண்டு. கண்களில் இரண்டு. மூக்கிலே இரண்டு. மொழி யொன்று. ஆக ஏழு காற்ருகும். 9. 3. 1. 11 & 12.

130. தேகத்திலுள்ள பிராணன்களிலே மழை பொழிவதுண்டு. அம்மழை பிராணனேடு சேர்ந்து அதற்கு சதாகால உணவாகும். 8. 2. 3. 6.

131. சுவாசத்தை சமித்தென்பார்கள். சுவாசம் அதிகமாய் சுடர்விட்டெரிவதே சுரமாகும். சுவாசம் குறைந்தால் சீதளமாகும். அதனுல் சீவனும் நீங்கலாம். 1. 5. 4. 1.

132. நம்முடைய இளம்வாழ்க்கை இந்திரனுடையதாகும். நடுவாழ்க்கை சாவித்திரிக்குச் சொந்தமாகும். முதுமைப்பருவம் வருணனுக்குரியது. 12. 8. 1.

133. அரசன் அனைவருக்கும் தலைவன். ஆனல் பிராம்மணர்களுக்கு மாத்திரமில்லை. ஏனெனில் அவனுக்கு சோமனே அரசனுவான். 5. 4. 2. 3.

134. எல்லா உலகங்களிலும் மிருத்யுசம்பந்தமுண்டு அதற்கு ஆகுதி அளிக்கவில்லையானுல் அது அவனை எந்த உலகத்திலும் பற்றும். 13. 3. 5. 1.

135. ஒருபருவமாகவே இருந்தால் சிருஷ்டிகள் உண்டாவதில்லை என எண்ணி ஒருபருவத்தில் பல பருவங்களையும் சேர்த்தான். 8. 1. 7. 1. 4.

136. நுகத்தடிகழுத்தை யறுக்கும். கழுத்து நுகத்தடியைச் சுடும். இதனுலேயே தீமைசெய்பவனுக்குத் தீமை செய்யவும் என்னும் பழமொழி. 1. 1. 2. 8.

137. உடை யன்னியிலிருந்தால் எனக்குப் பிடிக்காது என யக்ஞம் சொல்லிற்று. உடனே தர்ப்பை என்னும் உடையை யக்ஞத்திற்களித்தார்கள். 1. 7. 3. 9.

138. இந்திரனும் அக்கினியும் சேர்ந்தே விருத்திரனைக் கொன்றூர்கள். அக்கினி என்பது பிராமணன். இந்திரன் என்பது க்ஷத்திரியன். 2. 5. 4. 8.

139. சாவித்திரி என்பது மனமாகும் தேவர்கள் பிராணன்களாகும். மனத்திஞல் சுவர்க்கம் சென்று அதனுல் சுவர்க்கம் செல்லலாம். 6. 3. 1. 14.

140. சந்தஸிஞலேயே சகத்திலுள்ள சந்துக்கள் எல்லாம் வாழ்கின்றன. சிருட்டி என்பது பிராணிகள் பிராணனன்களோடு சேர்வதாகும். 8. 2. 2. 8.

141. அக்கினி இவ்வுலகங்கள். சலம் சுற்றியுள்ள செங்கற்கள். மனிதன் யஜுஷ்மதி செங்கற்களாகும். ஜந்துக்கள் சுத்தோதகம். செடி கொடிகள் சமித்தும் ஆகுதியுமாகும். 8.

142. சாந்த காலத்தில் ஒற்றுமை என்பதே இல்லை. தந்தையும் மகனும் பிரிவார்கள். போர்க்களத்தில் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடனுவார்கள். 13. 2. 4. 4.

143. காயத்திரி என்ருல் இரும்பைப்போல் உணர்வுடனுகவேண்டும். திருஷ்டுபு என்ருல் திடமுடனுகவேண்டும். சக்தி என்ருல் பசுக்களுடனுகவேண்டும். 13. 2. 6. 4.

144. மனிதரில் நடுப்பாகம் அக்கினியை சேர்ந்தது. அதனுலேயே அது உயர்ந்தது. பெரிது, அனைத்தையும் விட வன்மையுள்ளதாகும். 8. 1. 4. 5.

145. உங்கள் நாமதேயத்தால் நீங்கள் ஐசுவரியமுடனாக இடையூறு இருக்குமேயானால் வேறு நாமத்தைத் தரித்துக்கொள்ளலாம். அதனால் ஐசுவரியவானாவான். 3. 6. 3. 24.

146. கொல்லு! அடி!! என்பது மனித சுபாவம். சாந்தமாக்கு! அது போய்விட்டது!! எனச் சொல்லுவது தேவர்கள் வழக்கம். 3. 8. 1. 15.

147. ஸ்திரீகள் நட்சத்திரங்கள். தேவலோகம் செல்லுபவர்களுக்கு நன்மை செய்வார்கள். புருஷர்களுக்கு இவர்கள் நட்சத்திரங்கள் போலாவார்கள். 6. 5. 4.. 9.

148. சாவித்திரி என்றால் பூமியாகும். இச் சாவித்திரியிலேயே நாம் கடைசியில் வரவேண்டுமாதலால் சாவித்திரியையே சிறந்ததென்பார்கள். 12. 1. 5. 23.

149. கத்தி என்பது வச்சிராயுதம். வச்சிராயுதம் என்பது சத்தியாகும். இச் சக்தியால் பூமி யென்னும் ஐசுவரியத்தை ஒருவன் அடையலாம். 7. 3. 1. 19.

150. அசுவினிகள் தேவர்களின் வைத்தியர்கள். சரஸ்வதி குணமாகும் மருந்து. இந்திரன் இந்திரியமாகும். 1. 2. 7. 2. 3.

151. தேவர்கள் தங்களைச்சுற்றிலும் நெருப்பை வைத்து அசுரர்களை துரத்துவதுபோல் யக்ஞம் செய்பவர்கள் சத்துருக்கள் தங்களிடம் வராமலிருக்க ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். 12. 9. 3. 9.

152. பூமியின் கீழ் பாகத்திலிருந்து இராட்சதர்கள் நம்மை அழித்துவிடுவார்கள் என எண்ணி அக்கினியின்

ரசமான தங்கத்தை தேவர்கள் கீழேவைத்து அவர்களைத் துரத்தினார்கள். 14. 1. 3. 14.

153. நீங்கள் கொடும் சித்தமுடனாவதே காயத்திரியைப்பற்றுவதாகும். திடமுயற்சியுடனாவது திருஷ்டுபு சந்தஸில் தோய்வதாகும். பசுமக்கள் ஐசுவரியம் பெறுவதே சகதி சந்தஸில் சாய்வதாகும். 13. 2. 6. 4. 56.

154. அக்கினி உலகத்தின் சாரமாகும். தங்கக் கைகளுள்ளவன் நானாவிதமாய் விரிந்துள்ளான். ஆகாயத்தினுள்ள அவன் வன்மையை சூரியனைக் காணலாம். பூமியிலே அனலாயுள்ளான். வாயுவிலே காற்றாயுள்ளான். 3.

155. மனிதனே நடமாடும் யஞ்ஞமாகும். அவன் தலை சோமபந்தலாகும். அவன் வாய் அஹவனீயமாகும். குடுமி யக்ஞ கம்பமானால் அவன் கைகள் அக்கினி திரியம்மார் கலியமெனப்படும். வயிறு புரோகிதர்கள் உட்காரும் சதஸாகும். கார்ஹபத்தியம் கால்களாகும். சாவித்திரியால் மூடப்பட்டு ஆகுதியளித்தால் மனம் நினைவு என்னும் இருபசுக்களை முன்வைத்துச் செல்லுவான். 3. 5. 3. 36.

156. நீ உன்னுடைய சங்கற்பத்தையோ, இருதயத்தையோ அல்லது உன் மனது கண் முதலியவைகளை தொடர்ந்துகொண்டு ஆதியில் ரிஷிகள் சென்ற இடத்திற்கு செல்லவும். 9. 5. 1. 45.

157. அக்கினி தேகம். திருவிருத்தசாமனே அவன் தலை. காயத்திரி, அவன்கண். பிரஹத்தும், இரதான்தரமும் அவன் சிறகுகள். சந்தஸு அவன் அங்கங்களா

கும். தோத்திரம் அவன் பெயர். யஜனயஜனீயம் அவன் வால். 6. 7. 2. 6.

158. பௌர்ணமையிலே தேவர்கள் அவனை அழுத்துகிறார்கள். அதற்குப் பின்வரும் தினங்களில் அவன் சலத்திலும் செடியிலும் நுழைவான். அப்பொழுது சந்துக்கள் அவனைப் பருகும். பிறகு அமாவாசையினின்று ஜந்துக்களிடமிருந்து அதை கிரகித்துக்கொள்ளுவான். 11. 1. 5. 3.

159. என் ஆன்மாவிலே எல்லா உலகங்களையும் வைத்தேன் எல்லா உலகங்களில் என் ஆன்மாவை வைத்தேன். எல்லா வேதங்களையும் பிராணன்களையும் என் ஆன்மாவில் வைத்தேன். என் ஆன்மாவை எல்லாவேதங்களிலும் பிராணன்களிலும் வைத்தேன். 12. 3. 48.

160. அக்கினியே சண்டையில் ஜயிப்பவன். என்மேல் படை எடுத்து வருபவனையும் திருடர்களையும் கொள்ளைக்காரர்களையும் உனது வாயில் நான் நுழைக்கிறேன். உனது இரு கொம்புகளால் அவர்களைத் தூரத்தி பற்களால் அவர்களைக் கடித்து உனது தொண்டையிலே சத்துருக்களை விழுங்கவும். அக்கினியே என்னை வெறுப்பவனையும் எனக்குச் சதி செய்பவனையும் நீ எரித்துவிடவும். நமக்கு எதிரியானால் அவனை உணவாகப் புசித்துவிடவும் என்பதே தேவவாணியாகும். 6. 6. 3.

## 86. அசுவினி கதை

ஒரு காலத்தில் சியாவன அங்கிரஸன், சர்யாதமான வனென அரசனிருக்கும் சமீபத்தின் ஒரு நிலத்திலே சாய்ந் திருந்தான். அரசன் குழந்தைகள் அவனைக் கல்லினுலும் களிமண்ணினுலு மடித்து விளையாடினர்கள். இதனுல் முடவன் மனம் கசியவே அரச குடும்பம் துக்கமுடனுயிற்று. அரசன் இதன் காரணத்தை அறிந்து தனது பெண்ணுன சுகன்யை முடவனுக்களித்து மனங்குளிரச் செய்தான். அவனும் அவளுடன் வாழ்ந்துவருங்கால் ஒரு சமயம் அசுவினிதேவர்கள் (இருவர்) இவளைத் தனிமையாக கண்டு நீ ஏன் இந்த முடவனுடனிருக்கவேண்டும் என கேட்டார்கள். அவள் முடவனிடம் யோசனைசெய்து நீங்களும் குறையும் கூற்றமுள்ளவர்கள். ஆதலால் ஒரு முடவனைவிட்டு குறைவாயுள்ளவனை ஏன் அடையவேண்டுமென்றுள். எங்கள் குறை என்னவென அவர்கள் கேட்கவே முடவனை காளைப் புருஷனுக்கினுல் சொல்லுவேன் என்றுள். அவர்கள் அப்படி செய்தவுடன் உங்கள் குறையை யறிய வேண்டுமானுல் குருக்ஷேத்திரம் செல்லவுமென்றுர். அங்கு சென்று தேவர்கள் யக்ஞசாலையை, பஹிஷ்பாவன மந்திரம் சொல்லும்பொழுது அடைந்தவுடன் நீங்கள்யக்ஞத்திற்கு வரலாகாது என்றுர்கள். தலையில்லாமல் நீங்கள் யக்ஞம் செய்தால் பிரயோசனமில்லை என சொல்லவும் அசுவினிகளை வரவேற்று இரு கிரகமளித்து இரண்டு அதர்வ புரோகிதர்களாய்ச் செய்தவுடன் யக்ஞத்திற்கு தலையளிக்கப்பட்டது. அப்பால் அவர்கள்

அவன் குறையான மனிதர்களிடம் தானகவே சென்று சிக்த்ஸை செய்வதின் குற்றத்தைக் கூறினர்கள். 1. 5. 1.

## 87. ஆதி வருணன்.

பிருகுவானவன் தந்தையைவிட அதிகம் படித்து விட்டதாக எண்ணினன். நீ நாலாபக்கமும் சென்று உற்று நோக்கி இங்கு வரவும் என்றார். அவன் நான்கு திக்குகளிலும் கவனித்து ஒன்றும் புரியாமல், எனக்கு ஒன்றும் புரியவில்லையே என அடியிற் கண்டவாறு கேட்டு விடையளிக்கும்படி வணங்கினன்.

1. அப்பா! நான் கிழக்குத் திசையிலே மனிதர்கள் மனிதர்களைத் துண்டம் துண்டமாய்ச் செய்து அங்கங்களை தனித்தனியாய்ப் பிரித்து பங்கு செய்துகொள்ளுகிருர்கள். கொடுமை, கொடுமை! எனப்பா இப்படி என்றேன். பழிக்குப் பழி செய்கிறோம். இச் சூட்சமத்தை உங்கள் தந்தையே யறிவார்.

2. தெற்கு திசையில் மனிதர்கள் பரஸ்பரம் அங்கங்களை அறுத்துக்கொள்ளுகிருர்கள். அதுவும் எனக்குப் புரியவில்லை.

3. மேற்குத் திசையிலே மனிதர்கள் ஆனந்தமாயுட்கார்ந்து பரஸ்பரம் புசிக்கிருர்கள்.

4. வடபுறத்தில் பெரிய சத்தமுடன் மனிதர்கள் பரஸ்பரம் புசிக்கிருர்கள்.

கிழக்கு திசையில் கண்ட மரங்களைவெட்டிய யஜ்ஞத்தில் போட்டு பழிக்குப் பழி வாங்கப்படும் விறகுகள்.

தென்திசையில் பார்த்தது பிராணிகளாகும். பாலைப்பருகுவதே பரஸ்பரம் அறுத்துக்கொள்வதாகும். மேற்குத் திசையில் பார்த்தது செடி கொடிகளாகும். அவைகள் தங்கள் சாம்பல்களையே தின்றுகொண்டு தழைத்தோங்குகின்றன. வடபுறத்தில் கண்டது சல்மாகும் என பதில் அளித்து நீ ஈசானியத்தில் கண்ட அழகான பெண் நம்பிக்கை என்னும் பெயருடையவள். மிகவும் ரூபலாவண்ணியமுள்ள பெண் நம்பிக்கையற்றவள் என்னும் நாமந் தரித்தவள். அவர்கள் நடுவிலுள்ள கருப்பு மனிதன் மஞ்சள் கண்களோடு இருக்கிறனே அவன்தான் கோபம் என அழைக்கப்படுவன் எனக் கூறியவுடன் மகனும் கர்வமன்னியிலானன்.

## 88. புருஷமேதம் உண்மை.

புருஷமேதம் என்றால் என்ன? புருஷன் என்றால் உலகத்திலுள்ள ஒவ்வொரு உணர்வுடனை வடிவத்திற்குப் பெயர். அந்தந்த வடிவத்தை அடைய அதற்கேற்ற பொருள்களில் பயிற்சியாகும் என்னும் யக்ஞத்தை செய்வதற்கே புருஷமேதம் எனப் பெயர்.

அந்தந்த வடிவத்திற்கு எந்தெந்த பொருள்களை யக்ஞம் செய்யவேண்டும்? அவைகளின் பயனென்ன?

செல்வகுணபலியால் க்ஷத்திரியனாகவும், அந்தகாரத்தால் திருடனாக்வும், விருப்பத்தால் தேவதாசியாகவும், கானத்தால் நடிகனாகவும், சதாபேசுவதால் விகடனாகவும், ஆயுதத்தால் போர்புருஷனாகவும், கோபத்தால் அவசரப்படுபவனையும், கடோரசொல்லுவதால் துக்கமுள்ளவனாக

வும், எதிராளியால் நிந்தனை செய்பவனுயுமாகலாம். விழித்திருப்பதால் செல்வபுருஷனுகவும் தூங்குவதால் துரதிர்ஷ்டனுகவும் செலவு அதிகரித்தால் சீரழிபவனுகவும் பிச்சை எடுப்பவன் பசியுள்ளவனுகவும், நெருப்பால் கொழுத்தவனுகவும், வானத்தால் வழுக்கைத்தலையுடனுகவும் மஞ்சக் கண்களால் சூரியனுகவும் குஷ்டரோகியால் சந்திரனுகவுமாகலாம். 1. 3. 6.

# ஜம்புநாதன்
# தமிழ் நூல்கள்

1. யோகாசனம்
2. கடோப நிஷதம்
3. உபநிஷதக் கதைகள்
4. சதபத பிராமணம்
5. மாஜினி சரித்திரம்
6. சிரத்தானந்தர் சரித்திரம்
7. ரோஜாத்தோட்டம்
8. சீன வேதம்
9. திரிமூர்த்தி உண்மை

ஜம்புநாதன் புஸ்தக

14, பள்ளியப்பன் தெருவு,

சவுகார் பேட்டை

செ

Kesari Printing Works, Madras.